
www.padippakam.com

SAMARASAM TAMIL FORTNIGHTLY

# சமரசம்

Rs. 5.00 மே, 1-15 1997



# ஒடுங்குகிறது மனித நேயம்!
# ஓடுகிறது இரத்த ஆறு!

மூன்றாம் உலகப் போர்
அறிவிக்கப்படவில்லை.
ஆயினும்
ஆயிரக்கணக்கான
மனித உயிர்கள்
பலியாகிக் கொண்டிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# முஸ்லிம் பற்றி வான்மறை

- 7 -

"இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறைவனுக்கு அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்!

மேலும்,

நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணமடைய வேண்டாம்!''

(குர்ஆன் 3:102)

படிப்பகம்

www.padippakam.com

சுரம் 17 • மலர் 22

சொல்வதைத் தெளிவாக நேரடியாகச் சொல்லுங்கள்

# பரவியது நெருப்பு; பதறியது நெஞ்சம்!

ஹஜ்ஜின் போது மினாவில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்து உலகம் முழுவதிலும் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தி விட்டது. ஒன்றல்ல, இரண்டல்ல, ஏறத்தாழ ஒன்ணேகால் லட்சம் கூடாரங்கள் அடியோடு எரிந்து சாம்பலாகி விட்டன. நூற்றுக்கணக்கான புனிதப் பயணிகள் தங்கள் இன்னுயிர்களை இழந்து விட்டார்கள். ஆயிரக்கணக்கானபேர் காயம் அடைந்துள்ளனர். இறந்தவர்களில் பாதிக்கும் மேல் இந்தியர்கள் என்பதை அறியும் போது வேதனை பல மடங்கு அதிகமாகிறது.

ஒரு கூடாரத்தில் சிலிண்டர் வெடித்ததினால் ஏற்பட்ட தீ விபத்து, மணிக்கு 36 கி.மீ. வேகத்தில் வீசிய காற்றினால் அடுத்தடுத்த கூடாரங்களுக்கும் தீ வேகமாய்ப் பரவி ஒரு பெரும் விபத்து சம்பவித்து விட்டது. இந்த தலையங்கம் எழுதப்படும் வரை (24.4.97) இறந்தவர்களின் சரியான எண்ணிக்கை நமக்குக் கிடைக்கவில்லை. 300 பேர் வரை இறந்திருக்கலாம் என்று சவூதி அரசு அறிவித்துள்ளது; ஆயினும் உயிர் இழப்பு அதைவிட கூடுதலாகவே இருக்கும் என்பதை ஊகித்தறியலாம். எரிந்து போன கூடாரங்களில் இருந்த உடமைகளின் மதிப்பும் பல கோடி ரூபாய்கள் இருக்கும் என்று கணிக்கப்படுகிறது.

ஹஜ்ஜின் போது தீ விபத்து ஏற்படுவது இது முதல் முறையல்ல. 1975 இல் ஏற்பட்ட தீ விபத்தின் போது 4000-க்கும் அதிகமானோர் இறந்தார்கள். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, மினாவில் தீப்பிடிக்காத கூடாரங்கள் அமைக்கப்படும் என்று சவூதி அரசு அறிவித்தது. அந்த அறிவிப்பு செயல்வடிவமும் பெற்றது. அப்படியிருந்தும் இப்படி ஒரு விபத்து ஏன் ஏற்பட்டது என்று புரியவில்லை.

ஆனாலும் தீ விபத்து ஏற்பட்ட உடனே அதை அணைக்கவும், மேலும் பரவாமல் தடுக்கவும் சவூதி அரசு மின்னல் வேகத்தில் செயல்பட்டது. ஹாஜிகளில் ஒரு பகுதியினர்தான் மினாவுக்கு வந்திருந்தனர்; மற்றவர்கள் மினாவுக்கு வெளியிலேயே தடுக்கப்பட்டனர்; சில மணி நேரங்களுக்குள்ளாகவே தீயும் அணைக்கப்பட்டது; போர்க்கால அடிப்படையில் புதிய கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

இதுபோன்ற விபத்துகள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க என்ன செய்யலாம்?

சவூதி அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு விதிமுறைகளை புனிதப் பயணிகள் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். விரைவில் தீப் பிடித்துக் கொள்ளக் கூடிய பொருள்களை எடுத்துச் செல்ல தடை இருந்தும், புனிதப் பயணிகளில் பலர் அதைப் பொருட்படுத்தாமல் மண்ணெண்ணெய், ஸ்டவ் போன்றவற்றை எடுத்துச் செல்கின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும்.

வாழ்நாளில் ஒருவர் ஒருமுறை ஹஜ் செய்தாலே போதுமானது என்றுதான் இஸ்லாம் கூறுகிறது. ஆனால் பலர் ஒரு தடவைக்கும் அதிகமாக ஹஜ் செய்ய முற்படுகின்றனர். இதுவும் தவிர்க்கப்பட வேண்டும்.

சவூதி அரசு 'கோட்டா' முறையை கடுமையாகப் பின்பற்ற வேண்டும். ஒரு நாட்டில் இருந்து இத்தனை பேர்தான் வரலாம் என்ற விதிமுறையை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தி, அதிக நெரிசலைக் குறைக்க வேண்டும்.

உயிர் இழந்த இந்திய ஹாஜிகளுக்கு மத்திய – மாநில அரசுகள் உரிய இழப்பீடு வழங்கி, ஹாஜிகளின் குடும்பங்களுக்கு உதவ வேண்டும். புண்ணிய பூமியில் தங்களின் இன்னுயிர்களை இழந்த புனிதப் பயணிகளுக்கு வல்ல இறைவன் சுவனத்தின் அருட் பேறுகளை வாரி வழங்க வேண்டும் என்று மனம் உருகிப் பிரார்த்திக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

'மினா' துயரம்

# "அந்த நெருப்பு தீர்ப்பு நாளை நினைவூட்டியது!"

*இவ்வாண்டு ஹஜ்ஜின் முதல்நாளான துல்ஹஜ் 8-ம் நாள் காலை மினாவில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக சுமார் 343 பேர் மரணமடைந்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றனர். சுமார் 70,000 கூடாரங்கள் தீயில் கருகின. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. இந்த அசம்பாவிதம் தொடர்பாக இதனை நேரில் கண்ணுற்ற சில ஹாஜிகளை (மக்காவிலேயே) சந்தித்து அவர்களது கருத்துகளைக் கேட்டோம். அவர்களது உணர்வுகளை வார்த்தைகளில் வடிக்கிறோம்.*

**சிதம்பரத்தைச் சேர்ந்த மௌலவி.முஹம்மது சித்தீக் மதனி** அவர்கள் கூறுகையில், "ஹஜ் கடமையை நிறைவேற்றுவதன் மூலமாக இறைவனது நெருக்கத்தைப் பெறும் நோக்குடன் மக்கள் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வந்திருந்தனர். முதல் நாளன்று காலை ஒரு கூடாரத்திலிருந்து சிறு புகை மண்டலம் ஏற்பட்டது. மிகக் குறுகிய நேரத்திற்குள் அது பரவலாக சுமார் 70,000 கூடாரங்களை நாசப்படுத்தியது. இப்படிப்பட்ட சூழலிலும் தமிழகத்தைச் சேர்ந்த ஹாஜி ஒருவர் "இந்த விபத்திற்காக நான் அல்லாஹ்வை நிந்தனை செய்யமாட்டேன். இதனை அவன் ஒரு சோதனையாக நமக்கு ஆக்கியிருக்கலாம்," என்று கூறினார். அவர் தனது சகோதரியை காணாமல் சுமார் 4 மணி நேரங்கள் தேடியலைந்து கொண்டிருக்கும் போது இதைக் கூறினார். இன்னொரு ஹாஜி கூறுகையில் "இந்த கஅபாவைப் பார்த்த கண்களால் வேறு செயல்களைப் பார்க்க என் கண் கூசுகிறது " என்றார். மறுநாள் அரஃபா பெருவெளியில் ஹாஜிகள் அதிகமதிகம் இறைவனை நினைவு கூர்ந்தவர்களாக அவனிடத்திலே அழுது பிரார்த்தனை செய்தவர்களாக இருந்தனர். நாள் முழுவதும் ஒரு முறை இரு முறையல்ல பல முறை இறைவனிடத்தில் அவன் விரும்புவதுபோல பிரார்த்தனை செய்து கொண்டேயிருந்தனர். மேலும் அன்றைய தினம் மஹ்ஷர் மைதானத்தை நினைவு படுத்துவதாக அமைந்திருந்தது. இன்றைய தினத்தில் உலகத்தின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் மக்களை இங்கே ஒன்று திரட்ட முடிந்த இறைவன் ஏன் நம்மை மறுமையில் மஹ்ஷர் மைதானத்தில் உலக மக்கள் அனைவரையும் ஒன்று திரட்ட முடியாது? என்ற சிந்தனை மேலோங்கியது...."

**சென்னையைச் சேர்ந்த சாதிக் பாஷா** கூறுகையில், "இந்த விபத்து பற்றி மக்களிடமிருந்தும், செய்திகளிலும் சில எதிர்மறைக் கருத்துகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் சிறு சிறு இழப்புகளின் மூலம் அல்லாஹ் பல்வேறு நன்மைகளை அளிக்கிறான். இந்த விபத்து ஹாஜிகளிடத்தில் இறைவன் மீது நிராசையை ஏற்படுத்தவில்லை. மாறாக அவர்கள் அதிகமதிகம் இறைவனை துதித்தவர்களாக அவன் புகழ்பாடியவர்களாக, அவனது வல்லமையை போற்றியவர்களாக, இறைவனைத் தவிர மற்றெவரையும் அழைக்காதவர்களாக அவனிடம் மட்டுமே உதவிகோரிப் பெறக்கூடியவர்களாக இருப்பதைக் காண முடிந்தது. ஹஜ் கடமையை நிறைவேற்றுவதில் அவர்கள் சோர்வடையவில்லை. அந்த நெருப்பு இறுதித் தீர்ப்பு நாளின் நெருப்பை ஞாபக மூட்டியது. அல்லாஹ்வின் வல்லமையை நமக்கு உணர்த்திற்று, மனிதன் எவ்வித சக்தியுமற்றவன் (Helpless) என்பதையும் நமக்கு உணர்த்திற்று" என்றுரைத்தார்.

**ஆந்திர மாநிலம் கடப்பாவைச் சேர்ந்த ரஹ்மதுல்லாஹ்** கூறுகிறார், "உயிர், பொருட் சேதம் அதிகம் ஏற்பட்டது. கணவன், மனைவி, தந்தை, மகன், தாய், பிள்ளை... தனித்தனியாகப் பிரிந்தனர். காணாமற் போனவர்களைத் தேடும் வேளையில் கூட இறைவனது மேன்மையை போற்றியவர்களாக அவனிடம் உதவி கோரியவர்களாக இருந்தனர். புதிதாக வந்தவர்கள் தங்களது பணத்தை தங்கள் உறவினர்களிடமோ அல்லது குழுத் தலைவர்களிடமோ (முஅல்லிம்) கொடுத்து வைத்திருந்தனர். பிரிந்த வேளையில் பணம் போய்விட்டதே என்று கவலைப்படாமல் நாம் ஹஜ்ஜை முழுமையாக நிறைவேற்றிட எந்த தடங்கலும் வந்துவிடக் கூடாதே என்றே கவலைப்பட்டனர்."

**கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த ரஹ்மதுல்லாஹ்** கூறினார், "இந்த சம்பவம் இரவில் நடந்திருந்தால் உயிர் மற்றும் பொருட்சேதங்கள் கணக்கிலடங்காதவையாகியிருக்கும். அல்லாஹ்வின் பெருங்கருணையினால் பகலில் ஏற்பட்டு சொற்ப நஷ்டத்துடன் முடிந்தது. ஹஜ்ஜில் ஹாஜிகள் கஷ்டப்படுவது என்பது அவசியம். ஹஜ் கடமை ஒரு அறப்போரைப் (ஜிஹாது) போன்றதே. ஆரம்பகாலங்களில் ஹஜ்ஜுக்கு வருபவர்கள் உயிரைப் பணயம் வைத்து பல்வேறு சோதனைகள், துன்பங்கள், கஷ்டங்களைத் தாங்கியவர்களாக வந்தனர். ஆனால் இப்பொழுதோ தாங்கள் வசிக்கும் ஊர்களிலிருந்தே விமானம் மூலமாக எளிதாக பறந்து வந்து விடுகின்றனர். அல்லாஹ் அவ்வளவு எளிதாக்கி வைத்துள்ளான். இன்னொரு சிந்தனைக்குரிய விஷயம் - மரணம் நிச்சயிக்கப்பட்டது. காலம், இடம் நிர்ணயம் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட மரணம் ஒரு சிறந்த மரணமாக அவர்களுக்கு அமைந்துவிட்டது. அல்லாஹ் இப்படிப்பட்ட சோதனைக் காலங்களில் மனிதனது உறுதிப்பாட்டை (இஸ்திகாமத்) கவனிக்கிறான். ஆக ஒரு முஸ்லிம் எந்நேரமும் இறைவனுக்கு உவப்பான செயல்களையே செய்ய வேண்டும்."

**ஹைதராபாத்தைச் சேர்ந்த யூசுப் ஹஷ்மி** கூறுகிறார் "பத்திரிகைகளில், எத்தனையோ சம்பவங்களைப் பார்க்கிறோம். விளைவுகள், தாக்கங்கள் எதிர்மறையாகவோ அல்லது நேர்மறையாகவோ உணரப்படுகின்றன. எந்த மக்கள் இறைவனது அருளில் நிராசை அடைந்தவர்களாக இருக்கிறார்களோ அல்லது பலகீனமான இறைநம்பிக்கை கொண்டவர்களாக

படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறார்களோ அல்லது ஈமானின் பொக்கிஷத்தை விட்டும் தூரமாக இருக்கிறார்களோ அவர்கள் இவ்விபத்து பற்றிய உலகாயத விளைவுகளை மட்டுமே விமரிசனம் செய்வார்கள்.

ஆனால் ஒரு முஃமினுடைய உள்ளத்தில் குறிப்பாக மக்களை இறைவழியின் பக்கம் அழைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இதில் பல்வேறு பிடிப்பினைகள் இருக்கின்றன. அதுபற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்ப்பதன் காரணமாக நமதுள்ளம் இறைவனது அருளில் நிராசையடையாது. அல்லாஹ் மீது உள்ள அன்பு அதிகமாகும். அல்லாஹ்வின் வல்லமையை உணர்ந்து நமது இறை நம்பிக்கை வலுப்படும். மேலும் நமது பணியை வரக்கூடிய காலங்களில் இலேசாக்கி வைக்கும். அல்லாஹ் இவ்விபத்தில் மரணமடைந்தவர்களை மன்னித்து அவர்களுக்கு அழகிய சுவனத்தையும், அவர்களது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் அழகிய பொறுமையையும் தந்தருள்வானாக.

ஹதீஸ்களின் அடிப்படையில் இவர்கள் மறுமையில் இஹ்ராமுடனேயே எழுப்பப்படுவார்கள். அவர்கள் ''ஷஹீது'' எனும் அந்தஸ்தை நற்சான்றை பெற்றுக் கொண்டார்கள்.

மார்க்க அறிவு குறைந்த சாதாரண முஸ்லிம் கூட சோதனை வரும்போது, அனைவரையும் விட்டுவிட்டு ஓர் இறைவனை மட்டுமே அழைக்கிறான். இதுதான் இஸ்லாத்தைப் பின்பற்றுவதின் சிறப்பு. உலகளாவிய பத்திரிகைகள், வானொலிகள், CNN, ABC, B.B.C. Europe T.V. கள் போன்ற T.V. மீடியாக்களெல்லாம் தங்களது நேயர்களை/வாசகர்களை திருப்திப் படுத்தவேண்டும் என்ற வணிக நோக்குடன் செய்திகளைச் சேகரித்தனர் ஒலி/ஒளி பரப்பினர். இது உலகத்தில் ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. சவூதி அரேபியாவில் சின்னஞ்சிறிய நகரில் இலட்சக் கணக்கான மக்கள் ஒன்று கூடுகின்றனர். தீ விபத்து, பலர் மரணம் மரணம் அடைகின்றனர். இதனைப் பார்த்த மக்களுக்கு ஒரு ஆர்வம் வந்துவிட்டது TENT CITY (கூடாரங்களின் நகரம்) என்றால் என்ன? ஹஜ் என்றால் என்ன? ஏன் மக்கள் ஆண்டு தோறும் கூடுகிறார்கள்? எப்படி விபத்து ஏற்பட்டது? என்ற கேள்விகள் அவர்களது உள்ளத்தில் ஏற்படுகின்றன.

இது இஸ்லாத்தின் ஒரு தூணை (ஹஜ்) தெரிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம்... நாம் நம்முடைய அனைத்து ஆற்றல்களையும், செல்வங்களையும் செலவிட்டாலும் இச்செய்தியை எல்லா மக்களிடமும் கொண்டு சேர்க்க இயலாத நிலையில் அல்லாஹ் இஸ்லாத்தின் செய்தியை இச்சம்பவத்தின் வாயிலாக உலகமக்கள் அனைவருக்கும் சென்று சேரும்படி செய்துவிட்டான். C.N.N. போன்ற T.V. கள் 254 நாடுகளில் ஒளிபரப்பப்படுகின்றன. இதனைப் பார்த்தவர்கள் ஹஜ் பற்றி, இஸ்லாம் பற்றி தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக பல நாட்டுத் தலைவர்கள் தங்களது மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடனோ அல்லது சவூதி அரசுடனான தனது உறவை வலுப்படுத்திக் கொள்வதற்கோ இரங்கல் செய்திகளை அனுப்பிய வண்ணம் இருந்தனர். இந்த செய்திகளெல்லாம் அந்த அந்த நாட்டு மீடியாக்கள் பரவலாக Focus செய்தன. அரசின் தலைவர் இரங்கல் தெரிவிக்கும் போது மக்கள் ஏன்? எதற்கு? என சிந்தனை செய்கின்றனர்.. ஹஜ் பற்றி தெரிய ஆர்வம் கொள்கின்றனர்.

இப்படி அல்லாஹ் தனது அளப்பெரும் வல்லமையால் நாம் அணுகமுடியாத மக்களிடத்தில் இஸ்லாத்தின் செய்தியை சேர்த்து விட்டான்.''

சென்னையை சேர்ந்த அதாவுல்லாஹ் கூறும்போது: ''உலகில் ஒரு குழந்தை பிறக்கும்போது எப்படி Helpless ஆக உள்ளதோ அதேபோன்ற நிலை அன்று ஏற்பட்டது. மக்கள் Helpless ஆக இருந்தனர். ஹஜ்ஜின் நோக்கம் என்ன? வாழ்வின் நோக்கம் என்ன? ''இறைத் தண்டனையிலிருந்து நரக நெருப்பிலிருந்து உங்களையும் உங்களது குடும்பத்தாரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்'' என்று திருமறைக் கூற்றை மெய்ப்பிக்கவே மக்கள் தங்கள் பொருள்களை செலவு செய்து ஹஜ் செய்கின்றனர். அரஃபாவிலே மக்கள் அழுதழுது துஆவை நீட்டி செய்தனர். அவர்களது உள்ளத்தில் இந்நெருப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்... அல்லாஹ் நிச்சயமாக இவர்களது மன்றாடுதல்களை அவனுக்கு பிடித்தமான செயல்களை - ஏற்றுக் கொண்டு அவர்களை மன்னித்திருப்பான். இதற்காக ஷைத்தான் வெட்கப்பட்டிருப்பான். எவரது உள்ளத்தில் மறுமை பற்றிய சிந்தனை சிறிதளவாவது இருந்ததோ அவர்களிடம் இச்சம்பவம் அவர்களை சீர்திருத்த துணையாக இருக்கும். இறைவன் கிருபை செய்வானாக.''

தொகுப்பு: கே.ஜலாலுதீன்

## 'துப்பாக்கி முனையில்' குடியிருப்புகள்

இஸ்ரேல், கிழக்கு ஜெருசலேம் பகுதியில் 6500 யூத குடியிருப்புகளை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இஸ்ரேலிய தீவிரவாதிகள் பணியிடையே ஓய்வெடுக்கும் காட்சி இது.



இந்த குடியிருப்புகள் அமைக்கும் பணிகளை எதிர்த்து அரபு நாடுகளும் பலஸ்தீன தலைவர் யாசிர் அரபாத்தும் கடுங் கண்டனம் தெரிவித்துள்ளார்கள். இது அமைதி ஒப்பந்தத்திற்கு எதிரானது என்று அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

நியாய - அநியாயங்களை கேட்கும் நிலையில் யூதர்கள் என்றும் இருந்ததில்லை. படைபலத்தால் மக்கள் குரலை நசுக்க முடியாது என்பதை இஸ்ரேல் உணரத்தான் போகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# உறவினர்களுக்கு

மௌலானா ஜலாலுத்தீன் உமரி

**உறவினரிடம் நல்ல முறையில் நடத்தல்:**

திருக்குர்ஆன் கூறுகிறது: ''உறவினர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்!''

பெற்றோர்களைப் பற்றி குறிப்பிட்ட பிறகு தொடர்ந்து உறவினர்களைப் பற்றியும் குர்ஆன் கூறுகிறது.

இது எதைச் சுட்டிக் காட்டுகிறதெனில், பெற்றோர்க்குப் பிறகு உறவினர்களின் கடமைக்குத்தான் முதலிடம். உறவினர்களின் தொடர்பு பெற்றோர் மூலமாகத்தான் ஏற்படுகிறது. ஆகையால் முதலில் பெற்றோர்கள்; அவர்களுக்குப் பிறகு அவர்களுடன் - எந்த மனிதர் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறாரோ அவரது உரிமை அந்த அளவுக்கு அதிகரிக்கிறது.

உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது இரத்த பந்தத்தின் அடிப்படையிலாகும். குர்ஆனில் அது பற்றி அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குர்ஆன் - ஓரிடத்தில் இறைநம்பிக்கையாளர்களின் பண்பு நலம்பற்றி கூறும்போது -

''அவர்கள் எத்தகைய நடத்தையுடையவர்களெனில், எந்தெந்த உறவு முறைகளைப் பேணி நடக்கும்படி அல்லாஹ் கட்டளையிடுகிறானோ அந்த உறவுமுறைகளைப் பேணி நடக்கிறார்கள். மேலும் தம் அதிபதிக்கு அஞ்சுவார்கள். மேலும் கடுமையான முறையில் தம்மிடம் கேள்வி கணக்குக் கேட்கப்படுமோ என்று கடும் அச்சம் கொண்டிருக்கிறார்கள்'' (13: 21)

இரத்தபந்த உறவின் மூலம் சமூக மக்கள் அனைவர் வாழ்விலும் மகிழ்வு பொங்குகிறது. எங்கு இந்தப் பண்பு பேணப்படவில்லையோ அங்கு வாழ்க்கை சீர் குலையத் தொடங்குகிறது!

இதனால்தான் இரத்த பந்த உறவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது!

ஸல்மான் இப்னு ஆமிர் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:

ஓர் ஏழைக்கு (உறவு முறையில்லாத நிலையில்) தர்மம் செய்வது ஒரு தர்மம் மட்டுமே! ஆனால் அதே தர்மம் உறவுடைய ஓர் ஏழைக்கு வழங்கப்பட்டால் அது தர்மமாகவும் இரத்த பந்தமாகவும் ஆகிறது''. (திர்மிதி)

கருத்து இதுதான்: உறவினர்களுக்காகச் செலவு செய்வது இரு மடங்கு நன்மை கிடைக்க வழி வகுக்கிறது. ஒருவகையில் அது ஒரு பொதுவான தர்மம். மறுவகையில், உறவினர்களைக் காத்ததாகவும் ஆகிறது.

மனிதன் உறவினர்களுடன் இயல்பான உறவுநிலையை உணர்கிறான் என்பது ஓர் உண்மை! இதுபோல சாதாரணமான நிகழ்ச்சிகளினால்கூட சில உறவுமுறைகளிடையே மனத்தாங்கலும் பிணக்கும் ஏற்படுகின்றன. உறவுகள் மறையத் தொடங்குகின்றன என்பதும் ஓர் உண்மையே!

இந்த உறவுகளைச் சீர்குலையவிடக் கூடாது. அவற்றை இணக்கமாக்கி வைப்பதற்கான சாத்தியமான முயற்சிகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும். அவற்றுள் சிறந்தமுறை யாதெனில் உறவினர்களுடன் நல்லவிதமாக நடந்து கொள்வதாகும் என்று நபிமொழிகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''இரத்தபந்த உறவைப் பேணி நடப்பவன் யாரெனில், உறவினர் அவனுடன் நல்லவிதமாக நடக்கும்போது உறவைப் பேணுகிறானே அவனல்ல; உண்மையில் இரத்தபந்த உறவைப் பேணுபவன் யாரெனில், உறவுகள் முறிந்துபோனாலும் அவற்றைப் பேணி காக்கிறானே அவன்தான்!'' (புகாரி, அபூதாவூத்)

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர் கேட்டார்: அல்லாஹ்வின் தூதரே! எனக்குச் சில உறவினர் உள்ளனர். நான் அவர்களுடன் இணைந்து வாழவே விரும்புகிறேன். ஆனால் அவர்களோ என்னுடனான உறவைத் துண்டிக்கின்றனர். நான் அவர்களுக்கு உபகாரம் செய்கிறேன். ஆனால் அவர்கள் எனக்குத் தீங்கிழைக்கின்றனர். நான் அவர்களைப் பொறுத்துக் கொள்கிறேன். ஆனால் அவர்கள் என்னுடன் மடத்தனமாக நடந்து கொள்கின்றனர்''.

இதனைக் கேட்டதும் நபியவர்கள் சொன்னார்கள்: ''நீர் சொல்வது உண்மை எனில், நீர் அவர்களின் முகத்தில் கரி பூசிவிட்டீர். நீர் இந்த நடத்தையை மேற்கொள்கிற வரையில் அல்லாஹ்வின் சார்பில் ஓர் உதவியாளர் உம்மோடு இருந்து கொண்டிருப்பார்''. (முஸ்லிம்)

**அநாதைகளுடன் நல்லவிதமாக நடப்பது:**

பெற்றோர் மற்றும் உறவினர்களின் உரிமைகளுக்குப் பிறகு சமுதாயத்தில் உள்ள ஏனைய - தேவையுடையோர், பலவீனமானோர் ஆகியோருடன் நல்லவிதமாக நடக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது. இத்தொடரில் அனைத்திற்கும் முதலில் அநாதைகள், ஏழைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள்தாம் சமுதாயத்தில் மிகவும் பலவீனமான பிரிவினர்கள்.

''மேலும் அநாதைகளுடனும் ஏழைகளுடனும் நல்லவிதமாக நடந்து கொள்ளுங்கள்''

நிழல்போல் பாதுகாத்து வந்த தந்தையை இழந்து அநாதையாகிவிடும் பச்சிளங்குழந்தை நாதியற்று நிற்கிறது! வளர்ப்பு, பராமரிப்பு, கல்வி - ஒழுக்க போதனை ஆகியவற்றிற்கு மட்டுமல்ல, அநேக நேரங்களில் சமூக


படிப்பகம்

www.padippakam.com

# உரிய மதிப்பு!

ரீதியான முன்னேற்றத்திற்கும் பாது காப்புக்கும்கூட முக்கியமாகத் தேவைப்படுகின்ற தந்தையின் அரவணைப்பும் அன்பும் அக்குழந்தைக்குக் கிடைக்காது போய்விடுகின்றன! ஆகையால் அக்குழந்தையின் தேவைகளைப் பூர்த்தியாக்குவது சமுதாயத்தின் மீது கடமையாகிறது. தந்தையை இழந்துவிட்டோமே என்கிற ஏக்கமே அக்குழந்தைக்கு ஏற்படாதவாறு பாது காக்க வேண்டும்.

இது விஷயத்தில் சமுதாயம் பொடுபோக்காக இருந்தால் அக்குழந்தை உடல் ரீதியாக பலவீனப்பட்டு விடும் என்பது மட்டுமல்ல, சிந்தனை ரீதியான வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு விடும்.

கல்மனம் கொண்ட, இரக்கமற்ற இந்தச் சமுதாயத்தின் பேரில் வெறுப்பும் வெறியும்தான் அக்குழந்தையின் மனத்தில் வளர்ந்துவரும். நல்லதொரு குடிமகனாகத் திகழ்வதற்குப் பதிலாக முழுச் சமுதாயத்திற்கும் இழப்பும் நட்டமும் விளைவிக்கும் விதத்தில் அக்குழந்தை வளர்ந்திடலாம் என்பது ஆச்சரியமான விஷயமே அல்ல!

குர்ஆனிலும் நபிமொழிகளிலும் - அநாதைகளை வளர்ப்பது, கண்காணிப்பது, கல்வி - ஒழுக்கப் பயிற்சி அளிப்பது குறித்தும் அவர்களின் சொத்து சுகங்களைப் பாதுகாப்பது, அவர்களின் உரிமைகளை நிறைவேற்றுவது குறித்தும் தொடர்ந்து அடிக்கடி வலியுறுத்தப்பட்டுள்ளது.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: "எவரொருவர் அநாதைக் குழந்தையை - அது அவருக்குரியதோ அடுத்தவருக்குரியதோ (அதாவது உறவுக்கார குழந்தையோ அந்நிய குழந்தையோ) - பராமரித்துப் பாதுகாக்கிறாரோ அவரும் நானும் சுவனத்தில் இப்படி நெருக்கமாக இருப்போம்; எனது இந்த விரல்களைப் போன்று!" ஹதீஸின் அறிவிப்பாளர் தமது ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் நெருக்கமாக வைத்துக் காட்டினார். (முஸ்லிம்)

அநாதைகள் பலவீனம், விவேகமின்மையின் காரணத்தில் தங்களின் ஆகுமான உரிமைகளைக்கூட பாதுகாக்க இயலாதவர்களாய் உள்ளனர். அவர்களின் உரிமைகளை அபகரிப்பதென்பது எவருக்கும் எளிது! இப்படி அநாதைகளின் உரிமைகளை அபகரிப்பவர்கள் குறித்து குர்ஆன் கடுமையாக எச்சரிக்கை செய்கிறது.

"அநாதைகளின் சொத்துக்களை யார் அநியாயமாக உண்கிறார்களோ அவர்கள் உண்மையில் தங்களின் வயிறுகளில் நெருப்பைத்தான் நிரப்பிக் கொள்கிறார்கள். கொழுந்து விட்டெரியும் நரக நெருப்பில் அதிவிரைவில் அவர்கள் புகுவார்கள்". (4: 10)

இஸ்லாம் முழுச் சமுதாயத்தின் மீதும் இந்தப் பொறுப்பைச் சுமத்துகிறது: அநாதைகளை வளர்ப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வது மட்டுமல்ல, இறையச்சமுள்ளவர்களாக, குணவொழுக்கமுடையவர்களாக மேன் மக்களாக அவர்களை வளர்த்து உருவாக்கிக் கொண்டு வருவதற்கும் சமுதாயம் ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்கிறது. ஏனெனில் அந்த அநாதைகள் சமுதாயத்தின் மீது ஒரு சுமையாக - தீங்காக அமைந்திடாமல் சமுதாயத்தின் சிறந்த சொத்தாகத் திகழ்ந்திட வேண்டும் என்பதற்காக!

(தொடரும்)

**நமது அனைத்து விருப்பங்களும் ஏக இறைவனின் வாக்கை (கலிமாவை) மேலோங்கச் செய்வதற்கான முயற்சியில் ஒருங்கிணையும் போது மட்டுமே பணிகளில் பேரார்வமும் உணர்வுப் பூர்வமான வேகமும் ஏற்பட முடியும்.**


**சமரசம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்:
N.K. முஹம்மத்

பொறுப்பாசிரியர்:
சிராஜுல் ஹஸன்

முகவரி:
78, பெரம்பூர் நெடுஞ்சாலை
சென்னை - 600 012
தொலைபேசி: 6426181

அச்சிடுபவர்:
B. இப்ராஹீம் தாரிக்
இம்பாக்ட் பிரிண்டர்ஸ்
163, அங்கப்பன் தெரு,
சென்னை - 600 001

சந்தா
உள்நாடு - ஓர் ஆண்டு ரூ.110
உள்நாடு - அரையாண்டு ரூ.60
வெளிநாடு - ஓர் ஆண்டு ரூ.500
(விமானம் மூலம்)




படிப்பகம்

www.padippakam.com

# ஒடுங்குகிறது மனித நேயம் ஓடுகிறது இரத்த ஆறு

அரசியல்வாதி உண்டு; மேல் ஜாதிக்காரன் உண்டு; கீழ்ஜாதிக்காரன் உண்டு; கறுப்பன் உண்டு; வெள்ளையன் உண்டு; ஆனால் -

'மனிதன்' மட்டும் இல்லை!

அவன் இன்று மனிதத்துவத்தை மனித நேயத்தை எழுதுவதற்கும் புகழ்வதற்கும் உள்ள ஒரு விஷயமாக மாத்திரமே ஆக்கிவிட்டான். தன்னுடைய சொந்த நலன்களுக்காக மனிதத்துவத்தையே படுகொலை செய்யும் மனிதக் கூட்டங்கள் இன்று பெருகியுள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகில் 170 -க்கும் அதிகமான யுத்த - கலவரங்கள் நடைபெற்றன. இவற்றில் 230 லட்சம் மனித உயிர்கள் கொல்லப்பட்ட பிறகும்கூட இந்த பூமியில் அமைதியும் சமாதானமும் இன்னும்கூட ஒரு கனவாகத்தான் இருக்கின்றன. ஒரு துண்டு நிலத்துக்காகவோ, ஒரு பதவி நாற்காலிக்காகவோ இன்னும் எத்தனை எத்தனை மனித உயிர்கள் பலியாகப் போகின்றனவோ!





சரி, இப்படி இறந்தவர்கள் எல்லாம் இந்த யுத்தக் கலவரங்களில் நேரடி பங்குதாரர்களா என்றால் அதுவும் இல்லை. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் அநியாயமாக கொலை செய்யப் படுவது கொடுமையிலும் கொடுமையன்றோ?

முப்பதுக்கும் அதிகமான உள்நாட்டுப் போரோ - உள்நாட்டுக் கலவரங்களோ இப்போது நடந்து கொண்டிருக்கின்றன...!

ஐந்து ஆண்டுகள் - எட்டு மாதங்கள் - எட்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது இரண்டாம் உலகப் போர். 1945 -ஆம் ஆண்டு மே மாதம் 8 -ஆம் தேதி இரவு பதினோரு மணிக்கு துப்பாக்கி சத்தங்கள் ஓய்ந்தன...! இதில் இறந்தவர்கள் 5 கோடி பேர். சோவியத் யூனியன் மட்டுமே அன்று 250 லட்சம் பேரை இழந்தது. போலந்து 60 லட்சம் பேரையும், ஜெர்மனி 70 லட்சம் பேரையும் ஜப்பான் 20 லட்சம் பேரையும் இந்தப் போரில் பலி கொடுத்தது.

இன்றைக்கு மற்றொரு உலகப் போர் அறிவிக்கப்படவில்லை. ஆயினும், மனித உயிர்களை வேட்டையாடுவதில் புதிய ரிக்கார்டுகள் படைக்கப்படுகின்றன...!

பதினான்கு ஆண்டுகள் நீடித்து நடைபெற்ற ஆப்கன் போரில், 1992 -இல் சோவியத்தின் ஆக்கிரமிப்பை முறியடித்து முஜாஹிதீன்கள் ஆட்சிக்கு வந்தனர். இதற்காக உயிர் இழந்தவர்கள் 12,000 பேர்!

1975 -இல் போர்ச்சுக்கல்லின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையான அங்கோலாவில் உள்நாட்டுக் கலகம் மூண்டது! இதில் ஏறத்தாழ 10 லட்சம் பேர் உயிர் இழந்தனர்.

தெற்கு சூடானில் ஏற்பட்ட பதவி உரிமைப் போராட்டங்களில் பத்து லட்சம் பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் சாதாரண அப்பாவி மக்கள் ஆவார்கள்.

இலங்கையில் நடைபெற்று வரும் இனச் சண்டையில் இதுவரை 50,000 பேராவது சாவூருக்குச் சென்றி



படிப்பகம்

www.padippakam.com

ருப்பார்கள்.

இந்தியாவில் காஷ்மீர் பிரச்னை, காலிஸ்தான் சிக்கல் மற்றும் வகுப்புக் கலவரங்களில் கொல்லப்பட்டவர்க ளின் எண்ணிக்கைக்கு கணக்கே இல்லை.

அண்மைக் காலத்தில் உலக மன சாட்சியை நடுநடுங்க வைத்தது போஸ்னிய படுகொலைகள்தான்...! ஆயிரமல்ல, இரண்டாயிரமல்ல, ஒன் றரை லட்சம் பேர் கொல்லப்பட்டார் கள்...! உடல்களைப் புதைப்பதற்கு போஸ்னிய இடுகாடுகளில் இடமே இல்லை...! பெரிதாகத் தோண்டப் பட்ட ஒரே குழியில் நூற்றுக்கணக் கான உடல்களைப் போட்டு மூடிய கொடுமையும் நடந்தது! போஸ்னியா போரில் காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை ஆறு லட்சத்திற்கும் மேல்! இவர்களில் உடல் உறுப்பு களை இழந்தும், மனக் கிலேசத்திற்கு ஆளாகியும் நடைபிணமாய் இருப்ப வர்களைப் பார்க்கும்போது, இறந்து போனவர்கள் பாக்கியசாலிகள் என்றே எண்ணத் தோன்றும்! இந்தப் போரில் பெண்களும் குழந்தைகளும் அனுபவித்த கொடுமைகள் சொல்லுந் தரமன்று!

குர்திஸ்தான் ஒர்க்கர்ஸ் பார்ட்டி 1984 -இல் குர்திஸ்தானுக்காக தொடங்கிய கொரில்லாப் போராட் டத்தில் 13,000 பேர் இறந்தார்கள்.

ஸ்பெயினில் இருந்து விடுதலை பெறுவதற்காக பாஸ்கியூ நாடு கடந்த 26 ஆண்டுகளாய் நடத்தி வரும் போராட்டத்தில் இதுவரை 9,000 பேர் உயிர் இழந்ததாய் கணக்கிடப்பட்டுள் ளது.

மாவோயிஸ்ட் கலகக்காரர்கள் 1980 -இல் கையில் ஆயுதம் ஏந்திய தைத் தொடர்ந்து பெரு நாட்டில் அமைதி குலைந்ததுடன் 27,000 பேர் விண்ணுலகப் பயணம் மேற்கொண்ட னர்.

கொலம்பியாவில் முப்பது ஆண் டுகளாய் தொடர்ந்து வரும் மார்க் சிஸ்ட் கொரில்லாப் போர் 30,000 பேரை பலி கொடுத்துள்ளது.

1991 இல் சோமாலியா கலவரத் தில் மரணமடைந்தவர்கள் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானவர்கள்.

பல ஆண்டுகளாய் நடந்து வரும் ஹுடு - டுட்சு இனக் கலவரம் ஆப்பிரிக்க கண்டத்தின் அமைதிக்கே வேட்டு வைத்துள்ளது. 1961 -இல் ஹுடு இனத்தார்க்கு புருண்டியும் 1967 -இல் டுட்சு இனத்தாருக்கு ருவாண் டாவும் கிடைத்தன என்றாலும், இதற் காக இருதரப்பிலும் பத்து லட்சம் மனித உயிர்கள் மண்ணில் சாய்ந்தன.

முப்பத்தி மூன்று வருடங்களாய் நடந்துவரும் குவாட்டிமாலா கொரில் லாப் போராட்டத்தில் எத்தனையோ பேர் கொல்லப்பட்டுவிட்டார்கள்; ஆயிரக்கணக்கான பேர் காயம் அடைந்தனர்.

யுத்த கலவரங்களின் எண்ணிக் கையும் அவற்றில் உயிர் இழப்பவர்க ளின் தொகையும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டுதான் வருகின்ற னவே தவிர குறைந்தபாடில்லை. மூன்றாம் உலகப் போர் மூண்டுவிடக் கூடாது என்று அஞ்சிக் கொண்டிருக் கும் மனிதன், நாள்தோறும் இரத்தம் சிந்தும் தலையில்லா முண்டத்தைப் பார்த்தபடிதான் காலையில் கண் விழிக்கிறான்.

ஒருவேளை, இன்றைய மனித னின் தலையெழுத்தே இதுதானோ?

— கே. மஜீத்.

## சி.ஐ.ஏ. அரவணைப்பில் ஜோராய் வியாபாரம்




அமெரிக்காவுக்கு ஒரு பழக்கம் இரத்தத்தோடு கலந்தது. உலக நாடுகளை குறை சொல்வதும்; உருட்டி மிரட்டி 'தர்பார்' நடத்துவதுமே அது!

லாஸ் ஏஞ்சல்ஸ் சிட்டி ஹால் அருகே படுஜோராய் நடக்கும் 'கிராக்' கோகெய்ன் போதை மருந்து விற்பனைக்கு சி.ஐ.ஏ.வின் முழு துணை இருப்பது தற்போது வெளியாகியுள் ளது. சமீபத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர். எதிர்ப் பாளர்களில் ஒருவர் முகமூடி அணிந்து தம் எதிர்ப்பை வெளிப் படுத்தும் காட்சி இது.


**JAMIA DARUSSALAM INDUSTRIAL TRAINING INSTITUTE, OOMERABAD - N.A.A.Dt.**

**(N.C.V.T. - புதுடெல்லியுடன் இணைந்தது)**

**சேர்க்கை அறிவிப்பு**

**நாங்கள் கீழ்கண்ட பாட திட்டங்களை (Course) கற்பிக்கிறோம்**

| பாடத் திட்டம் | கால அளவு | கல்வித் தகுதி |
|---|---|---|
| 1. டேட்டா பிரிப்பரேஷன் மற்றும் கம்ப்யூட்டர் சாப்ட்வேர் (Data preparation and Computer Software) | 1 ஆண்டு (முழு நேரம்) | +2 தேர்ச்சி (கணிதம், விஞ்ஞானம் மற்றும் வணிகவியல்) |
| 2. தோல் பொருள் உற்பத்தியாளர் (Leather goods Maker) | 1 ஆண்டு (முழு நேரம்) | S.S.L.C. தேர்ச்சி/ அல்லது - தோல்வி |

மேற்கண்ட பாட திட்டங்களுக்கு சேர்க்கை விண்ணப்பங்கள் முதல்வர், ஜாமியா தாருஸ்ஸலாம் I.T.I. உமராபாத், (வ.ஆ.அ.மா) அவர்களிடமிருந்து ரூ.15/- மணி ஆர்டர் மூலமோ (அல்லது) போஸ்டல் ஆர்டர் மூலமோ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.




படிப்பகம்

www.padippakam.com


# Seyad Residential School

SHOW US THE RIGHT PATH

Five Falls - Illanji Road, **Courtallam - 627 802.**

Tirunelveli District.

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு 1997 – 98

**அமைவிடம்:** எழில்மிகு குற்றாலத்தில் ஐந்தருவியின் அருகாமையில் தென்காசியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் ஐந்தருவி - இலஞ்சி சாலையில் 21 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது இப்பள்ளி.

**நிறுவனர்:** 'செய்யது ரெஸிடென்ஷியல் பள்ளி' செய்யது பீடி கம்பெனி, செய்யது நூற்பாலை, செய்யது ஷரீஅத் நிதி நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் துணையுடன் நிறுவிய 'செய்யது வெல்ஃபேர் சொசைட்டி', நிர்.28 நடுத்தெரு, சிந்துபூந்துறை என்ற அமைப்பினால் மாணவர்களுக்காக மட்டும் நடத்தப்படுகிறது.

**வகுப்புகள்:** 6, 7, 8 வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆங்கிலம் பயிற்சி மொழி. மெட்ரிகுலேஷன் பாடத்திட்டம். தமிழ், ஹிந்தி, அரபி, மலையாளம் ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. சிறந்த தங்கும் விடுதி வசதி கொண்டது. அரசு அங்கீகாரம் பெற்றது.

**முக்கிய குறிப்பு:** கல்வியோடு கூடிய பல்வேறு ஈடுபாடுகள் பாங்கான முறையில் வழங்கப்படுகிறது. பரந்த நிலப்பரப்பில் எல்லா விளையாட்டுகளுக்கும் முதலிடம் தரப்படுகிறது. இஸ்லாமிய மாணவர்களுக்கு மார்க்கக் கல்வி வழங்கப்படுகிறது. ஏனைய மாணவர்களுக்கு அறநெறி வகுப்புகள் நடைபெறுகிறது. 'கம்ப்யூட்டர்' கல்வி எல்லா மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**சேர்க்கை முறை:** விண்ணப்பப் படிவம் மற்றும் குறிப்பேடு பெற ரூ.100/- பணமாகவோ அல்லது வங்கி பணவிடை மூலமாகவோ 'SEYAD RESIDENTIAL SCHOOL' payable at TENKASI என்ற பெயருக்கு எடுத்து முதல்வருக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம்.

முகவரி: **The Principal, Seyad Residential School,**
P.B.No.6, Five Falls Illanji Road,
**COURTALLAM - 627 802. Tirunelveli Dist.**
Phone: School: 22900 (04633), Office: 22986, Hostel: 25086.

**பள்ளி துவங்கும் நாள் : 4.6.1997**




படிப்பகம்

துல்ஹஜ் 26

உமர் (ரலி) அவர்களின் நினைவுநாள்:

# ஒரு யுகப்புரட்சியின் கனல்!

P.A. அப்துல் ஹக்கீம்

அழகான பளிங்கு கற்களால் கட்டப்பட்ட சமாதிகளின் அடித்தளங் களில் செதுக்கி வைக்கப்படுகின்ற கல்வெட்டுகளில் காணப்பெறும் புகழ்மொழிகள், யாரையும் இன்று வரை காலத்தை வென்றவராய் ஆக்கி யதில்லை!

பிரமிட்களின் உள் அறைகளிலும் லெனின்கிரேட் பீஜிங் இன்னும்பிற இடங்களிலும் கம்பீர அழகுடன் எழுந்து நிற்கும் அருங்காட்சியகங்களி லும் அழியாமல் காக்கப்படுகின்ற உயிரற்ற சடலங்களை சரித்திரம் தன் பின்னங்கால்களால் எட்டி உதைத்தும் மிறிதுப்பியும் கடந்து சென்றது என்று கூறிய ஷெல்லியின் வாக்கு இன்று உண்மையாகி வருவதை காணுகி றோம்.

ஆனால், எந்த ஆள்படை அம்புக ளின், துதிபாடலின் துணையும் இன்றி மதீனாவில் இறுதி துயில் கொண்டி ருக்கும் உத்தமர் உமர் (ரலி) அவர்கள் ஒரு யுகத்திற்கே வெளிச்சம் தந்த ஒளிப்பிழம்பு ஆவார். ஒடுக்கப்பட்ட ஏழை எளியோர் மற்றும் அபலைகள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய மகத்தான ஆட்சியாளர் அவர். அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு சரியான நீதி வழங்கிய நீதிமான். நலிந்த மக்க ளுக்கு ஆதரவு காட்டிய நல்லாட்சியா ளர். ஹிஜிரி வருடம் 23. துல்ஹஜ் மாதம் 26 -ம் நாள். இருள் போர்த்திய அந்த இரவு ஒரு சோக விடியலுக்கு வழி திறந்தது.

ஆம்! என்றும்போல அன்றும் வழமையாய் அதிகாலை தொழுகையை தொழ மஸ்ஜிதுன் நபவியில், தனக்கு பின்னால் நிற்பவர்களை சரியாக நிற்கும்படி பணித்துவிட்டு 'அல்லாஹு அக்பர்' - இறைவன் பெரியவன் எனக்கூறி கைகளைக் கட்டி தன் எடுப்பான குரலால் திருமறை வசனங்களை ஓதிக் கொண்டிருக்கும் வேளை.

ஒரு துணின் மறைவில் ஒளிந்திருந்த கயவன் ஒருவன் இருபுறமும் தீட்டப்பட்ட பளபளப்பான கத்தியால், இறைவனை பணிந்து கொண்டிருந்த அந்த துணிவின் சிகரத்தைக் குத்தினான். தீயவனின் குத்துப்பட்டதும், அப்புனித ரின் குரலில் இருந்து வந்த திருமறை ஓசை தடைபட்டது. உடனே பின்னால் நின்றிருந்தவர்கள் 'சுப்ஹானல்லாஹ்' என்று குரல் கொடுத்தனர். உடனே உமர் (ரலி) அவர்கள் 'இதோ என்னைக் குத்திவிட்டு ஓடும் அவனைப் பிடியுங்கள்' என்று கூறிவிட்டு பின்னால் திரும்பி அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்களின் கையைப் பிடித்து தான் நின்றிருந்த முசல்லாவில் நிற்க வைத்து தொழுகையைத் தொடரச் செய்தார்கள். அப்துர் ரஹ்மான் அவர்களும் வேகமாக தொழுகையை முடித்துவிட்டு பார்க்கும் பொழுது உமர் (ரலி) அவர்கள் கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத் (சல்) அவர்கள் நின்று தொழுத இடம் முழுதும், அந்த புனிதப் போராளியின் இரத்தம் உறைந்து தளம் கட்டியது. அந்தக் கொலையாளி அத்தோடு விடவில்லை. தன் முன் எதிர்ப்படுவோரை எல்லாம் குத்தினான். பதிமூன்று பேரை அவன் தாக்கினான். 7 பேர் இறந்துவிட்டனர்.

பாரசீக நாட்டைச் சேர்ந்த அடிமை அபூலுஆ என்பவன்தான் உமரைக் கொன்றவன்.

தன்னைக் கொன்றவன் இறை நம்பிக்கையாளரைச் சார்ந்தவன் அல்ல என்பதை அறிந்து உமர் (ரலி) அவர்கள் அமைதிபூண்டார். அவர்கள் கூறினார் கள்: ''நான் அவனுக்கு ஒரு தீமையும் செய்தேனில்லையே! அவன் செய்ததற் குண்டான கூலியை அவனுக்கு அல்லாஹ் கொடுப்பானாக! என்னுடைய முடிவுக்கு ஒரு இறை நம்பிக்கையாளன் காரணமாக அமையவில்லை என்பதை அறிந்து அமைதியுறுகிறேன். இறைவனுக்கே புகழ் அனைத்தும்!''

www.padippakam.com

**இறையாலயத்திலிருந்து வீட்டுக்கு!**

கத்தியால் குத்தப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் உமர் (ரலி) அவர்களை தோழர்கள் அவருடைய இருப்பிடத்திற்கு தூக்கி வந்தனர்.

அவரை மூன்று மருத்துவர்கள் பரிசோதித்தனர். கடுமையாக குத்தப்பட்டு இருப்பதால் அவருடைய குடல் வெளியே வந்துவிட்டது. தளர்ந்து போன அவருக்கு, பேரீச்சம்பழச்சாறு கொஞ்சம் புகட்டப்பட்டது. அது குடல் அறுந்து இருந்ததால் அதன் வழியாக வெளியே வந்து விட்டது. கொஞ்சம் பால் கொடுக்கப்பட்டது. அதுவும் வெளியேறி விட்டது. இஸ்லாத்தின் உறுதியான காவல் போராளியை அகிலத்தின் அதிபதி தன் பக்கம் அழைத்துக் கொள்ளப் போகிறானா?

உமர் அவர்களுக்கு அடிக்கடி மயக்கம் ஏற்படுவதும் நினைவு திரும்புவதுமாக இருந்தது. அந்நிலையிலும் அவர் யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்பதை கணக்கு பார்த்து சொல்லச் சொன்னார். அவர் மொத்தம் 86,000 திர்ஹம் கடன் பெற்றிருந்தார்.

பத்தரையாண்டுகள் பெரும் நில பரப்பைக் கொண்ட இஸ்லாமியப் பேரரசை கட்டியாண்ட ஆட்சித் தலைவருக்கு கடன் 86,000 திர்ஹம்!

இந்தக் கடனை அடைப்பதற்கு தனது உடைமைகளை விற்று விடுங்கள் என்றார். அதுவும் போதவில்லையானால் அதிய்யா என்ற கோத்திரத்தாரிடம் கேட்டுப் பெற்றுக் கொடுங்கள்; அப்படியும் தீரவில்லையானால் குறைஷிகளிடம் கேட்டு வாங்கிக் கொடுங்கள் என்றார்.

அடுத்து தான் கூறுகின்ற சிலரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவரை கலீபாவாக்க ஆலோசனையும் கூறினார். இப்படியாக உமர் (ரலி) அவர்கள் தம் இறுதிப் பயணத்திற்கு தயாராகிக் கொண்டிருந்தார்.

அருமை நபிகள் நாயகம் (சல்) அவர்களும், முதல் கலீபா அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும் அடக்கப்பட்ட இடத்திற்கு அருகில் தாமும் அடக்கப்பட வேண்டும் என்று தமது இறுதி விருப்பத்தையும் தெரிவித்தார். அவருடைய இறுதி ஆசை நிறைவேற்றிடும் அனுமதிக்காக அப்துல்லா இப்னு உமர் (ரலி) அவர்கள் அன்னை ஆயிஷா (ரலி) வீட்டுக்கு சென்றார்கள். அங்கு அன்னை ஆயிஷா அழுது கொண்டிருந்தார்கள். உமர் (ரலி) அவர்களுக்காக தமது உரிமையை விட்டுக் கொடுத்தார்கள். இச்செய்தியை அறிந்ததும் உமர் அவர்கள் அமைதி அடைந்தார். பின் கூர்மையான பார்வையை வீசும் அவருடைய கண்கள் மெல்ல மூடின, என்றென்றைக்குமாக!

**இறுதிப் பயணம்**

ஜனாசா குளிப்பாட்டப்பட்டது. சுஹைப் (ரலி) அவர்களின் தலைமையில் இறுதித் தொழுகை நடத்தப்பட்டது. பிறகு அன்பு நபிநாயகம் (சல்) அவர்களின் அருகில் ஆறடி குழி தோண்டி அந்த மண்ணறையில் வைக்கப்பட்டது உமர் (ரலி) அவர்களின் புனித உடல்!

மதீனா நகரமே துயரில் மூழ்கியது.

''உமர் (ரலி) அவர்களுக்குப் பிறகு இஸ்லாம் அநாதையாகிவிடும்'' என்று கூறினார் அபூஉபைதத் இப்னு ஜர்ராஹ் அவர்கள்! ஆம்! அது உண்மைதான்! இன்றுவரை உலக முஸ்லிம்களுக்கு உமர் (ரலி) அவர்களைப் போல் ஓர் ஆட்சியாளர் கிடைக்கவில்லையே! அவரைப்போல் ஒரு புரட்சிக் கனல் இன்றுவரை பூத்து வரவில்லையே! அவருடைய நினைவு நாளில் பிரார்த்திப்போம்: ''இறைவா! உமர் (ரலி) அவர்களைப் போல் ஓர் ஆட்சியாளரை எங்களுக்குத் தா!'' ●

## சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கியது!

**கவி.கா.மு. ஷெரீப் - இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் இலக்கியங்களில் எம்.பில். ஆய்வுப் பட்டம்!**

## புதுக்கல்லூரி ஆய்வாளர்கள் பெற்றனர்!

சென்னைப் புதுக்கல்லூரி முதுகலைத் தமிழ்த்துறையில் எம்.பில். ஆய்வு தொடங்கப்பட்டு இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் ஓ.அ. காஜாமுகைதீன், டாக்டர் கம்பம் சாகுல் அமீது, பேராசிரியர் ஹ.மு. நத்தர்சா ஆகியோரின் சீரிய மேற்பார்வையில் எட்டுக்கும் மேற்பட்ட ஆய்வாளர்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் ஆய்வு மேற்கொண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தால் எம்.ஃபில் ஆய்வுப்பட்டம் வழங்கப்பட்டுள்ளனர்.

புதுக்கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் முகம்மது அலி 'அலிநாமா - ஓர் ஆய்வு' என்னும் தலைப்பிலும் சென்னை ஐ.சி.எப். மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் அப்துல்காதர் ஏ.கே. ரிபாயியின் சிறுகதைகள் என்னும் தலைப்பிலும் பேராசிரியர் ஹ.மு. நத்தர்சா மேற்பார்வையில் சென்னைப் பல்கலைக்கழகத்தால் எம்.ஃபில் ஆய்வுப்பட்டம் வழங்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து, ''கவி.கா.மு. ஷெரீப் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்'' என்னும் தலைப்பில் மகாகவி பாரதிநகர் அரசு உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் கவிஞர் வே. பிரபாகரனும், ''இறையருட் கவிமணி கா. அப்துல் கபூரின் அரும்பூ ஓர் ஆய்வு'' என்னும் தலைப்பில் எம்.ஃபில் முழுநேர ஆய்வாளர் இராம. இராஜா என்பவரும் ஆய்வு மேற்கொண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தால் அண்மையில் எம்.ஃபில். ஆய்வுப்பட்டம் வழங்கப்பட்டுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

## முஜீப் பதில்கள்

அப்துல்லாஹ், திருவள்ளூர்.

● குஜ்ரால் தேறுவாரா?

✍ சிறந்த நிர்வாகி; பண்பாளர்; அறிவு ஜீவி என்று பெயரெடுத்தவர். திறமைகளின் அடிப்படையில் குஜ்ரால் தேறுவார் என்ற நம்பிக்கை உண்டு. அவரைச் சுற்றி இருப்பவர்கள்தாம் பிரச்னை.

விருதை உசேன், வடுவூர். ★

● தமிழகத்தில் கடந்த காலங்களிலும் தற்பொழுதும் முஸ்லிம்களுக்கு எதிரான அடக்கு முறைகளும் வன்முறைச் சம்பவங்களும் நடைபெற்றிருந்தும் ஜமாஅத்தே இஸ்லாமி தமிழக கிளை எந்தப் போராட்டமும் செய்யாமல் அழைப்புப் பணி மாத்திரம் செய்து வருகிறதே ஏன்?

✍ இந்திய முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்களுக்கெல்லாம் காரணம், அழைப்புப் பணியை அவர்கள் முறையாகச் செய்யாததுதான்! கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியத் திருநாட்டில் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆயினும் சக குடிமக்களுக்கு தங்களின் சொல்லாலும் செயலாலும் இஸ்லாத்தை எடுத்துரைத்தார்களா? குர்ஆன் - ஹதீஸ் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையை அமைத்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்களா? இந்த நாட்டு மக்களிடம் இஸ்லாத்தைப் பற்றி நிலவும் தவறான கருத்துக்களைக் களைய முஸ்லிம்கள் முயற்சி செய்தார்களா? குர்ஆனையும் நபி வழியையும் மாற்று மதத்தினர்க்கு அறிமுகப்படுத்தினார்களா? இல்லையே! கடந்த பத்து நூற்றாண்டுகளில் முஸ்லிம்கள் இந்த அழைப்புப் பணியை முழு வீச்சுடன் செய்திருந்தால், நிலைமை இந்த அளவுக்கு மோசமாகி இருக்குமா? அதனால்தான் ஜமாஅத்தே இஸ்லாமி தொடக்க காலந் தொட்டே அழைப்புப் பணியில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அதன்பால் சமுதாயத்தின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது. சமூக நல்லிணக்கம், தனியார் சட்ட பாதுகாப்பு, முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி, பொருளாதாரம் மற்றும் பலதரப்பட்ட பிரச்னைகளில் தேசிய அளவில் ஜமாஅத் செய்துவரும் சேவைகளையும், விளம்பர வெளிச்சம் இல்லாமல் அது செய்து வரும் சாதனைகளையும் பட்டியல் இட இங்கு இடமில்லை.

அபூ அஜ்மல், நீடூர்.

● கையூட்டு கொடுக்காமல், வட்டி கொடுக்காமல் இந்த நாட்டில் வாழ முடியுமா?

✍ 'இறையச்சமுள்ள [தக்வா] வாழ்க்கை என்பது இருபுறமும் முட்கள் அடர்ந்த ஒற்றையடிப் பாதை போன்றது' என்றார் உமர் [ரலி] அவர்கள். காலடிகளை கவனமாக எடுத்து வைத்தால் நீங்கள் சொல்லும் தீமைகளில் சிக்காமல் வாழ முடியும்.

● சினிமா, அரசியல் பற்றி துளிச் செய்தி கூட தராமல், அதே சமயம் இழப்பில்லாமல் இதழ் நடத்த முடியுமா?

✍ முடியுமா, முடியாதா என்பது இருக்கட்டும். சினிமாவும் அரசியலும் அடியோடு புறக்கணிக்கப்பட வேண்டிய விஷயம் அல்ல. இந்த இரண்டு துறைகளையும் சீர்திருத்தி சரியான - ஆக்கப்பூர்வ வழியில் திருப்பிவிட்டால் நாட்டில் புதுப்புரட்சி பூத்துவிடும்.

எச். அலாவுதீன், பாளையங்கோட்டை.

● தான் விரும்பும் காதலரையே திருமணம் செய்து கொண்டு, சட்டபூர்வமாக வாழ முஸ்லிம் பெண்ணுக்கு உரிமை உண்டு என்று பாகிஸ்தான் [லாகூர்] உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியள்ளது பற்றி...?

✍ இதில் என்ன புதுமை இருக்கிறது? இஸ்லாமியச் சட்டத்தின்படிதான் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இஸ்லாத்தில் யாருடன் திருமணம் செய்ய அனுமதி உண்டோ, அத்தகையோரை விரும்பி மணமுடிக்க ஒரு முஸ்லிம் பெண்ணுக்கு முழு உரிமை உண்டு. நமது தேசியப் பத்திரிகைகள் இந்தச் செய்தியில் என்ன அதிசயத்தைக் கண்டனவோ தெரியவில்லை.

## முன்ஜென்மம் மறுபிறவியில் நம்பிக்கை உண்டா?

S.J. பக்ருதீன், கும்பகோணம்.

● திருமணம் செய்யாதவர்கள் பற்றி இஸ்லாம் என்ன சொல்கிறது? தமிழக ஆளுநர் பாத்திமா பீவி திருமணம் ஆகாதவராமே?

✍ திருமணம் செய்ய மாட்டேன் என்ற முடிவுடன் இருப்பது வேறு; திருமணம் நடக்காமல் இருப்பது வேறு. திருமணம் செய்வதற்கான வாய்ப்பு இருந்தும் செய்ய மறுப்பது நபிவழி அல்ல.


பாத்திமா முஹம்மத், கோவை - 18.

● என் உறவினர் ஒருவருக்குத் திருமணம் ஆகி, இரு குழந்தைகள் உள்ளனர். அவர் இளமையும் வசதியும் படைத்தவர். ஆகவே இரண்டாம் மணம் புரிய விரும்புகிறார். இதில் முதல் மனைவிக்குத் துளியும் விருப்பம் இல்லை. இந்த நிலையில் அவர் இரண்டாம் திருமணம் செய்யலாமா?



படிப்பகம்

www.padippakam.com



✍ இளமையும் வசதியும் இருப்பதாலேயே இன்னொரு திருமணம் செய்துதான் தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவருடைய குடும்பப் பின்னணியின் முழு விபரமும் தெரிந்தால்தான் இதுபற்றி கருத்து சொல்ல முடியும். ஆயினும் ஒரு விதவைக்கோ, ஒரு முதிர் கன்னிக்கோ வாழ்வளிக்கும் நல்ல நோக்கத்தில் கணவன் மறுமணம் புரிய விரும்புகிறார் எனில், முதல் மனைவி அவருக்கு ஒத்துழைப்புத் தரலாம். அது பெண் இனத்தின் மீது கருணை காட்டுவதாகும்.

ஆர். புருஷோத்தம யாதவ், மொறப்பாக்கம்.

● **இஸ்லாத்தின் கொள்கைகள் அற்புதமானவைதாம்; சந்தேகமில்லை. ஆனால் அந்தக் கொள்கையைப் பின்பற்றும் பாகிஸ்தானின் சீரழிவுக்கு காரணம் என்ன?**

✍ பாகிஸ்தான் உருவான நாளில் இருந்தே இஸ்லாமிய அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை அது பின்பற்றியதே இல்லை. அங்குள்ள குழப்பங்களுக்குக் காரணமே அதுதான்!

எஸ். ஸயீதா பானு, வேலூர் - 3.

● **முஸ்லிம் அல்லாதவர்களுக்கு சலாம் சொல்லலாமா?**

✍ சொல்லலாம். சலாம் [உங்கள் மீது சாந்தி நிலவட்டும்] என்பது முகமன் மட்டுமல்ல; அது ஒரு பிரார்த்தனையும் கூட. இறைவன் நாடினால், உங்கள் பிரார்த்தனை ஏற்கப்பட்டு, அவருக்கு நேர்வழியுடன் கூடிய சாந்தி கிடைக்கலாம் அல்லவா!

A.M. முஸ்தபா கமால், பொறையார்.

● **அத்வைதம், துவைதம் இந்த இரண்டில் ஸூஃபியாக்கள் எதைப் பின்பற்றுகிறார்கள்? முஸ்லிம்கள் அவர்களைப் பின்பற்றலாமா?**

✍ ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றா, இரண்டா? ஒன்றுக்குள் இரண்டா, இரண்டுக்குள் ஒன்றா, பரமாத்மாவுடன் ஜீவாத்மா கலக்குமா, கலக்காதா, தூணிலும், துரும்பிலும் கூட பரமாத்மா இருக்குமா போன்ற குழப்பங்கள் எல்லாம் இஸ்லாத்தில் இல்லை. இஸ்லாம் கூறும் இறைக் கோட்பாடு தெளிவானது; எளிமையானது; குழப்பம் இல்லாதது. [பார்க்க: குர்ஆன் 112 ஆம் அத்தியாயம்] ஸூஃபிகள் உட்பட நம்பிக்கையாளர்கள் அனைவரும் அந்த இறைக் கோட்பாட்டைதான் பின்பற்ற வேண்டும்.

A. அஹமது இப்ராஹீம், கீழ்புதுக்குடி.

● **தற்போது தமிழகத்தில் எங்கு குண்டு வெடித்தாலும் அதற்கு முஸ்லிம் தீவிரவாதிகள்தான் காரணம் என்று சந்தேகம் கொள்கிறார்களே, சரியா?**

✍ தகவல் தொடர்பு சாதனங்கள் மிகத் தந்திரமாக உருவாக்கியுள்ள ஒரு மாயத் தோற்றம் இது. சென்னை மாதவரத்தில் ஓர் ஆயுதக் கிடங்கையே காவல் துறை கைப்பற்றியது. அதில் ஒரு முஸ்லிம் கூட இல்லை. நமது தேசிய நாளேடுகளுக்கு பத்திரிகா தர்மம் பற்றி யாரேனும் பாடம் நடத்தினால் தேவலை.

எம். ஷாகிரா பானு, குராயூர்.

● **ஆண்களுக்கு பெண்கள் தொழுகை நடத்தலாமா? [இமாமத் செய்யலாமா?]**

✍ கூடாது. பெண்கள் பெண்களுக்கு மட்டும்தான் இமாமத் செய்ய வேண்டும்.

பி. சிராஜ், ஓசூர்.

● **ஹஜ் பயணிகளில் சிலர் தீ விபத்திற்கு பலியாகி விட்டார்களே?**

இப்னுகனி, சென்னை - 21.

● **மினாவில் நேர்ந்த தீ விபத்து பற்றி...?**

✍ நெஞ்சை உலுக்கிய துயரம் அது. ஹஜ் பயணிகளுக்கு சவுதி அரசு நல்ல வசதிகளையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தி தான் உள்ளது. ஆயினும் புனிதப் பயணிகளில் சிலர் அந்த பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதில்லை. ஒருசில செய்யும் தவறினால் பலர் பலியாகின்றனர். உயிர் இழந்த ஹாஜிகளுக்காக மனம் உருகிப் பிரார்த்திப்போம்! [இந்த இத தலையங்கத்தையும் பார்க்கவும்]

கே.ஆர். உதயகுமார், சென்னை - 1.

● **இஸ்லாமிய பெண்கள் அரசியலில் ஈடுபட தயங்குவ தேன்?**

✍ கண்ணியமான ஆண்களே இன்றைய சாக்கடை அரசியலில் ஈடுபட தயங்கும்போது, பெண்களை ஏன் இழுக்கிறீர்கள்

● **முன் ஜென்மம், மறுபிறவி இவற்றில் தங்களுக்கு நம்பிக்கை உண்டா?**

✍ மனிதன் பிறப்பதற்கு முன்பு ஆன்ம லோகத்தில் இரு கவே செய்தான். அதை முன் ஜென்மமாக வைத்துக் கொள் லாம். ஆனால் பிறவி என்பது ஒன்றுதான். மறுபிறவி கிடை யாது. மறுவாழ்க்கை உண்டு. மரணத்திற்குப் பிறகுள்ள மறுமை வாழ்க்கைதான் அது!

கூ. இராஜேந்திரன், சென்னை - 1.

● **ஷபனா ஆஸ்மி, ரேவதி ஆகியோரின் சேவைக சமூகத்திற்கு எவ்வகையில் பயனளிக்கின்றன?**

✍ திரைப்படங்களில் நடித்து பேரும் புகழும் பெற்று, லட்ச கணக்கில் சம்பாதித்தும் கூட நடிகர் - நடிகைகளுக்கு ம நிம்மதி கிடைப்பதில்லை. அந்த நிம்மதியை தேடித்தா சேவையில் இறங்குகிறார்கள். இதில் ஆச்சரியம் ஒன்று மில்லை.

★ சிறந்த கேள்விக்காக ரூ.25/- பரிசு பெறுபவர்:
**விருதை உசேன் (முஹம்மத் அப்பாஸ்)**
கேணிபாலம், வடுவூர், வடபதி (P.O.) - 614 019.


படிப்பகம்

# ஈந்து கனியும் பாலை

**பிரபஞ்சன்**

## 4

குத்ரியின் கால்கள் மண்ணில் பாவவில்லை. சும்மாவா பின்னே? அதிர்ஷ்டம் என்றால், இதல்லவா அதிர்ஷ்டம். எல்லாம் அல்லாஹ்வின் கருணை. வேறென்ன? அவர் கருணை மாத்திரம் இல்லையென் றால், மக்கான் இப்படி ஒரு விஷயத் தைத் திடுதிப்பென சொல்வாரா என்ன? மக்கானின் மகன் சிராஜுதீ னுக்கு நம் சல்மா?

குத்ரி, வானத்தைப் பார்த்தான். நகத்தை வெட்டி வைத்தாற்போல இருந்தது ஒரு பிறை. அவன் கைக ளில் துணிப்பை இருந்தது. சல்மா வின் ஆடைகள். மனசுக்குள் கனம் இல்லாத சுமையாகச் சந்தோஷம். அவன் களைப்பின்றி நடந்தான். எப்ப டியோ, அவன் தேடிப் போகாமல், சல்மாவுக்கு நல்ல இடமாக அல்லவா அமைந்துவிட்டது. மக்கான்தான் எத் தனை நல்ல மனுஷர். தன் மகனுக்குச் சல்மா மணமகள் ஆவாளா என்று கேட்டவர், அடுத்துச் சொன்ன வார்த் தைகளே அவனுக்கு அதிகமான ஆச் சர்யம் தந்தவை. என்ன சொன்னார் மக்கான்?

''குத்ரி. நீர் உடனடியாகச் சம்ம தம் சொல்ல வேண்டியது இல்லை. அப்படிச் சொல்லவும் கூடாது. நீர் சல்மாவிடம் விஷயத்தைச் சொல்ல வும். அவளும் இதுபற்றி யோசிக்கட் டும். வாழப் போகிறவர்கள் அவர்கள். நம் வழக்கப்படி, நாம்தான் முடிவு செய்கிறோம் என்றாலும், அவர்கள் சம்மதம் ரொம்ப முக்கியம். சல்மாவி டம் பேசும். அவளை வற்புறுத்த வேணாம். அவளுக்கும் சம்மதம் இருந்து, இன்ஷா அல்லாஹ் - நிக் காஹ் வைத்துக் கொள்ளலாம்'' என்று மக்கான் சொன்ன வார்த்தைகளை அசை போட்டபடி நடந்து கொண்டி ருந்தான், குத்ரி.

மண், குளிர்ச்சியாக இருந்தது. காற்றும் பனி கலந்து வந்தது. எல் லாம் இனிமையாகவே இருந்தது. அடடா. மறந்து போனோமே! மக் கான் கடைக்குப் பக்கத்திலேயே, மிட் டாய்க் கடை இருந்தது. யூசுப் மிட் டாய்க்கடை என்றால் மிகவும் பிரசித் தம். கொஞ்சம் மிட்டாயையும் வாங் கிப் போய்க் கொடுத்து, இனிப்பான செய்தியையும் சல்மாவிடம் சொல்லி இருக்கலாம். 'குத்ரி, நீ ஒரு ரெண்டுங் கெட்டானடா' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான், குத்ரி.

வீடு, இருள் அடைந்து கிடந்தது. ஜன்னல் திரையில் இருந்து, கசியும் வெளிச்சத்தைக் கண்டான் அவன்.

''சல்மா... மகளே சல்மா'' என்று விளித்தான்.

விளக்கு வெளிச்சம் அசைந்தது. அது, அசைந்து அசைந்து, கதவின் அருகாக வந்ததைப் பார்த்துக் கொண் டிருந்தான்.

''யார்.''

''நான்தான் மகளே, உன் வாப்பா ''

கதவு திறந்தது. கையில் விளக் குடன் நின்ற மகளிடம் கேட்டான் குத்ரி. சல்மா நீ உறங்கவில்லையா? இன்னுமா உறங்கலை?''

''நீங்கள் வந்ததும் உறங்கலாம் என்று இருந்தேன். நீங்கள் வராமல், நான் என்று உறங்கினேன், சொல்லுங் கள்...''

''அதுவும் சரிதான் மகளே. ஒரு சந்தோஷமான சமாச்சாரம். அதை அப்புறம் சொல்கிறேன். முதலில், இதைப் பிரித்துப் பார்.''

சல்மா பொட்டலத்தைப் பிரித் தாள். ''அட...'' என்று ஆச்சர்யப்பட் டாள். பிரித்து, தன் உடம்போடு வைத்துப் பார்த்துக் கொண்டாள்.

''எப்படி இருக்கு, மகளே?''

''ரொம்ப அழகா இருக்கு வாப்பா. ரொம்ப விலை இருக்கும் போல இருக்கே.''

''மக்கான், உனக்காக என்று கொடுத்தார்.''

''மக்கான் பெரியப்பா கடை யிலா வாங்கினது? அவர் சௌக்கி யமா இருக்கார்தானே?''

''இருக்கார். சரி மகளே. சாப்பிட என்ன வைத்து இருக்கிறாய்?''

''ரொட்டியும், சுரக்காய் குழம் பும்.''

''இதோ வருகிறேன். எடுத்து வை.''

குத்ரி, தோட்டத்துக்குச் சென்று முகம், கால்கை கழுவிக்கொண்டு திரும்பினான். சாப்பிட அமர்ந்தான்.

''சல்மா, உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி கொண்டு வந்து இருக்கிறேன்''

''சொல்லுங்க!''

''நம்ம மக்கானுக்கு ஒரு பிள்ளை இருக்கான். சுல்தான் மாதிரி, ரொம்ப உயரம், கம்பீரம். பெயர் சிராஜுதீன். ரொம்ப நல்ல பிள்ளையாம். எல்லாம் சொல்கிறார்கள். அந்தப் பிள்ளைக்கு உன்னைக் கேட்கிறார், மக்கான்.''

மகளின் முகத்தைப் பார்த்தான், குத்ரி. அது, எந்த அசைவையும் காட் டாமல், மெத்தென்று இருந்தது. குளத்து நீர் என்றால், காற்றில் அசை யும். கிண்ணத்தில் வைத்த நீர் மாதிரி இருந்தாள் சல்மா. ஆகவே, குத்ரி மேலும் சொன்னான்.

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

''ரொம்ப சௌக்கியமாக இருக்கலாம், மகளே. ரொம்ப நல்ல மனுஷர், மக்கான். வசதியானவரும்கூட. என்ன சொல்கிறாய்?''

''நான் என்ன சொல்ல இருக்கிறது, வாப்பா?''

''மக்கான் என்ன சொல்கிறார் தெரியுமா? சல்மாவின் அபிப்பிராயம் தான் எனக்கு முக்கியம் என்கிறான்.''

''யோசிக்கிறேன், வாப்பா. இந்த நள்ளிரவில், என்ன கல்யாணப் பேச்சு? விடியட்டுமே. வெளிச்சத்தில் பேச வேண்டிய சங்கதியை, இரவில் எதற்குப் பேச வேண்டும்.''

''அதுவும் சரிதான் மகளே.''

மிச்சம் இருந்த இரவு முழுக்க, யோசித்தபடியே இருந்தாள் சல்மா.

வெந்த கோதுமை மாதிரி, பளபளவென்று விடிந்து கொண்டிருந்தது, காலை. புறாக்கள், விழித்துக் கொண்டு, தங்கள் சிறகுகளை அடித்துக் கொண்டு, காலைப் பொழுதை வரவேற்கத் தொடங்கி இருந்தன. அதிகாலைத் தொழுகையை முடித்துக் கொண்டு, தன் இருக்கையில் வந்து அமர்ந்து விட்டார் சுல்தான் அப்பாஸ். அவருக்கு முன், ஏராளமான கோரிக்கைகள். மக்கள் குறைகள், தேவைகள், முறையீடுகள் என்று குவிந்திருந்தன. அவருக்கு அருகில், பரா, அவரின் முகம் பார்த்துக் கொண்டு நின்றான்.

''முதல் முறையீட்டைப் படிக்கலாம், பரா'' என்று ஆணையிட்டார் சுல்தான்.

''உத்தரவு ஹுஜூர்.''

பரா, முதல் விகிதத்தை எடுத்துப் படித்தான்.

''சுல்தான் அவர்களுக்கு, நல்ல ஆரோக்கியமும், நல்ல சம்பத்தும் பெருகட்டும் என்று வாழ்த்திக் கொண்டு, ஐயா, நான் விதவை. அதன்பின், யாரையும் நான் நிக்காஹ் செய்து கொள்ள விரும்பவில்லை. என் வயது 34. எனக்கு 10 வயதில் ஒரு பெண்ணும், எட்டு வயதில் ஒரு பிள்ளையும் இருக்கிறார்கள். என் கணவர் உயிருடன் இருந்த காலத்தில், அவர், வரிகட்டிக் கொண்டு இருந்தார். வெளி தேசத்தில் இருந்து இங்கு வந்து வாழ்கிற காரணத்தால், நாங்கள் வரிகட்ட வேண்டி இருந்தது. இப்போது கணவர் இல்லாத நிலையில், நான் வரிகட்ட வேண்டும் என்று கிராம அதிகாரி கூறுகிறார். என் வருமானமோ மிகவும் குறைவு. ரொம்ப சிரமத்தில் இருக்கிறேன். தாங்கள் அருள்கூர்ந்து, என் மேல் இருக்கிற வரிக் கடமையை விலக்கி உத்தரவு இட வேண்டுகிறேன். அல்லாஹ், தங்களுக்குச் சாந்தியையும் சமாதானத்தையும் அருளட்டுமாக...'' என்று படித்த பரா சொன்னான்,

''முதல் கோரிக்கையே, வரித் தள்ளுபடிதானா?''

''ஏன் அதனால் என்ன? அந்தப் பெண்மணி சிரமத்தை நம்மிடம் சொல்லி இருக்கிறாள். நம்மிடம் சொல்லாமல், நம் குடி மக்கள் வேறு யாரிடம் சொல்ல முடியும், சொல்.''

''இந்த அம்மாளுக்கு வரி விலக்கு தந்தால், எல்லா விதவையும் கேட்பார்கள் ஹுஜூர். அதனால் நமக்கு ஏற்படும் இழப்பு...? அதையும் கவனிக்க வேண்டி இருக்கிறதே.''

''இதைப் பொருளால் அளக்க முடியாது, பரா.''

பொக்கிஷ அதிகாரி, மெல்ல சுல்தான் அருகில் வந்து நின்றார். அப்பாஸ் திரும்பி, அவரைப் பார்த்துச் சொன்னார்.

''சொல்லலாம்.''

''ஹுஜூர்! நம் பொக்கிஷ நிலவரம். அது வழியவும் இல்லை. காய்ந்து வற்றிவிடவும் இல்லை. ஆகவே, சுல்தான் அனுமதிப்பீர்கள் என்றால், யாருக்கும் வரிவிலக்கு அளிக்கக் கூடாது என்பதே என் விண்ணப்பம்.''

''பொக்கிஷ அதிகாரி, உமக்குத் தகுதியானதையே பேசினீர் எனினும், அந்தப் பெண்ணின் துன்பத்தைப் போக்குகிற வழியை, நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்.''

பரா சொன்னான்.

''அவர்கள் அந்நியர்கள் ஹுஜூர். அந்நிய தேசத்தார்.''

''அல்லாஹ்வுக்கு அந்நியர்கள் யாரும் இல்லையே, பரா. அவன் பிரதிநிதியாகிய எனக்கும் அந்நியர்கள் இல்லை. என் ஆளுகைக்குட்பட்ட தேசத்தில் அவர்கள் இருந்தால், அவர்கள் என் மக்கள். தூர தேசம் போனால், என் சகோதரர்கள். நான் எவ்வாறாயினும் அந்தப் பெண்ணின் துன்பத்தை நீக்கவும் வேண்டுமே.''

''தங்கள் உசிதம் சுல்தான் அவர்களே.''

''இதை நான் அமானத்தாகக் கருதுகிறேன். என்னிடம் இது ஒப்படைக்கப்பட்டது. இறைவன், என்னிடம் ஒப்படைத்தது. அந்தப் பெண், நம்பி என்னிடம் ஒப்படைத்தது. நான், அவளுக்கு நீதம் செய்ய வேண்டும்.''

அப்பாஸ், சற்று நேரம் யோசித்தார்.

''சரி. பொக்கிஷ அதிகாரி கவனிக்கட்டும். இன்று முதல், கணவன் இல்லாத, வரிகட்ட இயலாத, பொருள் வசதி இல்லாத விதவைகள் வரிகட்ட வேண்டாம், அவர்கள் வரி விலக்கு அளிக்கப்படுவார்கள் என்று அறிவியும்.''

அவர்கள் உத்தரவை ஏற்றுக் கொண்டார்கள். எனினும், அமைதியாக இருந்தார்கள். சுல்தான் அவர்களைத் தேற்ற வேண்டிய கட்டாயத்தில் இல்லை. என்றாலும், ஆறுதலாக அவர் சொன்னார்.

''ஏழைப் பெண்ணின் கண்ணீரைத் துடைக்கும் கரமாக, என் கை விதிக்கப்பட்டிருக்கிறது பரா. இதனால், ஏற்படும் வருவாய்க் குறைவை, வேறு எப்படியானாலும் சமாளிக்கலாம். அல்லாஹ் வழிகாட்டுவான்.''

மதியம் வரைக்கும் அரசியல் அலுவல் பார்த்து முடித்தார் சுல்தான்.

''பரா... என்னுடன் உணவருந்தலாமே...''

''ஆகா... உணவையும் வேண்டாம் என்பானோ, பரா, எஜமான்.''

உணவு வந்தது. அவர்கள், கைகளைக் கழுவிக் கொண்டு உண்ணத் தொடங்கினார்கள். உண்கையில், அப்பாசின் முகம், ஏதோ சிந்தனையில் இருப்பதைக் கவனித்தான் பரா. என்ன திட்டம் உருவாகிறதோ என்கிற அச்சத்தில் இருந்தான். இறுதியாக 'பரா' என்றார்.

''உத்தரவு''

''அந்தப் பெண் நினைவு இருக்கிறதா, பரா?''

''எந்தப் பெண் ஹுஜூர்? அந்த வரிவிலக்குக் கேட்கிற பெண்ணா?''

''முட்டாள் திலகமே! சில நாட்களுக்கு முன், இரவு நேரத்தில்...''

''ஓ... புதையல் பணத்தைக் கஜானாவில் கட்ட வேண்டும் என்று சொல்லி, அப்பனைத் திருத்திய பெண்தானே?''



படிப்பகம்

www.padippakam.com


# அல் அமீன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி

1. அல் அமீன் நகர், வில்லரசம்பட்டி (அஞ்சல்), ஈரோடு - 638 004. போன்: 533613
2. 571 காவேரி ரோடு, ஈரோடு - 638 003. போன்: 213189.

**விடுதி (ஹாஸ்டல்) வசதி உண்டு**

**இப்பள்ளியின் சிறப்பியல்புகள்:**

**100%** கடந்த ஐந்து ஆண்டுகளாக மெட்ரிகுலேஷன் தேர்வில் தொடர்ந்து முதல் வகுப்பில் மாணவ மாணவிகள் தேர்வு பெற்று வருகின்றனர்.

**100%** கடந்த மூன்று ஆண்டுகளாக மேல்நிலைத் தேர்வில் தொடர்ந்து முதல் வகுப்பில் மாணவ மாணவிகள் தேர்வு பெற்று வருகின்றனர்

★ அரபி, ஹிந்தி, கம்ப்யூட்டர் அறிவியல் ஆகியவை சிறப்புப் பாடங்களாகக் கற்றுக் கொள்ள வசதியுண்டு

★ இஸ்லாமிய மாணவ மாணவிகள் அன்றாட நெறிமுறைகளை நியமமாகப் பேணப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்

★ ★ ★

வெளியூர் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிதாகக் கட்டப்பட்டுள்ள பெண்கள் விடுதியில் 35 மாணவிகள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

வெளியூர் மாணவர்களுக்கான புதிய விடுதி அல் அமீன் நகர் (எல்லப்பாளையம்) கிளையில் நிறுவப்பட்டுள்ளது.

தரமான கல்வியையும் ஒழுக்க நெறிமுறைகளையும் தங்கள் குழந்தைகளுக்கு வழங்க விரும்பும் பெற்றோர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

விடுதி வசதி வேண்டும் மாணவ மாணவியர் - 6 முதல் 9 வகுப்புகள் வரை - 20.4.97 அன்று காவேரி ரோடு கிளையில் காலை 10.00 மணிக்கு தங்கள் வகுப்புகளுக்கான நுழைவுத் தேர்வினை எழுத வேண்டும்.

சேர்க்கை பதிவு விண்ணப்படிவங்களை ரூ.10 M.O. செய்து உடனே பெற்றுக் கொள்ளலாம்.

**தாளாளர்,** அல் அமீன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு-3



# M.M. KALEEL AHAMED & CO

## Tanners & Exporters

**OFFICE:**

*150, Ground Floor, Vepery High Road,*
*Periamet, Chennai - 600 003.*
*Phone: 566296, 563463*

**HEAD OFFICE & FACTORY:**

*Madurai Road, Begampur,*
*Dindigul - 642 002.*
*Phones: Office : 24370*
*Factory: 22252.*



நவீன ஜவுளி ரகங்களுக்கு

# அஜந்தா கிளாத் ஸ்டோர்ஸ்

மெயின் ரோடு, திண்டுக்கல் - 1


படிப்பகம்

www.padippakam.com

''அவளேதான். அவள் எப்படிப் பட்டவள் என்று நினைக்கிறாய்?''

''நினைப்பது என்ன, பெரு மானே? இறையச்சம் கொண்ட பெண். ஒழுக்கத்தில் சிறந்த பெண். தாங்கள் எப்படியோ அப்படியே, தங் கள் குடிமக்களும்.''

மாவும், ஆட்டிறைச்சியும், பாலும் என்று எளிமையாகவே இருந் தது உணவு. கிண்ணங்களில் அலை யும், அப்பாசின் வைர மோதிரம் அணிந்த விரல்களையே பார்த்துக் கொண்டு இருந்தான், பரா.

''எனக்கு ஒரு யோசனை, பரா.''

''உத்தரவு.''

''அந்தப் பெண்ணை தான் நிக் காஹ் செய்து கொண்டால் என்ன?''

திடுக்கிட்டான், பரா. விஷயத் தின் கனத்தை வாங்கிக் கொள்ளவே சில கணங்கள் பிடித்தன, அவனுக்கு. மெதுவாகக் கேட்டான்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''அம்மா, என் நிக்காஹ் பற்றித் தினமும் நச்சரிக்கத் தவறுவது இல்லை. அவர்களையும் நான் மதிக்க வேண்டும். எனக்கும் அது தேவை தானே. நான் விசாரித்துப் பார்த்தேன். அந்தப் பெண், பெயர் சல்மா - மிகவும் நல்ல குணம் கொண்டவள் என்றே சொல்கிறார்கள். நீதத்தில் நிலைபெறும் பெண்தானே, நமக்கு உகந்தவள். சரிதானே?''

''அந்தப் பெண் அதிர்ஷ்டக்காரர் தான்.''

''ஏன் நான் இல்லையா?''

''அதில்லை, பெருமானே. தங்க ளைக் கைப்பிடிக்க அந்த ஏழைப் பெண் கொடுத்து வைத்திருக்க வேண் டுமே.''

''இறைவன் படைப்பில் எவர் ஏழை. எவர் செல்வந்தர்.''

''நான் ஏழை; தாங்கள் செல்வந் தர்.''

''முட்டாளே. என்னிடம் இருக் கும் பணம், என் பணமா? என்னிடம் ஒப்படைக்கப்பட்ட செல்வம். கலீபா உமர் எப்படி வாழ்ந்தார்? சொல். எத்தனை ஆடம்பரமாக வாழ்ந்தவர் கள் அவர்கள்? பதவி ஏற்றபிறகு, ஒரு பக்கீரைப் போல் அல்லவா, தம் வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொண்டார்கள்?''

''நிஜம்தான் ஹுஜூர்.''

''அந்த சல்மாவையே நிக்காஹ் செய்து கொள்ளப் போகிறேன் என்று உம்மாவிடம் இன்று சொல்லப் போகிறேன். ஒரு நண்பனுக்கு இது தெரிந்து இருக்க வேண்டும் என்பதுக் காகச் சொல்கிறேன்.''

''என்னைக் கணம் பண்ணிவிட் டீர்கள், சுல்தான் அவர்களே.''

மீண்டும் யோசனையில் ஆழ்ந்து விட்டார், சுல்தான்.

வெயில் வெளியே சுட்டு எரித் துக் கொண்டிருந்தது. எனினும், மாளி கையைச் சுற்றி இருந்த மரங்கள், வெயிலை வடிகட்டி அனுப்பிக் கொண்டிருந்தன. பரா சொன்னான்:

''பேகம் அவர்களை இங்கு எப் போது அழைப்பதாக இருக்கிறீர்கள்?''

''உம்மாவிடம் உத்தரவு பெற வேண்டும். அனேகமாக, நாளைக் காலை, குத்ரிக்கு இந்தச் சங்கதியைச் செல்வோம்.''

''நாளை சுல்தான் அப்பாஸ் அவர்களின் மாளிகையில் விளக்கு எரியும்''

''ஆம். பகலுக்கும் இரவுக்குமான மனித விளக்கு.''

''விளக்கின் வெளிச்சத்தில், இந்த ராஜ்யமே ஒளி பெறட்டும், ஹுஜூர்.''

''பெறும், பரா. இன்ஷா அல் லாஹ், வெளிச்சம் பெறும். என் வலது தோளும், என் ஒரு விழியுமாக அந்த விளக்கு ஒளி செய்யும் என்றே நம்புகிறேன்''

''என்றாலும், நாட்டுப்புறத்திலி ருந்து வரும் விளக்கு, ஹுஜூர். கொஞ் சம் பழமையான விளக்காக இருந்துவி டக் கூடாது.''

''பட்டணமாக இருந்தால் என்ன? நாட்டுப்புறமாக இருந்தால் என்ன? நல்ல ஈச்சை, நல்ல கனிகளை ஈயும்.''

''குத்ரி, நல்ல மண்.''

''அவன் ஒரு கருவி. மனிதர்க ளைச் செய்பவன், அல்லாஹ் அல் லவோ? கனி, மரம் தருகிறது. அதில் இனிப்பை ஏந்துபவன் அல்லவோ, அல்லாஹ்?''

''உண்மைதான் ஹுஜூர்...''

அன்று இரவே, தன் அம்மாவிடம் பேசப் புறப்பட்டார், சுல்தான்.

(கனியும்)

''இறைவன் மீதும் மறு மைநாள் மீதும் நம்பிக்கை கொண்டிருப்பவன் தன் விருந்தாளியை உபசரிக் கட்டும்!''

— நபிமொழி

திருமணம், பண்டிகை காலத்திற்கு ஏற்ற புகழ்மிகு மில் ஜவுளிகள்!
தரத்தில் உயர்வு; வருகை தாரீர்!

இந்தியா சில்க் ஹவுஸ்

11, காமராஜ் ரோடு, திருப்பூர் - 638 046.



படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சத்தின் நெஞ்சம்!

1. ஏப்ரல் 1 - 15 சமரசம் இதழ் கண்டேன். உலகமே எய்ட்ஸ் பீதியில் நடுங்கிக் கொண்டிருக்கும் வேளையில் 'எய்ட்ஸ்' பற்றிய பல சந்தேகங்களுக்கு டாக்டர். கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் தெளிவாக விளக்கம் தந்துள்ளார். மனித சமுதாயத்தை காக்க சமரசம் தக்க சமயத்தில் வெளியிட்ட கட்டுரை பாராட்டுக்குரியது!

தலையங்கமும், தகவல் சரம், புத்தகம் அறிமுகம் - பகுதிகளும் வளரும் தலைமுறைக்கு வழிகாட்டியாக அமையும் என்றால், 'முஜீப் பதில்கள்' அவர்களின் உள்ளங்களுக்கு சிந்தனை விருந்தாகவும், கருத்துக் கருவூலமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை!

2. டாக்டர். கே.வி.எஸ். மற்றும் ஏ. அஹமத் ஜான் ஆகியோரின் எய்ட்ஸ் பற்றிய விளக்கம் தவறான வழியில் செல்பவர்களுக்கு தக்க பாடமாக அமைந்துள்ளன.

'தகவல் சரம்' பக்கத்திற்குப் பக்கம் அருமையான செய்திகளைத் தருகிறது. சுவைத்தேன்; சிந்தித்தேன்!

3. எய்ட்ஸ் பற்றிய இந்திய நிலவரத்தை மாநிலம் வாரியாகப் படம் பிடித்துக் காட்டியது சமரசம். 'ஒருத்திக்கு ஒருவன்' என்று புதிய - நெத்தியடி விளக்கம் கொடுத்த டாக்டர் கே.வி.எஸ். அவர்களுக்கு பாராட்டுக்கள்! நோய் எதிர்ப்பு சக்தியை முற்றிலுமாக ஒழித்துவிடக் கூடிய எய்ட்ஸ் நடுங்க வைக்கும் மரண ஓலைதான்.

4. நடுங்க வைக்கும் மரண ஓலை' - கவர் ஸ்டோரி மற்றும் டாக்டர் கே.வி.எஸ். அவர்களின் பேட்டி பிரமாதம்! 'எய்ட்ஸ்' அரக்கனின் தீமைகள் பற்றி வெகுஜனப் பத்திரிகைகள் கூட இவ்வளவு விளக்கமாக கட்டுரை வெளியிடவில்லை! பாராட்டுக்கள்! இந்தக் கட்டுரையை நகல் எடுத்து லயன்ஸ், ரோட்டரி போன்ற சமூக சேவை அமைப்புகள் மக்களிடையே விநியோகிக்க வேண்டும். செய்வார்களா?

'குர்ஆனை விளங்கி நபிவழியில் நடப்போமே' கட்டுரை குர்ஆனின் கருத்துக்கள் அனைத்து மக்களுக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்கு என்பதைக் காட்டுகிறது.

5. எய்ட்ஸ் பற்றி இவ்வளவு விளக்கமாக தெளிவாக எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை. உண்மையிலேயே பாராட்ட வேண்டிய விஷயம். அதிலும் டென்னிஸ் வீரரின் அந்த உருக்கமான கடிதம் நெஞ்சைத் தொட்டது!

6. முறையான இறைவேதப் பயிற்சி, கட்டுப்பாடுள்ள குடும்ப வாழ்வு முதலியனவே எய்ட்ஸ் பரவாமல் தடுக்க முடியும். படிப்பறிவில்லாத கிராம மக்களிடம் கல்வி மூலம் இதைப் போதிக்க வேண்டும்.

7. 'மானுடம் வெல்லுமா? எனும் தலையங்க வினாவோடு தொடங்கிய சமரசம் (ஏப்ரல் 1 - 15) இதழ் ''இறைக் கடமைகளைப் பேணி நடந்தால் நிச்சயம் வெல்லும்'' எனும் விடையோடு முடிந்தது.

ஆம்! உலக மக்கள் இஸ்லாம் கூறும் ஒழுக்க வரம்புகளையும், நெறிமுறைகளையும் எப்போது பேணி நடக்கிறார்களோ அப்போதுதான் மனித குலத்தை சீரழிக்கும் 'எய்ட்ஸ்' போன்ற நோய்கள் ஒழியும்.

8. டாக்டர் K.V.S. அவர்களின் கூற்றுப்படி 'ஒருத்திக்கு ஒருவன்' என்று வாழ்ந்தால் 'எய்ட்ஸ்' எனும் ஆட்கொல்லி நோய்க்கு அஞ்சவே தேவையில்லை.

www.padippakam.com

நூறு வயதாகியும் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றும் டாக்டர் ராதாநாத் ராத் அவர்களின் பணி மகத்தானது! மதக்கலவரங்கள் ஒழிய முஜீப் தந்த பதில் மதத்தின் பெயரால் மக்களைப் பிரித்தாள நினைக்கும் விஷமிகளுக்கு சரியான சவுக்கடி! கவிதைகள் அனைத்தும் மிக அருமை! மொத்தத்தில் இதழுக்கு இதழ் சமரசம் மெருகு கூடி வருகிறது.

9. கேள்வி - பதில் பகுதியை மிகவும் ஆர்வத்துடன் பார்த்து வருகிறோம். தொடர்ந்து பிரசுரியுங்கள். நாளுக்கு நாள் சமரசத்தின் மதிப்பு கூடுகிறது என்பது நூற்றுக்கு நூறு சரியே!

10. முஜீப் பதில்கள் அழகாகவும் தெளிவாகவும் பல்வேறு சந்தேகங்களுக்கு சிறந்த விளக்கமாகவும் அமைந்திருப்பதைப் பார்த்து மகிழ்கிறோம்.

11. பிரபஞ்சனின் எழுத்து மென்மையான இசையின் நடுவே ஏற்படும் அமைதியைப் போன்று அமைந்திருக்கிறது. எண்ணற்ற வாசக இதயங்களை இத்தொடர் கவர்ந்து விடும் என்பதில் ஐயமில்லை!

12. ஷேக்கோவின் மேகம் கலைந்தது சிறுகதை சந்தேகப் பேய் கொண்டு அலைவோரின் வாயை அடைத்துவிடும்.

13. 'மேகம் கலைந்தது' சிறுகதை அருமை! பக்கத்து வீடு, குளத்தங்கரை, குழாயடி, ரேஷன் கடை போன்ற இடங்களில் அவதூறு பேசித் திரியும் பெண்களுக்கு அறிவூட்டும் விதமாக இருந்தது.

14. 'குர்ஆனை விளங்கி நபிவழியில் நடப்போம்' கட்டுரை கண்டேன். நிகழ்கால சூழலுக்குத் தேவையான கட்டுரை. குர்ஆனை விளங்கி வழிகாட்டுதல் பெற சராசரி மனிதஅறிவு போதுமானதாக இருந்தாலும், அதிலிருந்து சட்டங்கள் இயற்றுவதற்கு மிக நுட்பமான அறிவு - அபாரமான நினைவாற்றல் போன்ற பல சிறப்புத் தகுதிகள் தேவை என்பதை உணர வேண்டும்.

15. நாட்டின் அரசியல் சக்கரம் முஸ்லிம் சமுதாயத்தை மையமாக வைத்து தான் சுழல்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் அல்லது தலைவர்களின் செயல்பாட்டு உள்நோக்கம் என்னவென்பதை கணித்தறியும் சாணக்கியத்த னம் கொண்ட முஸ்லிம் தலைவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்களின் உள்நோக்கம் என்ன? சிந்தித்தனரா, நம் தலைவர்கள்? நாட்டின் பரபரப்பான அரசியல் சூழ்நிலைகளிலெல்லாம்கூட இவர்கள் தம் பங் குக்கு சுறுசுறுப்படைந்ததாகத் தெரியவில்லை!

16. 'சமரசம் காலத்துக்கு உகந்த வகையில் நிறைவாக வெளிவருவதைக் கண்டு உவகை அடைகிறேன். புகழனைத்தும் இறைவனுக்கே! வரும் காலங்களி லும் தொடர்ந்து சிறப்பாக நடைபோட இறைஞ்சுகிறேன்.

17. 'நவீன விதவைகள்' எனும் தலைப்பில் வெளிவந்த கவிதை சிறப்பான ஒன்றாக அமையவில்லை. தீனார், திர்ஹம், ரியாலுக்காக கணவனை வெளிநாடு அனுப்பி 'விதவையாக வாழ்வது' இந்தக் காலம் என முடித்துள்ளார். இதனுடைய பொருளே வேறுவிதமாக மாறிவிடுகிறது. தமது குடும்பத்தாரின் வருங்கால வாழ்வுக்காகத்தான் வெளிநாடு சென்று வேலை செய்கின்றனர்! அவர்தம் மனைவிமார்கள் தியாக உணர்வுடன் தமது கணவன்மாரை வெளிநாடு அனுப்பி வைக்கின்றனர். அந்த தியாகத் துக்கு விதவைப் பட்டம் சூட்டுவது சரியல்ல!




1. கே.ஆர்.ரவீந்திரன்
சென்னை-1

2. A.M.முஸ்தபா கமால்
பொறையார்

3. A.முஹம்மது உமர் முக்தார்
பேரையம்பட்டி

4. வீ.எஸ்.ராஜகோபால்
பெங்களூர்-84

5. பாத்திமா முஹம்மத்
கோவை - 8

6. Dr. S.R. காதர் உசேன் சபி
திருச்சி - 8

7. அய்மான்
பரங்கிப்பேட்டை

8. கே.ஆர்.உதயகுமார்
சென்னை-1

9. முபாரக் அரபாத்
மாங்கணாம்பட்டு

10. ஜமாஅத்துல் உலமா
திருநெல்வேலி

11. T.M. பெரோஸ்கான்
தேனி

12. S. அஹ்மது தம்பி
திருமுல்லைவாசல்

13. எம்.நஜீமா பேகம்
இராமநாதபுரம்

14. S. தாஜுத்தீன் உலவி
திருக்களாச்சேரி - 609 312

15. அகநேசன்
கூத்தாநல்லூர்

16. M. அஷ்ரப் யூஸுஃப்
பெருவாலா, இலங்கை

17. எஸ்.ஏ.அஜீஸ்
வேலூர் - 1



படிப்பகம்

www.padippakam.com





தஃப்ஹீமுல் குர்ஆன்

மௌலானா மௌதூதி (ரஹ்)

# மறுமையை நேரில் பார்க்கும் போது....!

இறைநம்பிக்கை கொண்டவர்களே![38] உங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? 'அல்லாஹ்வின் வழியில் புறப்படுங்கள்' என்று உங்களிடம் கூறப்பட்டால் பூமியிலேயே அமிழ்ந்து கிடக்கிறீர்களே! மறுமையைவிட உலக வாழ்க்கையில் திருப்தி அடைந்து விட்டீர்களா? (அவ்வாறாயின் அறிந்து கொள்ளுங்கள்) உலக வாழ்க்கையின் இன்பங்கள் அனைத்தும் மறுமைக்கு முன் மிக அற்பமானவையாகவே இருக்கும்.[39] நீங்கள் இறைவழியில் புறப்படவில்லையாயின் இறைவன் உங்களுக்கு துன்புறுத்தும் தண்டனை அளிப்பான்.[40] மேலும் உங்களுக்குப் பதிலாக வேறொரு சமூகத்தினரைக் கொண்டு வருவான்.[41] மேலும் இறைவனுக்கு நீங்கள் எந்த ஒரு தீங்கும் செய்திட முடியாது. இறைவன், யாவற்றின் மீதும் பேராற்றல் உடையவனாக இருக்கின்றான். நீங்கள் இந்த நபிக்கு உதவி செய்யாவிட்டால் (அதனால் என்ன?) நிராகரிப்பாளர்கள் அவரை வெளியேற்றிய போது திண்ணமாக இறைவன் அவருக்கு உதவி செய்துள்ளான். அவர்கள் இருவரும் குகையில் தங்கியிருந்தபோது இருவரில் இரண்டாமவராய் இருந்த அவர் - தன் தோழரை நோக்கி, 'கவலை கொள்ளாதீர்; இறைவன் நம்முடன் இருக்கின்றான்'[42] என்று கூறினார். அப்போது இறைவன் அவருக்குத் தன்னிடமிருந்து மன அமைதியை இறக்கி அருளினான். மேலும் உங்களின் பார்வைக்குத் தென்படாதிருந்த படைகளின் மூலம் அவருக்கு உதவி செய்தான். மேலும் இறை நிராகரிப்பாளர்களின் வாக்கைத் தாழ்த்தினான். மேலும் இறைவனின் வாக்குதான் மேலானதாக இருக்கிறது. இறைவன் யாவற்றையும் மிகைத்தவனும், நுண்ணறிவாளனுமாவான்.

விளக்கம்:

*38.* இங்கிருந்து 81 ஆம் வசனம் வரையுள்ள அனைத்து வசனங்களும் தபூக் போருக்கு முஸ்லிம்கள் தயாராகிக் கொண்டிருந்த காலங்களில் இறங்கின.

*39.* இதற்கு இரு பொருள்கள் உள்ளன. அ) மறுமை எனும் நிரந்தர உலகிற்கு எதிரில், எண்ணற்ற அருட்கொடைகளுக்கு எதிரில் குறுகிய உலக வாழ்வும் அதன் இன்பங்களும் துச்சமானவையே! இவ்வுலகில் கிடைக்கும் இன்பங்கள், மகிழ்ச்சிகள், வாய்ப்புகள் ஏன், ஆட்சி அதிகாரமே கிடைத்தாலும் கூட, அது மறுமையின் இன்பங்களுக்கு எதிரில் மிகமிக அற்பமானதே. மறுமையின் நலன்களை நீங்கள் நேரடியாகப் பார்க்கும்போது, குறுகிய கால உலக லாபங்களுக்காக மறுமையின் நிரந்தர எண்ணற்ற நன்மைகளை இழந்து விட்டோமே என்று வருந்துவீர்கள்.

ஆ)இந்த உலகச் செல்வங்கள் மறுமையில் உங்களுக்கு எந்தப் பயனும் தரப் போவதில்லை. இங்கு நீங்கள் எவ்வளவு வசதி வாய்ப்புகளைக் குவித்து வைத்திருந்தாலும் சரியே, இறுதி மூச்சு அடங்கியவுடன் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு மரணத்திற்கு அப்பால் உள்ள உலகிற்கு சென்றுவிடுவீர்கள். இறை உவப்புக்காக எந்தக் காரியங்களை இங்கு செய்தீர்களோ அவை மட்டுமே அங்கு பயன் தரும்.

*40.* இந்த வசனத்திலிருந்துதான் பின்வரும் சட்டம் பெறப்பட்டது. போருக்காக அனைவரும் வர வேண்டும் என அறிவிக்கப்படும் வரை முஸ்லிம்கள் தனிப்பட்ட முறையில் போரில் கலந்து கொள்ளவோ, கலந்து கொள்ளாமல் இருக்கவோ அனுமதிக்கப்பட்டார்கள். ஒரு சிலர் போரில் கலந்து கொண்டாலும் மற்றவர்கள் மீதான கடமை நீங்கிவிடும் என்ற நிலை (பர்ளுகிபாயா) இருந்தது.

ஆனால் முஸ்லிம்களின் தலைவர் போரில் கலந்து கொள்ளும்படி பொது அறிவிப்புச் செய்து விட்டால் அல்லது குறிப்பிட்ட பகுதியினர், பிரிவினர் போரில் பங்கு கொள்ள வேண்டும் என்று தலைவர் ஆணையிட்டால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது அவர்கள் மீது கடமையாகிவிடும். இத்தகைய நிலையில் சரியான காரணமின்றி போருக்குப் புறப்படவில்லையெனில் அது தண்டனைக்கு உரிய குற்றமாகும்.

*41.* அதாவது இறைவனின் பணிகள் உங்களை நம்பி இல்லை; நீங்கள் செய்தால்தான் அவை நடக்கும்; இல்லையெனில் நடக்காது என்பதில்லை. உண்மையாதெனில், இறைவனின் மகத்தான உதவியால்தான் இறை மார்க்கத்திற்கு தொண்டு செய்யும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது. உங்கள் அறியாமையினாலோ, அலட்சியத்தினாலோ அந்த வாய்ப்பை தொலைத்தீர்கள்

(தொடர்ச்சி பக்.25)

www.padippakam.com



# பகைவர்களின் பிடியில் பத்து நபித் தோழர்கள்

அறிவிப்பாளர்: அபூஹுரைரா. (ரலி)

நபி (ஸல்) அவர்கள் குறைஷிகளின் நடவடிக்கையை ஆய்வு செய்வதற்காக ஆஸிம் பின் தாபித் (ரலி) அவர்கள் தலைமையில் பத்துப் பேரை அனுப்பினார்கள். அவர்கள் ஹதஅத் (உஸ்ஃபானுக்கும், மக்காவுக்கும் இடையிலுள்ள ஓர் ஊர்; உஸ்ஃபானிலிருந்து ஏழுமைல் தூரத்தில் உள்ளது) என்ற இடத்தை அடைந்ததும் பனூலஹ்யான் என்பாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுவிட்டது. இவர்களை எதிர்த்துப் போராட கிட்டத்தட்ட அம்பு எய்தும் படைப்பிரிவினில் நூறு பேர் கிளம்பி வந்தனர். அவர்கள் சென்ற பாதச் சுவடுகள் மீது நடந்து சென்றார்கள். பிறகு அந்த பத்துப்பேரும் பேரீத்தம் பழத்தை உண்டு கொண்டிருந்த அதே இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். (பேரீத்தம் கொட்டைகளைப் பார்த்துவிட்டு) இவை மதீனாவின் பேரீத்தங்களாயிற்றே என்று கூறியவாறு அந்த நபித்தோழர்களின் பாத அடையாளங்களைத் தொடர்ந்து சென்று அவர்களைக் கண்டு கொண்டார்கள்.

நபித்தோழர் ஆஸிம் (ரலி) அவர்களும், அவர்களின் தோழர்களும் அம்பு எய்துவோர் தம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டதும், மலையின் உச்சியில் ஏறிக் கொண்டார்கள். அம்பு எய்துவோர் நாற்புறமும் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். மேலும் அவர்களிடம் கூறினார்கள்: நீங்கள் கீழே இறங்கி வந்து சரணடைந்து விட்டால் உங்களில் எவரையும் கொல்ல மாட்டோம் என்று அறுதியிட்டுக் கூறுகிறோம்.

அதற்கு ஆஸிம் (ரலி) அவர்கள் எந்த நிராகரிப்பாளரின் வாக்கையும் நம்பி நான் கீழிறங்கத் தயாராக இல்லை என்று கூறிவிட்டு துஆ செய்தார்கள்: "இறைவா! எங்களின் நிலை குறித்து உன்னுடைய நபி (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்து விடுவாயாக". அந்தக் கொடியவர்கள் அம்பெய்து ஆஸிம் (ரலி) அவர்களை (மற்றும் அவரின் நண்பர்களில் அறுவரையும்) கொலை செய்து விட்டார்கள். குபைப், ஜைத் பின் தஸ்னா, அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) ஆகிய தோழர்கள் எதிரிகளின் உறுதி மொழியினை நம்பி கீழே இறங்கி வந்தார்கள். ஆனால் அவர்கள் பிடியில் அகப்பட்டதும் வில்லின் நரம்புகளால் நபித்தோழர்களின் கைகளை இறுகக் கட்டினார்கள். அப்போது அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்கள் இது முதலாவது வாக்கு மீறலாகும் என்று கூறி அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் உங்களுடன் வரமாட்டேன்; (ஷஹீதான) எனது நண்பர்களின் நடைமுறையினையே பின்பற்றுவேன் என்று கூறினார். எப்படியும் அவரைத் தம்முடன் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிகள் அவரை வலுக்கட்டாயமாக முழு பலத்துடன் இழுத்தார்கள். ஆனாலும் அவர் அவர்களோடு செல்ல திட்ட வட்டமாக மறுத்துவிட்டார். (பின்னர் அவர்கள் அவரைக் கொன்றுவிட்டார்கள்).

குபைப் (ரலி), ஜைத் பின் தஸ்னா (ரலி) இருவரையும் மக்காவுக்குக் கொண்டு சென்று விலைக்கு விற்றுவிட்டார்கள். (பத்றுப்போர் நடந்து முடிந்தபின் நிகழ்ந்த சம்பவம் இது) ஹாரிஸ் பின் ஆமிரின் புதல்வர்கள் குபைப் (ரலி) அவர்களை விலைக்கு வாங்கினார்கள். ஏனெனில் இவர் பத்றுப் போரின் போது இவர்களின் தந்தையைக் கொன்றவர். குபைப் (ரலி) இவர்களின் கைதியாகவே இருந்தார். குபைப் (ரலி) அவர்களை கொன்றுவிட அவர்கள் முடிவு செய்திருந்தார்கள். கைதியாக இருந்த நிலையில் குபைப் (ரலி) அவர்கள் தொப்புளுக்குக் கீழுள்ள முடியைக் களைவதற்காக ஹாரிஸின் குழந்தையிடம் கத்தியை இரவலாகக் கேட்டிருந்தார்.

ஹாரிஸின் மகன் (அபுல்ஹுஸைன்) நடந்தவாறு குபைப் (ரலி)இடம் வந்துவிட்டான். அவர் அச்சிறுவனை தனது மடியில் அமர்த்திக் கொண்டார். அப்போது அச்சிறுவனின் கையில் கத்தி இருந்தது. (இது அச்சிறுவனின் தாய்க்குத் தெரியாது) திடீரென்று இக்காட்சியைக் கண்டு விட்ட குழந்தையின் தாய் மிகவும் பதறிப்போய் (கவலையுடன்) நின்றாள். குபைப் (ரலி) அவர்கள் அந்தத் தாய் சோகமுடன் நின்ற காட்சியைப் பார்த்துவிட்டு, நான் உன் குழந்தையைக் கொன்று விடுவேன் என்று பயப்படுகிறாயா என்ன? இது போன்ற இழிசெயலை ஒருபோதும் நான் செய்திட மாட்டேன் என்றார். அப்பெண் (ஜைனப் பின்த் ஹாரிஸ் ஆக இருக்கலாம்) அல்லாஹ்வின் மீது ஆணை! குபைபைவிடச் சிறந்த ஒரு கைதியை நான் பார்த்ததில்லை; ஒருநாள் அவருடைய கையில் ஒரு பேரீத்தங்குலையை நான் பார்த்தேன். அதிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

அவர் சுவைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அவ்வேளையிலோ அவருடைய கைகளில் விலங்கிடப் பட்டிருந்தது. மக்காவில் எங்குமே அப்பழம் கிடைக்காத சூழ்நிலை! (அது பருவகாலமல்ல) இவ்வாறு அல்லாஹ் குபைபுக்கு சிறந்த ஆகாரத்தை வழங்கி இருந்தான் என அப்பெண்மணி (அதிசயப்பட்டுக்) கூறினார். ஹாரிஸின் புதல்வர்கள் அவரைக் கொன்றுவிடும் நோக்கத்தில் ஹரமுக்கு வெளியில் வந்து, தன்யீம் என்ற இடத்தை அடைந்தபோது குபைப் (ரலி) அவர்கள் என் கைவிலங்கை அவிழ்த்து விடுங்கள். இரண்டு ரக் அத் தொழுது கொள்கின்றேன் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டார். அவருடைய கோரிக்கைக்கிணங்க அவர்களும் கைவிலங்கை அவிழ்த்து விட்டார்கள். குபைப் (ரலி) அவர்கள் இரண்டு ரக்அத் தொழுகையை நிறைவேற்றினார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறேன் என்று நீங்கள் எண்ணாதிருந்திருந்தால் நான் அதிகமாக தொழுதிருப்பேன். (இவ்வாறு கூறி அவர் அல்லாஹ்விடம் துஆ செய்தார்.) இறைவா! இவர்களை நீ அழித்துவிடு; ஒவ்வொருவரையும் சாகடித்துவிடு; அவர்களில் ஒருவரையும் விட்டு வைக்காதே.'' பின்னர் அவர் கீழ்வரும் கவிதையைப் படித்தார்.

> ''நான் முஃமினின் அந்தஸ்தில் கொல்லப்படுவேனாகில் அல்லாஹ்வின் வழியில் எப்பக்கம் வீழ்கிறேன் என்பதனை நான் பொருட்படுத்த மாட்டேன். நான் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடியே உயிர் துறக்கிறேன். அவன் நாடினால் துண்டிக்கப்படும் எனது உடம்பின் உறுப்புகளில் அருள்பேற்றை வழங்குவான்.''

பிறகு அகபாபின் ஹாரிஸ் எழுந்து அவரைக் கொலை செய்து விட்டான். கட்டி வைத்துக் கொல்லப் படுகின்ற ஒவ்வொருவருக்கும் குபைப் (ரலி) அவர்கள் ஒருநடைமுறையை வகுத்துத் தந்துவிட்டார்கள். கொலை செய்யப்படுவதற்கு முன் இரண்டு ரக்அத் — தொழுவதுதான் அது.

அவர்களின் வீர மரணம் நிகழ்வுற்ற நாளில் அண்ணல்நபி (ஸல்) அவர்கள் இச்சம்பவம் குறித்து தமது தோழர்களுக்கு அறிவித்து விட்டார்கள்.

ஆஸிம் (ரலி) வீரமரணம் அடைந்து விட்ட மக்காவை எட்டியதும் குறைஷிகள் ஆஸிமுடைய உடலில் இருந்து ஒரு பகுதியை எடுத்து வர அவர் கொல்லப்பட்ட இடத்திற்கு சிலரை அனுப்புகிறார்கள். ஏனெனில் (இவர்தான் ஆஸிம் என்று) மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமே — ஆஸிம் (ரலி) குறைஷிகளின் பெருந்தலைவர். அகபா பின் அபீமுயீத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆணைப்படி பத்றுப் போரில் கொன்றுவிட்டார். ஆனால் அல்லாஹ் ஆஸிம் (ரலி) அவர்களின் சடலத்தைப் பாதுகாப்பதற்காக — தேனீக்களின் ஒரு கூட்டத்தை அனுப்பி வைத்தான். அந்தத் தேனீக்கள் சடலத்தின் அருகில் செல்லாதவாறு எதிரிகளைத் தடுத்தது. அவர்கள் எவ்வளவோ முயன்றும்கூட ஆஸிமுடைய சடலத்தின் எந்த ஒரு பாகத்தையும் துண்டித்து எடுத்துச் செல்ல முடியவில்லை.'' (புகாரி)

விளக்கம்:

இந்த ஹதீஸின் பின்னணி இது: பனீ ஹுதைல் கோத்திரத்தைச் சார்ந்த காலித் பின் சுஃப்யான் என்பான் (ஹிஜ்ரி 4 முஹர்ரம் மாதம்) நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக ஒரு பெரும் படையைத் திரட்டி இருந்தான். அவர்களை அடக்குவதற்காக அப்துல்லாஹ் பின் அனீஸ் என்ற தோழரை நபிகள் நாயகம் (ஸல்) அனுப்பி இருந்தார்கள். அவர் அங்குச் சென்று அவர்களைத் தோல்வியுறச் செய்து விரட்டியடித்ததுடன் காலித் பின் சுஃப்யான் என்ற அக்கொடியவனின் தலையைக் கொய்து வந்து அண்ணலாரின் காலடியில் போட்டார்கள்.

காலித்பின் ஸுஃப்யானின் கொலைக்கு பழிவாங்குவதற்காக பனீ ஹுதைல் கோத்திரத்தார் மறைமுகமாக ஒரு சதி செய்திருந்தனர். ஹிஜ்ரி 4 ஸஃபர் மாதம் அளல், தூரா — இவர்கள் இருவரும் ஹுதைலின் ஊரில் வசித்து வந்தார்கள். இவர்களோடு இன்னும் சிலர் மதீனா வந்தனர்.

எங்கள் ஊரில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் சிலர் இருக்கிறோம். எங்களுக்கு குர்ஆனைப் படித்துக் கொடுக்கவும், மார்க்க சட்ட திட்டங்களை போதிக்கவும் ஆசிரியர்களை அனுப்பித் தரவேண்டும் என்று மிக பவ்வியமாக நபி (ஸல்) அவர்களிடம் வேண்டிக் கொண்டார்கள். நபிகளார் ஆஸிம் பின் தாபித் (ரலி) தலைமையில் தோழர்களில் பத்துப் பேரை அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அனுப்பப்படுவது இருவித நோக்கத்திற்காகத்தான். ஒன்று இவர்கள் அங்குச் சென்று அம்மக்களுக்கு மார்க்க அறிவைப் புகட்ட வேண்டும். மற்றொன்று: குறைஷிகளின் தீவிரப் போக்குகள் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும். அது தொடர்பான தகவல்களைச் சேகரித்த வண்ணமிருக்க வேண்டும். இவர்கள் 'ரஜீவு' எனும் இடத்தை அடைந்ததும் அளல், தூராவாசிகள் துரோகம் செய்ய ஆரம்பித்தனர். உரத்த குரலில் ஹுதைல் பெயரைச் சொல்லி அழைத்தார்கள். அவர்களின் அந்தரங்கத்தைப் புரிந்து கொண்ட பத்து நபித்தோழர்களும் அவர்களை விட்டுப் பிரிந்து தலைமறைவாகி விட்டார்கள். இரவெல்லாம் பயணம் செய்து பகலெல்லாம் தூங்கினார்கள். கடைசியில் எதிரிகளில் நூறு பேர் அவர்களை விடாமல் துரத்திச் சென்று சுற்றி வளைத்துக் கொண்டார்கள். பிடிபட்ட ஏழு நபித்தோழர்களின் பெயர்கள் வருமாறு:

1. ஆஸிம் பின் தாபித் (ரலி)
2. தாபித் பின் அபில் கலஹ் (ரலி)
3. மர்ஸத் பின் அபீ மர்ஸத் அல் கனவி (ரலி)
4. காலித்பின் பகீர் (ரலி
5. அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி)
6. ஜைத் பின் தஸ்னா (ரலி)
7. குபைப் பின் அதிஸ்ஸி (ரலி)

ஜைத்பின் தஸ்னா (ரலி) அவர்களை தன் தந்தையின் கொலைக்கு பழி வாங்குவதற்காக ஸஃப்வான் பின் உமைய்யா என்பான் விலைக்கு வாங்கிக் கொண்டான். ஏனெனில் ஜைத் (ரலி) அவர்கள் பத்றுப் போரில் உமைய்யாவை தீர்த்துக் கட்டியிருந்தார்கள்.

ஆஸிம் (ரலி) அவர்கள் பத்றுப் போரில் அகபா பின் முயீத் என்பானையும், உஹத் போரில் இருவரையும் நரகத்துக்கு அனுப்பியிருந்தார்கள். அவர்களின் தாய் சுலாஃகா பின்த் ஸஅத் என்பவள் முடிந்தால் ஆஸிமுடைய மண்டை ஓட்டில் மது அருந்துவதாகவும் சபதம் செய்திருந்தாள்.

ஆஸிம் (ரலி) ஷஹீதாக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

செய்தி மக்காவை எட்டியதும் குறைஷிகளில் சிலர் அவருடைய தலை மற்றும் சரீரத்தின் சில பாகங்களை எடுத்து வர மக்காவிலிருந்து சிலரை அனுப்பி இருந்தார்கள். ஆனால் அவர்களால் அதனைச் செய்ய இயலவில்லை.

மற்றொரு விஷயத்தை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். அபூஸுஃப்யான் தன்யீம் என்ற இடத்தில் குபைப் (ரலி) இடம், நாங்கள் முஹம்மதைக் கொன்றுவிட்டு உம்மை குடும்பத்தாருடன் மகிழ்ந்திரு என்று சொல்லி அனுப்பிவிட்டால் உமக்கு மகிழ்ச்சிதானே? என்றார். அதற்கு குபைப் (ரலி) இல்லை, அல்லாஹ்வின் மீது ஆணையாகச் சொல்லுகின்றேன். நான் எனது மனைவி, மக்களுடன் இன்புற்றிருக்க விரும்பவில்லை. முஹம்மது (ஸல்) தம் வீட்டில் இருக்கையில் அவர்களுடைய காலில் ஒரு முள் தைத்தாலும் நான் அதனைச் சகிக்க மாட்டேன் என்று ஆணித்தரமாக பதில் தந்தார்கள்.

மூலம்: சையத் மஹ்மூத் ஹஸன் பாஸில் தேவ்பந்த்

தமிழில்: அபூஸயீத் பாகவி

## மதப்பிரச்சாரம் ரூபாய் நோட்டிலும்!




இந்துமதப் பிரச்சாரத்திற்காக இந்துத்துவவாதிகள் இந்தியன் கரன்ஸியையும் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். ரூபாய் நோட்டில் உள்ள வெள்ளை பாகத்தில் எதையும் எழுதவோ, வரையவோ, பதிக்கவோ கூடாது என்று சட்டமே இருக்கிறது. ஆனால் ஸ்ரீகிருஷ்ணனின் படம் பதிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகள் ஆங்காங்கே விநியோகிக்கப்படுகின்றன.

பெங்களூரைச் சேர்ந்த ஒருவருக்கு அப்படிக் கிடைத்த நோட்டுதான் படத்தில்! 6 JF 927577 எண்ணுள்ள 2 ரூபாய் நோட்டாகும் இது!

அண்ணல் நபியவர்கள் நவின்றார்கள்:
''அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள் தம் விருந்தாளிகளை உபசரிக்கட்டும்'' (புகாரி, முஸ்லிம்)

Space Donated by: ☎ 585580 Fax: 565194

**Amjad** FINISHED LEATHER CO.,
(GARMENT DIVISION)
82, E.V.K. SAMPATH ROAD, VEPERY, MADRAS - 600 007.

**HIJAZ LEATHERS**

MANUFACTURERS & EXPORTERS OF QUALITY LEATHER & LEATHER GARMENTS

OFFICE
60, Sydenhams Road,
Periamet, Chennai - 600 003
Ph: 566938/ 581569
Fax: 004-566934
Cable: Haramain - Chennai

TANNERY:
1104, Cutchery Road,
Vaniyambadi - 635 751
Ph: 04174-22530
Fax: 04174-23219

GARMENT FACTORY:
176/2, Sydenhams Road,
Chennai - 600 003.
Ph: 564464/ 585068



படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கியப் பொருளாதாரப் பேரவை அறக்கட்டளை

**D-1, அலி டவர்ஸ், 22, கிரீம்ஸ் ரோடு, சென்னை - 600 006.**

## அல்முமின் சிறுவர் இல்லங்கள்: சிறுவர் சேர்க்கை அறிவிப்பு

❋ முஸ்லிம் சமுதாயத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஆதரவற்ற ஏழை எளிய சிறுவர் சிறுமியர்களின் நல்வாழ்வுக்காகக் கீழ்க்கண்ட இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

1. அல்முமின் சீதக்காதி சிறுவர் இல்லம், சக்கரக்கோட்டை - 623 534. (இராமநாதபுரம் மாவட்டம்).
2. அல்முமின் உமறுப்புலவர் சிறுவர் இல்லம், ஒட்டப்பிடாரம் - 628 401. (வ.உ.சிதம்பரனார் மாவட்டம்).
3. அல்முமின் ஷாகுல் ஹமீது வலியுல்லாஹ் சிறுவர் இல்லம், தஞ்சாவூர் - 613 001. (தஞ்சை மாவட்டம்).
4. அல்முமின் கே.டி.எம்.எஸ். ஹாமீத் சாஹிபு சிறுவர் இல்லம், கீழக்கரை - 623 517. (இராமநாதபுரம் மாவட்டம்).
5. அல்முமின் மாலிக் தீனார் சிறுவர் இல்லம், திருவிதாங்கோடு - 629 174. (கன்னியாகுமரி மாவட்டம்).

❋ ஐக்கியப் பொருளாதாரப் பேரவை அறக்கட்டளை இந்த இல்லங்களைப் பராமரித்து வருகின்றது.

❋ இந்த இல்லங்களில் தற்போது 113 சிறுவர்களும், 25 சிறுமியர்களுமாக மொத்தம் 138 சிறுவர்கள் உள்ளனர்.

❋ அவர்களுக்கு உலகியல் கல்வியோடு மார்க்கக் கல்வியும் தங்குமிடமும் உயரிய உணவும், சீருடைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

❋ எதிர்வரும் கல்வியாண்டுக்கு, **17.05.1997** சனிக்கிழமை முதல் சிறுவர்கள், சிறுமியர்கள் சேர்க்கப்பட உள்ளனர்.

❋ அவர்கள் நேர்முகப் பேட்டி வாயிலாக, கீழ்க்கண்ட வரிசை முறையில், முன்னுரிமை கொடுத்துச் சேர்க்கப்படுவர்.

i) தாயையும் தந்தையையும் இழந்த ஆதரவற்ற அநாதை சிறுவர், சிறுமியர்கள்.
ii) தாய் அல்லது தந்தையை இழந்த ஆதரவற்ற சிறுவர், சிறுமியர்கள்.
iii) பெற்றோர்களால் பராமரிக்க முடியாத வறிய சிறுவர், சிறுமியர்கள்.

❋ மேற்கண்ட தகுதியுடைய சிறுவர், சிறுமியர்கள் **10.05.1997** சனிக்கிழமைக்குள் விண்ணப்பிக்கவும்.

❋ விண்ணப்பத்தோடு, ஐக்கியப் பொருளாதாரப் பேரவை உறுப்பினர் அல்லது ஜமாஅத் நிர்வாகி ஒருவரின் பரிந்துரை இணைக்கப்பட வேண்டும்.

❋ விண்ணப்பங்கள் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **B.S. அப்துர் ரஹ்மான்** | **A.J. அப்துல் ரஸ்ஸாக்** | **Dr.T. கமால் ஷரீப்** | **S.C.M. ஜமால்தீன்** |
| நிறுவனர் | தலைவர் | செயலர் | பொருளாளர் |
| | | | சிறுவர் இல்லக்குழு தலைவர் |



படிப்பகம்

www.padippakam.com

(20 ஆம் பக்க தொடர்ச்சி)

எனில், உங்களுக்குப் பதிலாக மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பை இறைவன் வழங்கி விடுவான்.

42. மக்காவில் இருந்த இறை நிராகரிப்பாளர்கள் அண்ணல்நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்தே தீர வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்கள். கொலை செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த அதே இரவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து புறப்பட்டு 'தௌர்' குகையில் மூன்று நாட்கள் மறைந்திருந்து, பின்னர் மதீனா நோக்கி ஹிஜ்ரத் செய்த சந்தர்ப்பத்தைப் பற்றி இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அப்போது அந்தக் குகையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் அபூபக்கர் (ரலி) மட்டுமே இருந்தார்கள்.

(தொடரும்)


# THOUGHT PROVOKING ISLAMIC BOOKS

| | | | |
|---|---|---|---|
| A SHORT HISTORY OF THE REVIVALIST MOVEMENT IN ISLAM | - | SYED ABUL ALA MAUDUDI | 22.00 |
| A TREASURY OF HADITH AND SUNNAH | - | DR. MAZHAR U. KAZI | 35.00 |
| ALL ABOUT SALAT | - | DR. MAZHAR U. KAZI | 20.00 |
| AFTER SECULARISM WHAT? | - | MAZHARUDDIN SIDDIOUI | 5.00 |
| AN INTRODUCTION TO THE ISLAMIC CIVILE CODE | - | DR. ABDUL MUGHANI | 20.00 |
| BANKING WITHOUT INTEREST | - | DR. M. NIJATULLAH SIDDIQUI | 35.00 |
| BATTLES BY THE PROPHET | - | S. AMEENUL HASAN RIZVI | 40.00 |
| BIRTH CONTROL | - | SYED ABUL ALA MAUDUDI | 40.00 |
| COME LET US CHANGE THIS WORLD | - | SYED ABUL ALA MAUDUDI | 20.00 |
| CONVOCATION ADDRESS | - | SYED ABUL ALA MAUDUDI | 0.50 |
| CORRESPONDENCE BETWEEN MAULANA MAUDUDI & MARYAM JAMEELA | - | | 10.00 |
| DEVOTED COMPANIONS | - | MAEL KHAIRABADI | 22.00 |
| DESTINTY & FATALISM | - | SYED ABUL ALA MAUDUDI | 4.00 |
| DOWRY AND ISLAMIC SOCIAL SYSTEM | - | PROF. UMAR HAYAT KHAN GHOURI | 10.00 |
| ECONOMIC ENTERPRISES IN ISLAM | - | DR. M. NEJATULLAH SIDDIQUI | 23.00 |
| EDUCATION IN EARLY ISLAMIC PERIOD | - | DR. ZAFAR ALAM | 15.00 |
| ETHICAL VIEWPOINT OF ISLAM | - | SYED ABUL ALA MAUDUDI | 10.00 |
| EITQUETTES OF LIFE IN ISLAM | - | MOHAMMED YOUSUF ISLAHI | 100.00 |
| EVERY MAN'S GUIDE TO HAJ & UMRAH | - | ABDUL AZIZ KAMAL | 40.00 |

**ENGILISH, URDU CATELOGE MAY BE OBTAINED FREE FROM**

**Markazi Maktaba Islami**

1353, Chitli Qabar, DELHI - 110 006.

Phone: 3262862 3277724. Fax: (011) 6820975


## கொரியாவில் இஸ்லாம்

தென் கொரியாவில் வசிக்கும் மக்களை இஸ்லாம் ஈர்த்து வருகிறது. சமீப ஆண்டுகளில் ஏறத்தாழ 10,000 பேர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். குன்ஜாவ் எனும் கிராமத்தைச் சேர்ந்த 3,000 பேரும் இதில் அடங்குவர். அந்தக் கிராமத்தில் ஒரு இஸ்லாமிக் சென்டர், ஒரு பள்ளிவாசல், ஓர் இஸ்லாமிய நூலகம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. இஸ்லாமியப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க புதிய முஸ்லிம்கள் முயன்று வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com


With the Best Wishes of:

# FARIDA GROUP

Manufacturers and Exporters of:

**Full Shoes, Shoe Uppers, & Finished Leathers**

## FARIDA PRIME TANNERY

11, Dr. T.V. Road, (Off: Spurtank Road),
Chetpet, **Madras - 600 031.** INDIA.
Phone: 826 8683, 826 1598, 826 1238
Fax: 826 7349 Telex: 041-6884 FPT IN

## FARIDA SHOES LIMITED

Phone: 641 1363, Fax: 641 2653 & TLX: 041-24108

## FARIDA CLASSIC SHOES LIMITED

Phone: 641 1220, Fax: 641 2187 & TLX: 041-24144

936, Periyar E.V.R High Road,
**Madras - 600 084.**
INDIA




படிப்பகம்

www.padippakam.com

# வந்துவிட்டது கோடை விடுமுறை

இக்வான் அமீர்

சுட்டெரிக்கும் வெய்யிலுடன் கோடை ஆரம்பமானது. கூடவே குழந்தைகளுக்கும் விடுமுறை வேறு. இதுவரை பள்ளி, படிப்பு, தேர்வு என்று மூழ்கியிருந்த குழந்தைகள் கோடை விடுமுறையில் அடிக்கும் 'லூட்டி' தாள முடியாது. சிலர் வெய்யிலில் அலைந்து, திரிந்து நோயையும் வரவழைத்துக் கொள்வார்கள். இச்சூழலில், பெற்றோர் சற்று ஆலோசித்து சில முன்னெச்சரிக்கை திட்டங்களை தயாரித்துக் கொண்டால் விடுமுறை நாட்களை இன்பமயமாக்கலாம்!

**செய்ய வேண்டியவை:**

'விடுமுறையை எப்படி கழிப்பது?' — என்று பெற்றோர் குழந்தைகளுடன் கலந்து ஆலோசித்து ஒரு திட்டம் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதற்கு கீழ்க்கண்ட முறைமையை பின்பற்றலாம்:

1. தொன்மை வாய்ந்த வரலாற்று இடங்களுக்கு சுற்றுலா.
2. சுற்றத்தார் அல்லது நண்பர்களின் இல்லங்களுக்குப் பயணம்.
3. உள்ளரங்கு விளையாட்டுகள்.
4. வெளியரங்கு விளையாட்டுகள்.

வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்வது, சென்றுபோன சமுதாயங்களின் வாழ்வியலை புரிந்து கொள்ள பெரிதும் உதவும். அதன் மூலம் வருங்கால சமுதாயத்தை சீர்திருத்திக் கொள்ளும் படிப்பினைகளும் குழந்தைகளுக்குக் கிடைக்கும். வெறும் ஏட்டுச் சுவடிகளில் கற்றிருந்த செய்திகளை நிஜமாக காணும்போது அது குழந்தைகளின் அறிவை இரட்டிப்பாக்கும். இத்தகைய இடங்களுக்கு சுற்றுலா செல்வதை குழந்தைகளுக்கு முதலிலேயே அறிவிப்புச் செய்து ஆவலூட்ட வேண்டும். முடிந்தால் செல்லவிருக்கும் இடங்களைக் குறிக்கும் தகவல்கள் அடங்கிய புத்தகங்களையோ, கையேடுகளையோ வாங்கித் தரலாம். இது உணர்வுபூர்வமாய் குழந்தைகளை வரலாற்றில் நுழையச் செய்யும்.

**பிக்னிக்**

தொலைதூர பிரதேசங்களுக்கு குழந்தைகளை சுற்றுலா அழைத்துச் செல்ல இயலாதோர் பக்கத்திலிருக்கும் ஏதாவதொரு இடத்திற்கு பிக்னிக் அழைத்துச் சென்று நாள் முழுக்க மகிழ்ச்சியுடன் இருக்கலாம். இதுகூட வெளியூர்களுக்கு சுற்றுலா செல்வதற்கு இணையான இன்பத்தைத் தரும்.

குழந்தைகளை பிக்னிக் அழைத்துச் செல்லும்போது சர்வ ஜாக்கிரதையுடன் இருப்பது முக்கியம். பிக்னிக் போகும் இடங்களில் எப்படியும் நீர்நிலைகள் இருக்கும். நீரில் விளையாட, நீந்த, பறவைகளைக் காண குழந்தைகளுக்கு ஆவல் ஏற்படும். எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைகள் நீரில் விளையாடவோ, குளிக்கவோ அனுமதிக்கவே கூடாது. அவ்வாறே, மரங்களில் ஏறி விளையாடுவதும் ஆபத்தில் முடியும். இது போன்ற செயல்களில் ஈடுபடாமல் குழந்தைகளை எச்சரிக்க வேண்டும். காலைப் பொழுதின் மகிழ்ச்சி பிக்னிக்கிலிருந்து திரும்பும்போது இருத்தல் இன்றியமையாதது.

**உறவினர் இல்லங்களுக்கு...**

'போக - வர' இருப்பதே உறவுமுறை எனப்படும். நவீன அறிவியல் வளர்ச்சி தந்த, தகவல் தொடர்பு சாதனங்கள் வீட்டோடு சிறைப்படுத்தி உறவுமுறைகள் பேணுவதை பெரும் சிரமமாக்கிவிட்டுள்ளன. பக்கத்திலிருக்கும் உறவினர் இல்லத்திற்கும் செல்ல நேரம் கிடைக்காமல் சிரமப்படுவோர் ஏராளம். அதனால் குறைந்தது விடுமுறை காலங்களிலாவது குழந்தைகளை உறவினர் இல்லங்களுக்கு அழைத்துச் சென்றும், அங்கிருந்து குழந்தைகளை தம் இல்லங்களுக்கு அழைத்து வந்தும் உறவுமுறையைப் பலப்படுத்திக் கொள்ள இத்தகைய பயணங்கள் பயன்படும்.

குழந்தைகளை உறவினர் அல்லது நண்பர்களின் இல்லங்களுக்கு அனுப்பும் போது புதிய இடத்தில், புதிய சூழலில் எப்படி நடந்து கொள்வது என்று அறிவுறுத்தி அனுப்ப வேண்டும். 'ரோமிலிருக்கும்போது ரோமானியனாக இரு!' என்பதைப் போல், செல்லும் இடங்களுக்கு ஏற்ப குழந்தைகள் பழகிக் கொள்ள வேண்டும். சொந்த வீட்டு வசதிகளை செல்லும் இடங்களிலும் எதிர்பார்க்கக் கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

**உள்ளரங்கு விளையாட்டுகள்:**

கோடை வெய்யிலில் குழந்தைகள் அலைந்து உடலை கெடுத்துக் கொள்ளாமலிருக்க சில உள்ளரங்கு விளையாட்டுகளில் அவர்களை ஈடுபடுத்தலாம். கேரம், வார்ட் பில்டிங், லாடர் போன்ற ஆட்டங்களை கற்றுத் தரலாம். நேரம் கிடைக்கும்போது பெற்றோரும் இத்தகைய ஆட்டங்களில் கலந்து கொண்டால் அது குழந்தைகளை பெரிதும் மகிழ்வூட்டும்.

மாலை நேரங்களில் குழந்தைகளை விளையாட்டுத் திடல்களுக்குச் சென்று விளையாட அறிவுறுத்த வேண்டும். கால்பந்து, வாலிபால், பேட்மின்டன் போன்ற விளையாட்டுகளும், பாக்ஸிங், கராத்தே, சிலம்பாட்டம் போன்ற தற்காப்பு கலைகளும் கற்றுக் கொள்ள கோடை விடுமுறையைப் பயன்படுத்தலாம். மன உறுதியையும், துணிச்சலையும் இவை வளர்க்கும். இதற்கு தேவையான சாதனங்களையும், ஏற்பாடுகளையும் பெற்றோர் மகிழ்ச்சியுடன் செய்து தரவேண்டும்.

**இறுதியாக:**

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு முக்கிய விஷயத்தையும் மறக்கலாகாது.

என்னதான் விடுமுறையாக இருந்தாலும் படிப்புடனான தொடர்புகளை எந்நிலையிலும் துண்டிக்கக்கூடாது. தினமும் ஒரு குறிப்பிட்ட காலம் படிப்பதற்கு வசதியாக ஒதுக்குவதோடு, அதற்காக கால அட்டவணையையும் வரைந்து கொள்ள பெற்றோர் வழி காட்ட வேண்டும். பழைய பாடங்களை நினைவு படுத்தவும், புதிய வகுப்புப் பாடங்களை முன்னமே படிக்கவும் வலியுறுத்த வேண்டும். இப்படி விளையாட்டும், படிப்புமாய் குழந்தைகள் கோடை விடுமுறையை சரியான முறையில் பயனாக்கிக் கொள்வதே புத்திசாலித்தனம்!

**இந்தக் கோடையில் முஸ்லிம் மாணவர்களுக்கு ஒரு 'ஜில்' செய்தியும் உண்டு.**

**சென்னை, திருச்சி, வேலூர், உமராபாத் போன்ற நகரங்களில் கோடைக் கால இஸ்லாமியப் பயிற்சி வகுப்புகள் இலவசமாக நடத்தப்படுகின்றன. முஸ்லிம் மாணவர்கள் இந்த வகுப்புகளில் கலந்து கொண்டு பெரும் பயன்பெறலாமே!** ●

அடுத்த இதழில்...

**இந்திய முஸ்லிம்களின் பின்னடைவு**

அதிர்ச்சியூட்டும் ஓர் அலசல்

போன்: 644 27 57

"அமைந்தகரை என்றதுமே நினைவிற்கு வருவது"

**அலங்கார் சில்க் பேலஸ்**

687, பூந்தமல்லி ஹைரோடு, அமைந்தகரை, சென்னை - 29.

☎: 568056, 583288

ஹுசைனியா ஜுவல்லர்ஸ்

**✻ தங்கம் ✻ வைரம் ✻ வெள்ளி**

**151, N.S.C.** போஸ் ரோடு, சென்னை - 600 079.


படிப்பகம்

www.padippakam.com

# தீப்பூக்கள்

எம். அமீர் அல்தாப்

இறைவா'.
உன் சொர்க்க பூமியிலா
இப்படியொரு சோதனை?
இலட்சங்களை செலவிட்டு
இறையில்லத்தைக் காண்பதையே
இலட்சியமாய்க் கொண்டவர்க்கு
இப்படியொரு சோதனையா?

இறைவா!
உன் புனித பூமியில்
இரத்தமே சிந்தக்கூடாது
என்பதாலா
இப்படியொரு கரிப்பு...!
கருணையாளனே!
இதன் இரகசியத்தை நீயே அறிவாய்!

நம்ரூத்
உன் நண்பர் இப்ராஹீமை
நெருப்பிலே சோதித்தான்
உன் ஏற்பாடு அது...!
மினாவின் நெருப்பால்
உன் அடியார்களையும்
நண்பர்களாக்கிக் கொண்டாயோ?

மினா நெருப்பில்
ஹாஜிகள் எனும் தங்கங்களை
புடம் போட்டவனே!

சுவனத்துச் சோலைகளில்
அந்தப் புடம் போட்ட தங்கங்களுக்கு
நிரந்தர ஃபிர்தௌசைக் கொடு!

அரஃபா வெயிலை
அவர்கள் தாங்கமாட்டார்கள்
என்பதாலா
அந்த மஞ்சள் தணலில்
ஒரு ஒத்திகை நடத்தினாய்...!

மஹ்ஷரின் வெம்மையை
இம்மையில் காட்டிட
இப்படியுமா ஒரு ஒத்திகை...!

இறைவா!
ஹஜ்ஜை முடிக்குமுன்
இப்படியொரு முடிவா?
உன்திருமுன் வருவதற்கு
உன்னைச் சந்திப்பதற்கு
அவசரம்... அவசரம்
அது உனக்கா? அவர்களுக்கா?

மினாவின் நெருப்புக்கு
எரிந்தது கூடாரங்களும்
உன் அடியார்களும் மட்டுமல்ல
எங்களது இதயங்களும் தான்.

கலங்கியது
ஹாஜிகளின் கண்கள் மட்டுமல்ல
முந்நூறு கோடி முஸ்லிம்
கண்களும்தான்!

இறைவா!
மினா நெருப்பில்
பூத்த மலர்களாம்
அந்தத் தீப்பூக்களை
மறுமையில்
மணக்கச் செய் ரஹ்மானே!




படிப்பகம்

www.padippakam.com


Phone: Off: 589387
Resi: 619826

**NOWMAN TRADING CO.,**

67, WUTHUCATTAN STREET,
PERIAMET,
CHENNAI - 600 003.

**SOUTH EAST CONSTRUCTIONS**

CHARTERED, CIVIL ENGINEERING CONSULTANTS & CONTRACTORS

63, Akbar Sahib Street, Triplicane,
CHENNAI - 600 005. ☎ 8549891, 8542063

**BUILDING A BETTER SHELTER**

**22 ct தங்கம், வைரம், வெள்ளி நகைகள்**



PRINCE
JEWELLERY

Panagal Park Madras - 600 017.
Phone: 4346783, 4347493

நகை சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்

"நீங்கள் மனம் தளர்ந்து விடாதீர்கள். கவலைப்படாதீர்கள். நீங்கள் இறைநம்பிக்கையுடையோராயின் நீங்களே மேலோங்குவீர்கள்!"

(திருக்குர்ஆன் 3:139)

**ஆஃபாக் லெதர்ஸ்,** சென்னை - 112




படிப்பகம்

www.padippakam.com



■ ஸ்பிக்.என்.ரவீந்திரன்



கோடைகால வெயிலின் உக்கிரம்... அந்த இரவுப் பொழுது அனலாய் தகித்தது.

பணக்காரர்கள் குளிர் சாதன அறையில் படுத்திருக்க... ஏழை எளியவர்கள் வீட்டு முற்றத்தில்... திண்ணைகளில் பனை ஓலையால் விசிறியபடி படுத்திருந்தார்கள்.

மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. முஸ்தபா முகம் கழுவி தலைசீவி பணிக்குரிய சீருடையுடன் இரவு வேலைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அறுபதைத் தாண்டியவர்... ஓய்வு பெற்ற போலீஸ்காரர். கரைபடியாத மனதுக்கு... கரத்துக்கு சொந்தக்காரர். இறைபாதையில் இருந்து அணுவளவும் பிசகாமல் வாழ்கிறவர்.

குடும்பநிலை... ஓய்வுக்குப் பிறகும் பணிக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். பணிக்காலத்தில் கைநீட்டி காசு வாங்கியிருந்தால் இன்று எப்படியோ இருந்திருக்கலாம். அவர் அதை விரும்பினார் இல்லை. மறுமை நாளில் வல்ல இறைவன் முன் அப்பழுக்கற்றவராக நிற்க எண்ணினார்.

நகரின் பெரிய தொழிற்சாலையில் காண்டிராக்ட் நிறுவனம் மூலம் காவலர்பணி. ஊதியம் குறைவு என்றாலும் உழைத்து வாழும் திருப்தி கிடைத்தது. இறைவன் திருவருளால் மகன் பாஷாவுக்கு மட்டும் ஒரு வேலை கிடைத்துவிட்டால் பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்கிற நினைப்பு. ''வாப்பா...'' மகன் பாஷாவின் குரல் கேட்டு திரும்பினார் முஸ்தபா.

''நான் சொன்ன விஷயம்...'' பாஷா இழுத்தான்.

''என்ன பாஷா...?''

''அதுதான் பத்தாயிரம்...''

முஸ்தபா முகம் மாறினார்.

''நான்தான் சொல்லிவிட்டேனே! அப்படி ஹராமான செயல் நமக்குத் தேவையில்லை...''

பாஷா தன் குரலை உயர்த்தினான்.

''எது ஹராம்... உங்களுக்கு மட்டும் எல்லாமே ஹராம்தான். இனிக்கு, படிச்ச படிப்புக்கு மதிப்பு இல்லை வாப்பா... பணம்... பணத்துக்குத்தான் மதிப்பு... பணம் இல்லாவிட்டால் எதுவுமே நடக்காது...''

''நடக்கும் மகனே... அந்த ஏகப்பரம் பொருள் மனது வைத்தால் எதுவும் நடக்கும்...''

''இப்படி பேசிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். ஒன்றும் நடக்கப் போவது இல்லை. பத்தாயிரம் கேட்கிறாங்க. உடனே வேலை... பணம் இப்ப இல்லாட்டிகூட பரவாயில்லை. என்னால தவணைக்கு பணம் வாங்கிவிடமுடியும்''

முஸ்தபா அதிர்ந்து போனார்.

''பாஷா... இது என்ன பேச்சு.. லஞ்சம் கொடுப்பதே தப்பு... வேண்டாம் என்கிறேன். நீ வட்டிக்கு பணம் வாங்கட்டுமா என்கிறாயே. அறியாமையின் ஆகக் கீழ்படித்தரத்துக்குச் சென்றுவிடாதே...

'லா இலாஹா இல்லல்லாஹ்' என்ற ஒப்பற்ற கலிமாவை ஒப்புக் கொண்டவர்கள் நாம். இக்கலிமா மீது விசுவாசம் கொண்டவன் தன் உள்ளத்தில் பரிசுத்தத்தையும் நல்ல நடத்தையையும் கொள்பவனாக இருக்க வேண்டும். இது தவிர நம் நன்மைக்கும் விமோசனத்திற்கும் வேறு வழியே கிடையாது. உன்னுடைய இந்த இழிவான செயலை இறைவனும் விரும்ப மாட்டான்... நானும் விரும்பவில்லை...'' சொல்லிவிட்டுப் புறப்பட எத்தனிக்க...

''இப்படி பேசியே என் வாழ்வை கெடுத்திடுங்க. நியாயம்... நேர்மை... எல்லாம் பேசுவதற்குதான் உதவும். வாழ்க்கைக்கு உதவாது. இறைபக்தியோட உண்மையா உழைச்சீங்க... பலன்... வறுமைதான் மிச்சம். எனக்கு ஒரு வேலை வாங்கித் தர முடிந்ததா...''

முஸ்தபா புன்னகைத்தார்.

''இறைவன் காட்டியவழிபடி... அவன் வகுத்த கடமைகளைச் செய். எது எப்போது நடக்க வேண்டும்... எதைத் தரவேண்டும் என்பதை முடிவு செய்வது அவன் பொறுப்பு... முதலில் நல்ல முஃமினாக - நம்பிக்கையாளனாக இரு... இன்ஷா அல்லாஹ் நிச்சயம் நல்லது நடக்கும்.

அல்லாஹ்வே முஃமின்களுக்கு பாதுகாவலன் (ஆவான்). அவர்களை இருள்களிலிருந்து ஒளியின்பால் அவன் வெளிப்படுத்துகிறான் (2: 257) என்கிறது திருவசனம்'' சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார் முஸ்தபா.

இரவின் நடுநிசிப் பொழுது... ஆலை சன்னமான சப்தத்துடன் இயங்கிக் கொண்டிருந்தது. வானம் கோடை



படிப்பகம்

www.padippakam.com


இது ஒரு நவநாகரீக நகை மாளிகை

தங்கம், வைரம், வெள்ளி நகைகள்

**வி.எஸ்.ஏ.**
**ஜுவல்லர்ஸ்**

74/2, தானா தெரு, புரசைவாக்கம்,
சென்னை - 600 007. தொலைபேசி: 6425607

ஞாயிறு 9.30 A.M. - 1.30 P.M. கடை உண்டு!

**AHMED OVERSEAS CORPORATION**
TANNERS & EXPORTERS

•

Office: 2, E.V. Chetty Street, Madras - 600 003
Tannery: 150-A, Trunk Road, Valayampet, Vaniyambadi - 635 751.
Phone : 22703, 23276, 23090. Madras - Phone : 584979, 044-565086

சர்ட்டிங், சூட்டிங், சேலைகள் அலங்கார ஆடைகள்...

போன்: 24786

**இந்தியா சில்க் ஹவுஸ்**

7, ஆபீசர்ஸ் லைன், வேலூர் - 632 001.




படிப்பகம்

www.padippakam.com

மழைக்குத் தயாராகிக் கொண்டிருப்பதைப் போல் இருந்தது. காற்று துளியும் வீசியபாடில்லை... மரங்களும்... செடிகளும் சிலைபோல் நின்று கொண்டிருந்தன.

வடக்கு வாயில் காவலுக்கு நின்றார் முஸ்தபா. கூட இருந்தவர் ஆலைக்கு உள்ளே போயிருக்க... கையில் இருந்த அட்டையால் விசிறி காற்றை வரவழைத்துக் கொண்டிருந்தவர் சிந்தனை மகன் பாஷாவையே சுற்றி வந்தது...

''என் இறைவனே! பாஷாவுக்கு ஒரு நல்லவழி காட்ட மாட்டாயா?'' மனமுருக பிரார்த்தித்துக் கொண்டிருக்க...

ஆலைக்குள் இருந்து கார் ஒன்று ஒளிக்கற்றைகளை வீசியபடி வந்து நின்றது.

யாராவது அதிகாரிகள் வேலை முடிந்து போகிறவர்களாக இருக்கும் என்று எண்ணியபடி காருக்குள் உற்றுப் பார்த்தார்.

யாரும் இல்லை... டிரைவர் மட்டும் இருந்தான்.

''என்ன பாய்... என்ன பார்க்கிறீங்க?''

''யார் இருக்கான்னு பார்த்தேன்...''

''யாரும் இல்லை... உள்ளே ஒரு இயந்திரத்திலே கோளாறு... அவசரம்... இஞ்சினியரை கூட்டி வரப்போகிறேன்... சீக்கிரம் கதவை திறந்து விடுங்க...'' அவசரப்படுத்தினான்.

''பொறு தம்பி. ஏன் அவசரப்படுதே? செக் பண்ணாம வண்டியை அனுப்பக் கூடாதே...''.

அவன் சிரித்தான்.

''இதுக்கு மட்டும் குறைச்சல் இல்லை. எல்லாமே ஒழுங்கா நடந்துக்கிற மாதிரி. அவசரம்ன்னு சொல்றேன்...'' எரிந்து விழுந்தான்.

முஸ்தபா தன்னை கிண்டல் செய்தால்கூட பொறுத்துக் கொள்வார். தன் பணியை குறைகூறுவதை விரும்புபவர் இல்லை.

''முதல்லே இறங்கி டிக்கியை திறந்து காட்டு.''

''பாய் பாக்டரி அவசரம் புரியுதா... உற்பத்தியை நிறுத்த கூட நேரும். இது விளையாட நேரம் இல்லை.''

''விளையாடவில்லை. என் கடமை. டிக்கியை திற.''

''பத்து வருஷ அனுபவம். யாரும் என்னை மதிப்பு குறைச்சு பேசினதில்லை. அதிலும் இன்சினியருக்கு போகிற வண்டி.''

''அதனால் என்ன. சோதனை செய்ய வேண்டியது என் வேலை.''

''அப்படி நீங்க சோதனை போட்டு அனுப்பவும் வேண்டாம். நான் போகவும் வேண்டாம். இஞ்சினியருக்கு போன் பண்ணிடுறேன்.''

உள்ளே ஒரு மோட்டார் இயந்திரம்... புத்தம் புதிதாய்...

டிரைவர் எழுந்து டிக்கியை மூடினான்.

''பாய் என்னைப்பற்றி உங்களுக்குத் தெரியாது. நீ பார்க்கிறது அன்னாடங்காய்ச்சி வேலை. வயசான காலத்திலே கண்டுக்காதே. உன்னை கவனிச்சுக்கிறேன்.'' மிரட்டினான்.

''சே... நீ ஒரு மனுஷனா...?! சம்பளம் தர்ற கம்பெனிக்கே துரோகம் நினைக்கிறாயே... உன்னை

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழகத் தலைவர் H. அப்துர் ரகீப் அவர்களின் அறிக்கை:

## ஐக்கிய முன்னணியின் தலைவர் குறித்து

திரு. இந்திரகுமார் குஜ்ரால் அவர்கள் ஐக்கிய முன்னணியின் தலைவராகவும், பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு அன்புடன் வரவேற்கின்றது. அவரது ஒப்பற்ற தலைமையில் அமைதியும், ஆக்கமும் நிறைந்த உண்மையான தேச நலனைக் கருத்தில் கொண்டு மத மற்றும் மொழி சிறுபான்மையினருக்கு சட்டத்துக்குட்பட்ட நியாயமான, சம உரிமை கிடைத்திட பாடுபடும் அரசு அமைத்து, நாடு முன்னேற்றத்தின் பால் செல்லும் என்றும் கருதுகிறது.

21-ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கும் வேளையில், நாடு சுதந்திரம் பெற்று ஜனநாயக அரசு பொன் விழா காணும் இந்நேரத்தில் சமயச் சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் அன்பையும், அமைதியையும் நேசிக்கின்ற சக்திகள் ஒன்று திரண்டு ஆக்கப்பூர்வமான வழியில் செயல்பட வேண்டும்.

இந்நேரத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், தமிழ்நாடு தமிழ் மாநில காங்கிரசும் அதன் தலைவர் திரு. G.K. மூப்பனாரும் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து வெளியேறிய தங்கள் முடிவை மறுபரிசீலனை செய்து விரும்பத் தகுந்த சிறந்த குறிக்கோளை அடைவதற்கு முயலவேண்டும் என்றும், தி.மு.க. மற்றும் த.மா.கா. ஐக்கிய முன்னணியுடன் இணைந்து மாநில மற்றும் மத்திய நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் ஜமாஅத் எதிர்பார்க்கிறது.

சொல்லிவிட்டு இறங்க முஸ்தபாவுக்குச் சந்தேகம் வலுத்தது.

சட்டென கார் சாவியை உருவி டிக்கியை திறக்க எத்தனிக்க... அவன் முஸ்தபாவை கீழே தள்ள முயன்றான்.

எங்கிருந்து அத்தனை பலம் வந்தது என அறியாதவராய் அவனை உந்தித் தள்ளி விட்டு டிக்கியை திறக்க...

சும்மா விடக்கூடாது'' என்றவர் தொலைபேசி பக்கம் நெருங்க... சட்டையை எட்டிப் பிடித்தான் அவன்.

''பாய்!! வேண்டாம். சொன்னா கேளு... பத்தாயிரம் தர்றேன். இதை வெளியே கொண்டு கொடுத்தா நிறைய பணம் கெடைக்கும். வீணா என்னையும் மாட்டி விட்டு நீயும் சீரழிந்து போகாதே. நான் எதுக்கும் பயப்படாதவன்...''



படிப்பகம்

www.padippakam.com

பெருமானார் (ஸல்) கூறினார்கள்: ''நான் எதனைச் செய்ய வேண்டாமென்று தடுக்கின்றேனோ அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏதேனும் ஒரு விஷயத்தில் நான் கட்டளையிட்டு விட்டால் முடிந்தவரை அதனைச் செயல்படுத்துங்கள்.''

— புகாரி

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி)


# சிட்டி பேப்பர் மார்ட்

☎ 587594; 587623

ஆபீஸ்களுக்கும், அச்சகங்களுக்கும் தேவையான பேப்பர், கார்டு போர்டு மற்றும் ஸ்டேஷனரி பொருட்களை சுறுசுறுப்பாக சப்ளை செய்யும் நிறுவனம்

## சிட்டி பேப்பர் மார்ட்

*51, ஆன்டர்சன் தெரு, சென்னை - 600 001.*

# Arrow®



சமய சஞ்சீவி ஏரோமார்க் **சிரவித் தைலம்**

**Arrow Brand Oil Effective Remedy For Aches & Pains**

★ Head Ache — தலைவலி ★ Stomachache — வயிற்றுவலி ★ Cold — ஜலதோஷம் ★ Giddiness — மயக்கம் ★ Hand & Leg Swelling — கை கால் விரல்களின் வீக்கம் ★ Rashes — தடிப்பு ★ Sleeplessness — தூக்கமின்மை ★ Sprain — சுளுக்கு ★ Back Pain — முதுகு வலி ★ Body Pain — உடம்பு வலி ★ Wind Related Pains — வாய்வு சம்பந்த வலிகள் ★ Hand & Leg Pains — முழங்கை கால் வலி ★ Hip Pain — இடுப்பு வலி ★ Joints Pain — மூட்டு வலி ★ Neck Pain — கழுத்து வலி ★ Nerves Pain — நரம்பு வலி ★ Insects Bites — பூச்சிக்கடிகள் அரிப்பு, ★ Stop from Mosquitoes Bites — கொசுக்கடியிலிருந்து தடுக்கும் ★ Always keep with you in home and during travel — வீட்டிலும் பிரயாணத்திலும் அவசியம் இருக்க வேண்டியது ★ External Use only — வெளிபூச்சுக்கு மட்டிலும் பயன்படுத்தவும்.

**Available at :**

Sadik Kazura Aromatics, 17, Aarti Arcade, Opp: AVM Rajeswari Kalyana Mandapam,
86, Dr.Radhakrishnan Road, Chennai - 600 004. Phone : 8272761
Arrow International - 51, Haji Lane, Singapore 189244. Next to Arab Street. Tel.(65) 293 1757 - Fax : (297 4651)
Haniffa - Textile Pte Ltd., 104-120. Dunlop Street, Singapore
Mohamed Mustafa and Samsudin Pte Ltd., 320, Serangoon Road/145, Syed Alwi Road, Singapore.

**Middle East** விற்பனையாளர்கள் (Stockist) தேவை.




படிப்பகம்

www.padippakam.com

''நான் இறைவனுக்கு மட்டுமே பயப்படுகிறவன்.'' சொல்லிவிட்டு தொலைபேசியை சுழற்ற... அருகில் கிடந்த கட்டையால் அவர் தலையில் ஓங்கி அடித்தான் அவன்.

''யா... அல்லாஹ்...'' பெருத்த சப்தத்துடன் கீழே விழ... கதவைத் திறந்து... காரைக் கிளப்பி விரைந்தான் அந்த டிரைவர். முஸ்தபா மூர்ச்சையாகிக் கொண்டிருந்தார். ''இறைவா அவனை தப்பவிட்டு என்னைக் கடமை தவறியவனாக்கி விடாதே...'' அந்த நிலையிலும் வேண்ட... ரோந்து வந்த காவலர் ஏதோ அசம்பாவிதம் நடப்பதை உணர்ந்து விரைந்து வந்தார்.

நிலமையை அவரிடம் கூறி மயங்கிப் போனார் முஸ்தபா. அங்கு மிங்குமாய் செய்தி பறந்தது. காருடன் டிரைவர் பிடிக்கப்பட்டான். ஆனால் முஸ்தபா...

எதுவும் சொல்ல முடியாத நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருந்தார்.

ஒரு பகல் பொழுது கழிந்தும் முன்னேற்றம் இல்லை. பாஷா புலம்ப ஆரம்பித்தான். ''வாப்பா வோட நேர்மைக்கு, இறைபக்திக்கு இதுதான் பலனா?'' என அழுதான்.

காண்டிராக்டர் வந்து மருத்துவச் செலவுக்கு ஆயிரம் ரூபாயை முஸ்தபா மனைவியிடம் கொடுத்தார்.

''ஏன் வாங்கினீங்க. வாப்பா வுக்கு விலையா இது?''

''தம்பி இன்சுரன்ஸ் பணம் வேற வரும்.''

''தேவையில்லை. எங்களுக்கு வாப்பாதான் வேணும். இப்படி நிலைக்கு ஆக்கிட்டிகளே.'' சப்தித் தான்.

அவன் தாய் சாந்தப்படுத்தினாள்.

''அவர்களை எதுவும் சொல் லாதே. நடப்பதெல்லாம் அவன் செயல். அவனை நம்புவோம். பிரார்த்தனை செய்வோம்.''

''நீங்களும் வாப்பா மாதிரி தானே பேசுதீக... நேரம் புரியாம...''

''என்ன நேரம் மகனே... வாழ்க்கை என்பது ஏற்றத்தாழ்வை உடையது. இன்பத்திலேயே திளைப் பவரும் கிடையாது. துன்பத்திலேயே உழல்பவரும் கிடையாது. நமக்கு வேண்டியதை பெற ஒரேஒரு சக்தியால்தான் முடியும். அதுதான் 'துஆ'.

பிரார்த்தனை சஞ்சலங்களை அகற்றும். விதியையும் வெல்லும். இது நபிபெருமானார் (ஸல்) வாக்கு மகனே. நம்பிக்கையோடு பிரார்த் தனை செய். இன்ஷா அல்லாஹ் வாப்பா நிச்சயம் குணமாயிடுவாக...''

அவள் உறுதி, ஈமான், வீண் போகவில்லை. இரண்டாம் நாள் மாலை கண்விழித்தார் முஸ்தபா.

கண்கலங்க நின்ற குடும்பத்தினரைப் பார்த்தார். ''கவலைப்படாதீங்க. இறைவன் துணையிருப்பான்'' என்றவர்,

''டிரைவர் பிடிபட்டானா. மிஷினை வாங்கியாச்சா?'' கேட்டார்.

''அதெல்லாம் நல்லபடியாக முடிந்தது முஸ்தபா'' என்ற குரலில் முஸ்தபா நிமிர பாஷாவும் அவன் தாயும் திரும்பிப் பார்த்தார்கள்.

காண்டிராக்டருடன் சபாரி உடையில் ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

முஸ்தபா எழுந்திருக்க முயல... அவர் தடுத்து படுக்க வைத்தார்.

''உம்மா... இவர் தொழிற்சாலை தலைமை அதிகாரி'' அறிமுகப்படுத்தினான் பாஷா''

''உங்க துணிச்சலைப் பாராட்டுகிறேன் முஸ்தபா. நிறைய திருட்டு பண்ணியிருக்கிறான். உங்ககிட்டே மாட்டிக் கொண்டான். பத்தாயிரம் தருவதாக சொன்னானாமே. இந்த இயந்திரம் நம்ம இஞ்சினியர்களால் புதிதாக வடிவமைக்கப்பட்டது. வெளியே போயிருந்தா கம்பெனிக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். மற்ற கம்பெனிகள் பலன் அடைந்திருக்கும். உங்களுக்கு கம்பெனி சார்பில் ரொம்ப நன்றி.'' சொன்னவர் பார்வை பாஷா பக்கம் திரும்பியது.

''தம்பி, உங்க அப்பாவோட நேர்மைக்கு பரிசு என்ன தெரியுமா? அவர் மகனுக்கு அதாவது உனக்கு கம்பெனியில் நிரந்தர வேலை கொடுக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது. உங்க அப்பாவைப் போலவே, நாணயமா, நேர்மையா நீயும் உழைப்பாய் என்கிற நம்பிக்கையில்... எங்க நம்பிக்கை வீண் போகாதே...'' கேட்டார். மலைத்துப் போனான் பாஷா.

அவன் எதிர்பார்க்கவில்லை.

பணத்தால், சிபாரிசால் வேலை கிடைப்பது அந்த ஆலையை பொறுத்த மட்டில் கடினம். கைநிறைய ஊதியம் தரும் ஸ்தாபனம். தன் படிப்புக்கு, தகுதிக்கு, ஆசியாவின் அந்த பெரிய நிறுவனத்தில் வேலை கிடைப்பது என்றால்...

நிச்சயம் அதற்குக் காரணம், தன் தந்தையின் நேர்மை. இறைவனின் பெருங்கருணை.

''இறைவன் மீது சத்தியமாக, நேர்மையானவனாக நல்லவனாக இறைவனுக்கு பயந்து நடப்பேன் சார்'' என்றான் தழுதழுக்க... அவர் விடை பெற்றுச் சென்றார்.

இப்போது பாஷா மெல்ல தந்தையை ஏறிட்டான். அவர் பார்வையில், பூரிப்பும், பெருமிதமும் தெரிந்தது. அவரைப் பார்க்கும் சக்தியற்று தலை குனிந்தான் பாஷா.

எவர் நேர்வழியைப் பின்பற்றுகிறாரோ அவர் வழிதவற மாட்டார். நற்பாக்கியத்தை இழக்கவும் மாட்டார். (20: 123)

## இருபுறம் வளர்ச்சி



மனித உடல் எந்தப் பக்கத்தில் வளர்கிறது? மேல்நோக்கித்தானே? ஆம்! உண்மைதான்! குழந்தை பருவத்தில் சில காலம் வரை இப்படி நிகழுவதாய் கூறலாம்.

கீழ் - மேல் புறங்களில் யாருக்காவது அல்லது எதற்காவது வளர்ச்சி என்பது சாத்தியம்தானா? சாத்தியம் தான். செடிகள் இப்படித்தான் வளர்கின்றன.

தாவரங்கள் வளரும்போது இரண்டு புறங்களிலும் நீண்டு வளர்கின்றன. விதையிலிருந்து செடிகள் வெளிப்படுவதை சற்று கூர்ந்தே கவனித்தால், இதை எளிதில் புரிந்து கொள்ளலாம். நீரைத் தேடி கீழ்ப்புறமாய் வேர்கள் பாய்ந்தவாறு இருக்கும். அதேசமயம், பூமியின் மேற்புறமுள்ள தண்டு பெருத்து கொப்பும் - கிளைகளுமாய் செடி மேல் நோக்கியும் வளர்கிறது



படிப்பகம்

www.padippakam.com

# மாட்ரிட்
## ஒரு மகத்தான

நற்செயல்கள் யாவும், எப்போதும் வரவேற்கப்பட வேண்டியவை. மனம் திறந்து பாராட்டப்படவும் வேண்டும். அப்போதுதான் அத்தகைய செயல்கள் மென்மேலும் அதிகரித்தும் கொண்டிருக்கும். உலகமே புகழ்ந்து பாராட்டக் கூடிய அளவில் - முக்கியமாக இஸ்லாமிய உலகம் மறக்க முடியாத விதத்தில் - ஸ்பெயின் நாட்டின் தலைநகரமான மாட்ரிட் நகரின் மையப்பகுதியில் - 1994 ஆம் ஆண்டு ஒரு இஸ்லாமிய கேந்திரம் (Islamic Centre) திறந்து வைக்கப்பட்டது.

ஸ்பெயின் என்றதுமே அங்கு முஸ்லிம்கள் அரசோச்சிய ஆயிரம் ஆண்டு பொற்காலம் ஞாபகத்துக்கு வராமல் போகாது. கி.பி.15-ம் நூற்றாண்டில் கத்தோலிக்க மன்னனான பெர்டினாண்டும், அவர் மனைவி இஸபெல்லாவும் நடத்திய கொடூரச் செயல்களின் காரணமாக இஸ்லாமியர்கள், ஸ்பெயினில் நிலை கொண்டிருந்த, கொர்தோபா, ஸெவில், கிரனேடா மாநகரங்களை காலி செய்துவிட்டு வெளியேற நேர்ந்தது.

முஸ்லிம்கள் வெளியேறினார்களேயன்றி ஒன்பது நீண்ட நூற்றாண்டுகளாக அவர்கள் அங்கே பதித்த இஸ்லாமிய கலையம்சங்களை 500 ஆண்டாகியும், இன்னும் கிறிஸ்தவர்களால் அடியோடு அகற்றிவிட முடியவில்லை. இஸ்லாம் நடத்திய சாதனைகளின் வரலாற்று ஆதாரங்களை ஸ்பானிய மண் இன்னும் மறந்துவிடவில்லை. ஏன் ஐரோப்பா எங்கிலும் இன்று வியாபித்திருக்கும், கல்வி, விஞ்ஞானம், மருத்துவம், ரசாயன துறை யாவற்றிலும் கிடைத்திருக்கும் முன்னேற்றத்தின் சுவடுகளை ஆராய்பவர்கள் அவை இறுதியில் முஸ்லிம் ஸ்பெயினில் போய் முடிவதை காண்கிறார்கள். அத்தகையோர் பரந்த மனப்பான்மை கொண்ட பெருந்தன்மையாளர்களாகையால், தாங்கள் கண்ட உண்மைகளை, மறுக்கவோ, மறைக்கவோ முயலவில்லை. 'ஐரோப்பிய நாகரிகத்தின் தொட்டில், முஸ்லிம் ஸ்பெயினில் கட்டப்பட்டது என்றும், கிரேனேடா நகரின் வீழ்ச்சி, ஐரோப்பியர்கள் அழுது புலம்ப வேண்டிய நிகழ்ச்சி என்றும் வர்ணித்துள்ளனர்.'

அங்குள்ள பள்ளிவாசல்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டபோதிலும், கொர்தோபா நகரிலுள்ள ஜும்மா மஸ்ஜித், கிரெனெடா நகரிலுள்ள 'அல்லாஹ்ம்பரா' மாளிகை இன்றும், சுற்றுலாப் பயணிகளால் பார்த்து பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஸெவில் தாலிடோ, கிரனேடா மாநகர்கள் எங்கிலுமுள்ள கட்டிடங்கள் - இஸ்லாமிய கட்டிடக்கலை மிளிர, எந்தவித உருவமும் இல்லாத சித்திரப் பூக்கோலங்களுடன் திகழ்கின்றன. ஸ்பானிய மக்கள் இன்றும் பேசும் மொழியில் - அவர்களின் பழக்கவழக்கங்களில் - இஸ்லாமிய நினைவுச் சின்னங்கள் தங்கி விட்டன.

காலம் மாறும், சரித்திரம் திரும்பும். இது மனித அனுபவம் கண்ட உண்மை. தற்போது ஸ்பெயினில் இஸ்லாம் மீண்டும் மறுமலர்ச்சி காண ஆரம்பித்திருக்கிறது. ஒரு புதிய யுகத்தின் ஆரம்ப சின்னமாக இப்போது ஸ்பானிய தலைநகரமான மாட்ரிட் மாநகரின் மையப்பகுதியில் எழும்பியிருப்பதுதான், 'மாட்ரிட் இஸ்லாமிக் சென்டர்!'

12000 சதுரமீட்டர் கொண்ட பரப்பளவு. அதில் 2700 சதுர மீட்டர்களை ஆக்கிரமிக்கும் கட்டிடங்கள். மக்காவை முன்னோக்கியவாறு, மிக கம்பீரமாக, நகரின் பிரதான சாலையை அடுத்துள்ள இடத்தில், நிமிர்ந்து நிற்கிறது இந்த இஸ்லாமிய கேந்திரத்தின் மஸ்ஜித்.

மாட்ரிட் நகரின் சரித்திர பிரசித்திபெற்ற மையப்பகுதியின் பெயர் 'பிளாஸா மேஜர்' என்பது. அதில் கட்டப்பட்டிருப்பது மன்னரின் மாளிகை. அதிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் நிறுவப்பட்டிருப்பதுதான் மாட்ரிட் இஸ்லாமிய கேந்திரம். இது இப்போது மாட்ரிட் மாநகருக்குள் ஒரு புதிய துணை நகரம் போல் காட்சியளிக்கிறது. M-30 என்ற பெயருடைய பிரதான சாலை மாட்ரிட்

### 'பலே' சிறுவன்!



'மன பலமிருந்தால் போதும்! உடல் ஊனம் என்ன செய்யும்?' - இப்படி கேட்பதுடன் நில்லாமல் செயலிலும் நிரூபித்து வருகிறான் பதினொரு வயது அஷ்ரப் அப்துல் ரஷித்.

சிங்கப்பூர் ஆரம்ப பள்ளியில் 6 ஆம் வகுப்பு படிக்கும் அஷ்ரப் பிறவியிலேயே உடல் ஊனமானவன். அவனுக்கு இடது முழங்கை கிடையாது. குழந்தை பிராயத்திலிருந்தே கால்பந்து என்றால் படு ஆர்வம். பந்தைக் கடத்திக் கொண்டு ஓடி 'கோல்' போட இரு கைகளும் அவசியம். அப்போதுதான் உடலை சமநிலைப்படுத்தி வேகமாய் ஓட முடியும்.

ஆனால், அஷ்ரப் தனது உடல் ஊனத்தை நினைத்து வருந்திக் கொண்டிருக்கவில்லை. அவனது தன்னம்பிக்கை, வாழ்வில் வெல்ல வேண்டும் என்ற விடா முயற்சி உடல் ஊனத்தை புறமுதுகிடச் செய்தது.

அஷ்ரப் ஆரம்பத்தில் உள்ளூரில் நடக்கும் பகுதிவாரியான போட்டிகளில் கலந்து கொள்ளலானான். படிப்படியாய் முன்னேறி சிங்கப்பூர் 'அண்டர்-12' கால் பந்து குழுவின் தலைவனாய் தேர்ந்தெடுக்கப்பட்டான். அத்துடன் அதற்கு வெற்றி மேல் வெற்றிகளும் தேடித் தந்தான். அதனால் அவனது புகழ் அண்டை நாடுகளிலும் பரவியது. வெகு விரைவிலேயே அவன் தனது குழுவினருடன் மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளலிருக்கிறான்.

சர்வதேச வீரர்கள் புருவங்களை உயர்த்துமளவுக்கு விளையாட்டில் சாதனைகள் படைத்துவரும் 'ஸ்போர்ட்ஸ் பாய்' அஷ்ரப் மேசைப் பந்தாட்டம் (டேபிள் டென்னிஸ்), கூடைப்பந்தாட்டம் (பாஸ்கட் பால்), தடகளம் ஆகிய விளையாட்டுகளிலும் வல்லவன்.

'சாதிக்க வேண்டும் என்ற எண்ணமிருந்தால் எதுவும் முடியும்! - இதற்கு அஷ்ரப் ஓர் உதாரணம்!' என்கிறார் பயிற்சியாளர் ஆர்.கோவிந்தராஜன்.


படிப்பகம்

www.padippakam.com

# மாநகரில் இஸ்லாமிய கேந்திரம்

நகரின் அனைத்து குடியிருப்பு பிரதேசங்களையும் இணைப்பது. அந்த சாலையின் அருகில்தான் 'கேந்திரம்' அமைந்திருக்கிறது.

இந்த கேந்திரத்தின் மஸ்ஜித் கட்டிட அமைப்பில் அரப் - ஸ்பானிய கலப்பு கட்டிடக் கலைப் பின்னப்பட்டிருப்பதையும் உருவமில்லாத பூவேலைப்பாடுகளையும் காண்கிறோம். மஸ்ஜிதின் உச்சியில் வழக்கமாக கீழ்திசை பள்ளிவாயில்களின் உச்சியிலிருக்கும் டோம், (கும்பா) காணப்படவில்லை. மாறாக சதுர வடிவில் 'மினாரா' தென்படுகிறது.

அதிலிருந்து தினமும் ஐந்து வேளை ஒலிபெருக்கி மூலம் காற்றில் கலந்து வரும் பாங்கு ஒலி, ஒரு மன நிறைவையும் அமைதியையும் தருகிறது. கேந்திரத்தினுள் சுற்றிப் பார்க்கையில், ஏதோ ஒரு இஸ்லாமிய உலகிற்குள் நுழைந்து விட்டது போன்ற மனப்பிரமை ஏற்படுகிறது. எங்கு நோக்கினாலும், உருவமேயில்லாத பூவேலைப்பாடுகள், குர்ஆன் வாசகங்கள் மக்கா நகரை உங்களுக்கு நினைவூட்டும். மேலும் அன்றாடம் இங்கு நடக்கும் சடங்கு, சம்பிரதாயங்களும் மாட்ரிட் நகரத்தில் வசிக்கும் முஸ்லிம்களுக்கு, தங்கள் தாயகத்திற்கு வந்துவிட்டது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

இக்கேந்திரத்தின் இப்போதைய இயக்குநராக இருக்கும் அப்துல் அஜீஸ் ஸர்ஹான் கூறுகிறார்:

''எங்கள் நோக்கம் ஸ்பெயினில் வசிக்கும் முஸ்லிம்களுக்கு இறைவணக்கம் செய்வதற்கான மஸ்ஜிதை தருவது; தினமும் குர்ஆன் ஓதப்படுவதை கேட்க வைப்பது; குர்ஆனைக் கற்று, கற்றதை அன்றாடம் நடைமுறைப்படுத்தும் பயிற்சிக் கூடங்களை தருவது; அத்துடன் ஸ்பெயினில் வசிக்கும் முஸ்லிம் சமூகத்தினருக்கு தேவையான திருமணங்கள் மற்றும், கபர்ஸ்தான வசதிகள், கலந்துறவாடும் கருத்தரங்குகள், ஆய்வு மன்றங்கள், சொற்பொழிவு கூடங்கள், பள்ளிக்கூடங்கள் முதலியனவற்றை தருவது. இந்த காரியங்களுக்கான கட்டிட வசதிகளை இங்கு ஏற்கனவே அமைத்து தந்து இதனை தன்னிறைவு பெற்ற இஸ்லாமிய கலாசார கேந்திரமாக அமைத்துள்ளோம்.''

இதில் ஒரே சமயத்தில் ஆயிரம் முஸ்லிம்கள் கூடி நின்று தொழுவதற்குரிய ஹால், (200 பெண்களும் நின்று தொழுவதற்கு தனியிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது). இதுதவிர ஒரு பெரிய நூல் நிலையம் - விஸ்தாரமான ஆர்ச் வளைவுகளைக் கொண்ட அறைகளுடன், கம்ப்யூட்டர் மூலம் புத்தகங்களை அடுக்கவும், எடுக்கவும் கூடிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தினசரி உடற்பயிற்சிக்கான ஒரு ஜிம்னாஷியம், 500 பேர் அமரும் வசதி கொண்ட கருத்தரங்கு, பொருட்காட்சி நடத்துவதற்குரிய பரந்த மண்டபம், வேளாவேளைக்கு விதவிதமான உணவுகளை வழங்கும் ரெஸ்டாரண்ட், 250 குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடம், மையித்துகளைக் குளிப்பாட்டி கபன் பொதியும் வசதிகளைக் கொண்ட அறைகள், கார்கள் மற்றும் வாகனங்களை நிறுத்துவதற்குரிய விசாலமான கார் நிறுத்துமிடம் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவை மாத்திரமின்றி இங்குள்ள மஸ்ஜிதின் இமாம், தன் குடும்பத்தினருடன் வசிப்பதற்குரிய வீட்டு வசதிகள், இக் கேந்திரத்தின் இயக்குநர், குடும்பத்தோடு வசிக்கும் வசதிகளும், செயலகத்துக்குரிய இடமும் கட்டித் தரப்பட்டுள்ளன. மொத்தத்தில் இந்த கேந்திரம் முஸ்லிம்களின் தற்போதைய தேவைகளை மட்டுமின்றி, எதிர்காலத் தேவைகளையும், மனதில் கொண்டு, அதற்குரிய வசதிகளுடன் அமைக்கப்பட்டதொன்று!

இந்த இஸ்லாமிய கேந்திரத்தின் கட்டிடங்கள் யாவும், உட்புறம் பார்க்கக் கட்டப்பட்டிருப்பதால், மாட்ரிட் நகரின் ஜனசந்தடியிலிருந்தும், சப்த ஜாலங்களிலிருந்தும் பிரிக்கப்பட்டு, தனிமையின் இனிமையை நுகரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் இறைவனை தியானிப்பதற்கும், வணங்குவதற்கும் பொருத்தமான, ஒரு லட்சிய துணை நகரமாக இந்த இஸ்லாமிய கேந்திரம் அமைந்து விட்டிருக்கின்றது.

## அரசு - முஸ்லிம் சமுதாயம் இடையே முக்கிய ஒப்பந்தம்!

ஸ்பெயின் நாடும் அங்குள்ள இஸ்லாமிய சமுதாயமும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன. ஸ்பெயின் இஸ்லாமிய கமிஷன் இந்த முயற்சியை மேற்கொண்டது. ஸ்பெயின் நாட்டில் வசிக்கும் முஸ்லிம்கள் மார்க்க கடமையைப் பேணி நடக்கும் உரிமையை இந்த ஒப்பந்தம் உறுதி செய்கிறது.

ஸ்பெயினிலுள்ள இஸ்லாமிய கமிஷன் என்பது ஸ்பெயின் இஸ்லாமிய கட்சிகளின் கூட்டமைப்பு மற்றும் ஸ்பெயின் இஸ்லாமிய சமுதாயங்கள் ஆகிய அமைப்புகள் இணைந்த ஒன்றாகும்.

முஸ்லிம்களின் வழிபாடு, கல்வி, இஸ்லாமிய நலச் செயல்பாடுகளுக்கான இடமாக பள்ளிவாசலை இந்த ஒப்பந்தம் அங்கீகரித்துள்ளது. முனிசிபல் இடங்களில் ஜனாஸா நல்லடக்கம் செய்ய இடஒதுக்கீடு செய்யவும் உரிமை வழங்கியுள்ளது.

ராணுவ சேவைகளில் இமாம்களும், மதத் தலைவர்களும் தமது கடமைகளைச் செய்ய உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியச் சட்டப்படி திருமணம் செய்வது விதி 7-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி பிறப்பு, திருமணம், மரணம் ஆகியவற்றுக்கான பதிவாளரிடம் பதிவு செய்வது கட்டாயமாகும்.

விதி 8-ன்படி ராணுவத்தில் உள்ள முஸ்லிம் வீரர்கள் வெள்ளிக்கிழமை (ஜும்ஆ) தொழுகைக்காக அருகிலுள்ள பள்ளிவாசலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மாணவர்களுக்கு மார்க்கக் கல்வி கற்பிக்க (தனியார் மற்றும் அரசு பள்ளிகளில்) பெற்றோர்களுக்கு உரிமை உண்டு. பொது பல்கலைக்கழகங்களில் இஸ்லாமியக் கல்விக்கான பாட முறையை ஏற்பாடு செய்ய இஸ்லாமிய கமிஷனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்களை அமைக்கவும் நடத்தவும் கமிஷனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 முதல் 3.30 வரை இடைவேளை கோரவும், வேலை நாட்களில் ரமளான் மாதத்தில் சூரிய மறைவுக்கு 1 மணி நேரம் முன்பு (நோன்பு திறக்கச் செல்ல) அனுமதி பெறவும் உரிமை உண்டு. இஸ்லாமிய பண்டிகைகளுக்கு விடுமுறைகள் போன்றவையும் ஒப்பந்தத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com


# Arrow ®




Registered Trade Marks

**Arrow Brand Oil**

**Effective Remedye For Aches & Pains**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

வலி உங்களைத் தாக்கும் போது
உங்களின் நம்பிக்கைக்குரிய "ஏரோ மார்க் தைலம்"
வலி நிவாரணியை உபயோகியுங்கள். அதனுடைய
அபார ஆற்றல் உடனே செயல்பட்டு வலி குணமாகும்.

முதலாவது "ஏரோ மார்க் தைலம்"
முதல் தரமானது "ஏரோ மார்க் தைலம்"
முதன்மையானது "ஏரோ மார்க் தைலம்"
சிறப்பாக விற்பனையாவது "ஏரோ மார்க் தைலம்"
போற்றத்தக்கது "ஏரோ மார்க் தைலம்"
சிறந்தது "ஏரோ மார்க் தைலம்"
நிகரற்றது "ஏரோ மார்க் தைலம்"

இந்த தைலத்தில் முக்கிய சிறப்பு எளிதாய் பயன்படுத்த
ரோல் - ஆன் மூடி பொருத்தப்பட்டுள்ளது.

**Available at:** *Arrow International, 51, Haji Lane, Singapore 189 244 (Next to Arab Street)*
***Mailing Address Crawford, P.O. Box 690. Singapore - 911 907. Tel (65) 293 1757, Fax (65) 297 4651.***
***Haniffa - Textile Pte Ltd., 104-120, Dunlop Street, Singapore.***
***Mohamed Mustafa and Samsudin Pte Ltd., 320, Serangoon Road, 145, Syed Alwi Road, Singapore.***

# SULTHAN LEATHER CORPORATION

Manufactures and Exporters of Finished Leathers

**Head Office:**
1-H, Nehrujee Road,
Melapalayam,
Tirunelveli - 627 005
☎ 25834

**Branch Office:**
5, Kattur Sadayappan St.,
Periamet, Chennai - 600 003.
Tel: Sulskin
☎ 580733

# HOTEL HIMALAYA

**BOARDING & LODGING, (Next to Star Talkies)**

**54, TRIPLICANE HIGH ROAD, MADRAS-600 005.**

**☎ 847522, 847527, 847537, 847574, 847580 Grams: "HOTHIM"**

★ அழகிய A/c மற்றும் A/c அல்லாத அறைகளில் தொலைபேசி வசதி
★ வெந்நீர் குளிர்ந்த நீர் 24 மணி நேரமும்.
★ சுவையான சைவ உணவு விடுதி; மற்றும் டிராவல் ஏஜென்ஸி வசதிகள்
★ பணிவான வரவேற்பு எங்களது சேவை!

www.padippakam.com

இதை வடிவமைப்பதற்கு அகில உலக நாடுகளிலிருந்தும் கட்டிட வரைபடங்கள் வரவேற்கப்பட்டன. மொத்தம் 445 வரைபட நிபுணர்கள் போட்டியிட்டதில், போலந்து நாட்டு கட்டிட வரைபடக் கலை நிபுணர்கள் மூவர் - ஜான் ஸர்னி, ஜலந்தாஸிங்கர், மாரிக் ஜிம்லா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

கேந்திரம் நிறுவப்பட்டதற்கான நிலத்தைப் பெற்றுத் தருவதற்கு ஸ்பெயின் மன்னர் ஜுவான் ஆதரவு தந்தார். 1976-ஆம் ஆண்டு மாட்ரிட் நகர ஆணையத்திடமிருந்து, பெயரளவுக்கு ஒரே ஒரு பிஸ்ட்டா நாணயத்தை மட்டும் விலையாக வைத்து, பட்டா முடிக்கப்பட்டது. இங்குள்ள கட்டிடங்களைக் கட்டி முடிக்க ஒரு கோடியே இருபது லட்சம் அமெரிக்க டாலர்கள் செலவாயின. இந்த தொகை முழுதும் சவூதி அரேபியாவின் ஃபஹத் மன்னரால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

''மேற்கு உலகுடன் இஸ்லாத்தை நெருங்கிவர வைப்பதுதான், இந்த கேந்திரம் அமைவதற்குரிய முழு முதற் நோக்கம். மேற்கு உலகம், இஸ்லாமியர்கள் எத்தகையவர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் என்று பூசப்பட்டுள்ள பொய்த் தோற்றம் மறைய வேண்டும்'' என்று அறிவிக்கிறார் இந்த கேந்திரத்தின் இயக்குநர் அப்துல் அஜீஸ் ஸர்ஹான்.

''இன்றைய நிலைமையில் முஸ்லிம்கள் எண்ணிக்கை ஸ்பெயினில் பெருகிக் கொண்டிருக்கிறது. வர்த்தக சந்தர்ப்பங்களை தேடி, முதலீடு செய்வதற்கு வரும் முஸ்லிம்கள், பாரம்பரியமாக இங்கு பிறந்தவர்கள், முன்னர் இழந்துவிட்ட தங்கள் தாயகத்தில் மீண்டும் வந்து குடியேறுபவர்கள், மற்றும் இஸ்லாமிய மார்க்கத்தால் கவர்ந்திழுக்கப்பட்டு வரும் மாற்று மதத்தினர் என்று பல்வேறு விதமாக முஸ்லிம்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

தற்போது 50,000 முஸ்லிம்கள் இங்கு இருக்கின்றனர். இதில் 11,000 பேர் மாட்ரிட் மாநகரில் வசிக்கின்றனர். இவர்களில் 2000 பேருக்கு மேல் பிறப்பிலேயே ஸ்பானிய முஸ்லிம்களாக பிறந்தவர்கள். அத்துடன் மாட்ரிட் நகருக்கும் இஸ்லாத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை ஏற்கனவே நாம் அறிவோம். மேட்ரிட் என்ற சொல்லே அரபு மூலம் கொண்டது. ஓடும் தண்ணீர் கொண்ட நகரம் என்பது அதன் அர்த்தம். அதற்கு ஆதாரமாக 1983-ல் 'பிளாஸா டி லாஸ் கார்லோஸ்' என்ற இடத்தை தோண்டிய போது, சுத்தமான தண்ணீர் ஓடிடும் கால்வாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதுதவிர நகர் எங்கிலும் இஸ்லாமிய பழம் சின்னங்களைக் காணலாம். நகரத்தின் சுற்று சுவரில் முஸ்லிம்களின் கைவண்ணமும், கலை வண்ணமும் தென்படும். ஏன் ஸ்பானிய மொழியில் கூட அரபு மொழி கலப்பு அதிகமுண்டு.

இஸ்லாத்தைத் தழுவும் ஸ்பெயின் வாசிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இவர்களில் சிலருக்கு வாழ்க்கையின் நீண்ட கால தேடலுக்குப் பின் கண்ட லட்சியமாக இஸ்லாம் தோன்றுகிறது. மற்றும் சிலருக்கு தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ள, தாங்களே மேற்கொண்ட இயக்கமாக அது தென்படுகிறது.

முன்னாள் ஜோஸ், இப்போதைய பெயர் அலீ (29) கூறுகிறார். ''இளமையிலிருந்தே மண்டைக்குள் திணிக்கப்பட்ட சில எண்ணங்களை அழித்து விட்டு, இப்போது கண்டு கொண்ட உண்மைகளை புகுத்திக் கொள்வதில் முனைந்திருக்கிறேன்.''

43 வயதான என்ஜினியர், முன்னாள் ஜுவான் இப்போதைய அப்துல் ஹமீத் என்ன நினைக்கிறார்?

''எனது பழைய மார்க்கத்திற்கும், புதிய மார்க்கத்திற்குமுள்ள வித்தியாசத்தை இப்போதுதான் உணர்கிறேன். நான் ஈரானில் இருந்திருக்கிறேன். ஈரானிய முஸ்லிம்கள் இறைவனுக்காக உயிரையே விட தயாராக இருப்பதைக் கண்டேன். இறைவனுக்காக தன்னையே அர்ப்பணித்து தன்னை அழித்துக் கொள்ளவும் தயாராக இருக்கும் அவர்களின் மனப்பான்மை என்னை இஸ்லாத்தின்பால் ஈர்த்தது'' என்று மனம் திறந்து சொல்கிறார்.

ஸ்பெயினில் இஸ்லாமிய கேந்திரம் அமைந்தபின்னர், லண்டன், நான்டிஸ், வியோனிஸ் (பிரான்ஸ்) ரோம், ஹாம்பர்க், ஆம்ஸ்டர்டாம், மார்பெல்லா ஆகிய நகரங்களிலும் பள்ளிவாசல்கள் புதிது புதிதாக எழும்பிக் கொண்டிருக்கின்றன. ●

**எம். எஸ்.அபூபக்கர்**

**இந்த உலகின் ஏமாற்றுக் காட்சிகளுக்கிடையே ஏகத்துவத்தின் உண்மையை உணர்வதே மிகச் சிறந்த பேறாகும்.**

**DEENSHA LODGE**
**DEENSHA SHOPPING COMPLEX**
51, THACKER'S STREET,
CHENNAI - 600 084.
PH: 6422366, 6422766
FAX: 044-6422836
*From Egmore 10 minutes*

புதிய **M.M.H. லாட்ஜ்**
59 , அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாதரிப்பேட்டை மெயின் ரோடு
சென்னை - 600 002. Ph: 6422766 P.P.
சிங்கில் ரூம் @ Rs.75/- per day
டபுள் ரூம் @ Rs.100/- per day
டார்மிட்டரி @ Rs.50/- per day
*எக்மோரிலிருந்து செல்வதற்கு 5 நிமிடம்தான்*


படிப்பகம்

www.padippakam.com



# சிறுகதை எழுதுவது!

மழலைப்பிரியன்

ரியாஸ் இப்போது பத்து, பதினைந்து கதைகளை எழுதிவிட்டான். மாமா அவனிடம் ஒரு புத்தகத்தைத் தந்தார். சிறுகதைகளின் தொகுப்பு அது. அவன் அதை ஆவலுடன் வாங்கிப் படித்தான். ஒவ்வொரு கதையும் அருமை. எல்லா கதைகளையும் மட மட வென்று படித்து முடித்துவிட்டான். அதைப் படித்ததும் இதுவரை தெரியாத பல செய்திகள் அவனுக்குத் தெரிந்தன.

★ கதாசிரியர் சில கதைகளை முடிவிலிருந்து துவங்கி பின்னோக்கிச் சென்று சம்பவங்களை சொல்லியிருந்தார்.

★ சில கதைகள் நடுவிலிருந்து தொடங்கின...!

★ இன்னும் சில கதைகளிலோ இரண்டு நபர்களின் உரையாடல்களிலிருந்து கதை ஆரம்பமானது.

சில சந்தேகங்களும் எழுந்தன. அவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ள ரியாஸ் மாமாவிடம் சென்றான். அவனைக் கண்டதும் மாமா, ''என்ன ரியாஸ், கதைகளைப் படித்துவிட்டாயா? ஏதாவது சந்தேகம் உள்ளதா?'' - என்று விசாரித்தார்.

ரியாஸ் தான் புரிந்து கொண்டதையும், சந்தேகங்களையும் வெளிப்படையாய். சொன்னான். மாமா அதைக் கேட்டு புன்னகைத்தார். சொன்னார்:

''ரியாஸ், சிறுகதை என்பது -
ஒரு சம்பவம் அல்லது
வரலாற்று நிகழ்ச்சி அல்லது
ஏதாவது காண்பது அல்லது கேட்பது மனதில் ஏற்படுத்தும் பாதிப்பு

— இவற்றை எழுத்தில் வடிப்பது. அது படிப்பவரிடையே தாக்கத்தை உருவாக்கும் விதமாக எழுத வேண்டும். அதை எங்கிருந்து எப்படி ஆரம்பித்தாலும் சரியே!

சிறுகதைக்கு —

★ தலைப்பு
★ ஆரம்பம்
★ சொல்லப்போகும் செய்தி
★ பாத்திரங்களின் நடமாட்டம்
★ முடிவு

— இவை இன்றியமையாதவை. சிறுகதை எழுதுவது கொஞ்சம் சிரமமானது. ஆனால், முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. பயந்துவிடாதே!

ரியாஸ் நன்றாக ஞாபகம் வைத்துக் கொள். சிறுகதை படிப்போரிடையே தாக்கத்தை உருவாக்க வேண்டும். அதே சமயம், அதில் கதாசிரியரின் எந்தக் கருத்துத் திணிப்பும் இருக்கக்கூடாது. கதை இயல்பாய் இருக்க வேண்டும். இந்த விளக்கம் போதும். இனி நீ சிறுகதையை எழுதலாம்; வழக்கம்போல்.''

மாமா சொன்னதையெல்லாம் ரியாஸ் கவனமாக கேட்டுக் கொண்டான். நன்றாக யோசித்து ஒரு சிறுகதையை எழுதலானான்.

★ ★ ★

''அய்யா! என்னைக் காப்பாத்துங்க. காப்பாத்துங்க!'' — என்று அவருடைய கால்களைப் பிடித்துக் கொண்டு சிறுவன் அழுதான்.

செல்வந்தருக்குப் பாவமாய் போய்விட்டது. இரக்கக் குணம் கொண்ட அவர் சிறுவனை எழுப்பி நிறுத்தினார். அதற்குள் ஓடி வந்த முரடனொருவன், சிறுவனின் கையைப் பிடித்துக் கொண்டான். ''ம்... நட... அறிவு கெட்டவனே! வா உன்னை வீட்டில் கவனித்துக் கொள்கிறேன்!'' — என்று கூச்சலிட்டான்.

சிறுவன் தன் தம்பி என்று சொல்லி முரடன் அவனை இழுத்துச் சென்றான்.

செல்வந்தரும் மற்றவர்களும் அவர்கள் போவதையே பார்த்தவாறு நின்றார்கள்.

★ ★ ★

ரியாஸ் கதையை எழுதி முடித்தான். மாமாவிடம் காட்டினான். அது அவருக்குப் பிடிக்கவில்லை போலும்! முகம் சுளித்தார்.

''ரியாஸ், சிறுகதை என்பது படிப்போருக்கு சில படிப்பினைகள் தர வேண்டும். அதுவும் குறிப்பாக

★ படிப்பவருக்கு நல்லதைப் போதித்து,

★ தீமையிலிருந்து விலகச் செய்வதே

— சிறந்த சிறுகதையாகும்!'' என்று அறிவுறுத்தினார்.

ரியாஸ் மறுபடியும் வேறொரு கதையை எழுதத் தொடங்கினான்.


(தொடரும்)

**இறைவனுடன் தொடர்பு என்பது என்ன? மனிதனின் வாழ்வும் மரணமும் வழிபாடுகளும் தியாகங்களும் இறைவன் ஒருவனுக்காக மட்டுமே இருக்க வேண்டும்.**

படிப்பகம்

www.padippakam.com

# THE QUR'AN MADE EASY




# The Qu'ran in Plain English

**FOR CHILDREN AND YOUNG PEOPLE**

Part 30

(Surahs 78 - 114)

**Iman Torres - Al Haneef**

**The Qu'ran in Plain English** is the first attempt to simplify the meaning of the Qu'ran for children, young people and adults, and enable them to gain an understanding of God's final message for all times and all places, as revealed to the Prophet Muhammad *(peace and blessings be upon him).*

Rendered into contemporary, highly readable English and supplemented with many explanatory notes and a glossary.

**The Qu'ran in Plain English is also ideal as a textbook for English Medium Schools.**

Pages 240 April 1997 ISBN 81 232 0113 3

Paperback IRS 90.00

**No V.P.P. - Postal charges extra**

**Order your copy from:**

**ISLAMIC FOUNDATION TRUST (IFT)**

78, PERAMBUR HIGH ROAD,

CHENNAI - 600 012

PH: 642 4401, 642 61 81, 642 11 01

FAX: 4835120

படிப்பகம்

www.padippakam.com

UNDER LICENCE No. TN/MS(N)/WPP-93 LICENCED TO POST WITHOUT PREPAYMENT
Regd No. TN/MS(N) 513 RNI. No. F-33723/81 SAMARASAM 1-15 MAY '97


# DIAMOND Group of Companies

## DIAMOND PUBLICITIES (P) LTD.
in outdoor Advertising (Since 1966)

Leading Outdoor Advertisers, having, excellent hoarding sites in Madras, Bangalore and all over Tamil Nadu.

Exclusive rights to display on the Flood Light Towers in the Cricket Stadium in Bangalore City.

Display of Kiosks on lamp posts in Main Roads in Madras City.

## VINAR PRECISION PRODUCTS (P) LTD.
In Engineering (Since 1984)

Manufacturer of Precision Products, Auto Componments and Springs.

## DIAMOND CLOTHING (P) LTD.
In Textile Processing (Since 1979)

Experts in Brushing, Peaching and Calendering of Fabrics, meeting the stringent export standards; Factories at both Madras and Bangalore.

## DIAMOND AGENCIES
In Distribution (Since 1994)

Sole Distributors of V-GUARD

Stabilizers, Clocks, Time Pieces, Mono Block Pumps, etc. for Madras City and Chengleput District.

**Registered Office**
Diamond Towers
638, Anna Salai
Chennai - 600 006.
Ph : 8223827

**Central Office**
Rasheed Mansion
622, Anna Salai
Chennai - 600 006.
Ph : 8221717 - 8221818
8270939

Fax : 044-8227272

**Head Office**
Diamond House
11, Primrose Road
Bangalore - 560 025.
Ph : 5589666 - 5589777
5589888
Fax : 080-5550789

E-mail : Diamond @ giasmd01.vsnl.net.in

**Factories :**

"Hajara Estate"
No.3, Balaji Nagar
Ekkattuthangal
Chennai - 600 097.
Ph : 234255 - 2344222

"Bukhari Estate"
103/2, Timber Yard Layout
1st Main, 5th Cross
Off Mysore Road
Bangalore - 560 026.
Ph : 606069 - 607927

Vinar Precision Products
Bangalore.
Ph : 3384714

*Branches :* Coimbatore • Tirupur • Madurai

**OFFER :**

We offer attractive rentals for errecting hoardings in Private & Trust Properties.

Mosque Authorities, Trustees, Private Landowners having property on road side or at prime locations throughout Tamilnadu may please contact us.


படிப்பகம்

Registered as a Newspaper in Sri Lanka